Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 073 | ஞாயிற்றுக்கிழமை | தை 25 ஆம் நாள் 07 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16+24 விலை : ரூ.40

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி'

# பேரெழுச்சியுடன் பேரணி இன்று நிறைவு




''எங்கள் உடல்களை எரிக்காதே''
பேரணியில் முஸ்லிம் சிறுவன் தாங்கியிருந்த பதாகை.

யாழ்ப்பாணம், பெப்ரவரி 7

தமிழ் பேசும் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை முன்னிறுத்தி அம்பாறை மாவட்டத்தின் பொத்துவிலில் ஆரம்பித்த பேரணி யாழ்ப்பாணம் பொலிகண்டியில் இன்று மாலை நிறைவடையவுள்ளது. 15

- பல்லாயிரக்கணக்கானோர் அணிதிரள்வர்
- கிலோ மீற்றர் கணக்கில் நீளும் பேரணி
- மோட்டார் சைக்கிள்களுடன் இளைஞர்கள் தயார்
- உபசரணை ஏற்பாடுகளிலும் மக்கள் மும்முரம்

## சா/தர செயன்முறை பரீட்சைகள் இரத்து!

கொழும்பு, பெப். 7

2020ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கான செயன்முறைப் பரீட்சைகள் இரத்துச் செய் 15

## பேரணியில் அமைச்சர் 'பந்துலவும்'

மன்னார், பெப். 7

'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி' பேரணியில் கலந்து கொண்டுள்ளார் என அமைச்சர் பந்துல 15

## கவனவீர்ப்பு பதாகைகளை அகற்றிய பொலிஸ்

யாழ்ப்பாணம், பெப். 7

'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' பேரணி தொடர்பான சுவரொட்டிகள், பதாகைகள் என்பன அச்சுவேலிப் பொலிஸாரால் நேற்று அகற்றப்பட்டுள்ளன. 15

## சிங்கள – பௌத்தர்களை சீற்றமடையச் செய்யாதீர்!!

*தமிழ் – முஸ்லிம் மக்களை மிரட்டுகிறார் சரத் வீரசேகர*

கொழும்பு, பெப். 7

சிங்கள – பௌத்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களால் பேரணியில் கோசங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. இது சிங்கள மக்களை சீற்றம 15



## உரிமைக் கோஷங்களால் அதிர்ந்தது வன்னிமண்

*தன்னெழுச்சியாக அலையென திரளும் தமிழ் பேசும் மக்கள்*

கிளிநொச்சி, பெப். 7

'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி' பேரெழுச்சிப் பேரணி நேற்றிரவு கிளிநொச்சியை வந்தடைந்தது. இன்று காலை அங்கிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கவுள்ளது. தமிழ்பேசும் மக்கள்மீதான 15

## 'இராணுவமே வெளியேறு'



'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி' பேரணி மன்னாரில் சென்று கொண்டிருந்தபோது இராணுவ வாகனம் எதிரில் வந்தது. பேரணியில் கலந்து கொண்டவர்கள் 'இராணுவமே வெளியேறு' என்று உரக்கக் கத்தினர். (ஓ,213)

## தமிழ் – முஸ்லிம்களின் உறவுக்கு பாலமாக அமைந்துள்ள பேரணி

**நீதியை வழங்குவது ஐ.நாவின் கடமை ரிஷாத் பதியுதீன் சுட்டிக்காட்டு**

யாழ்ப்பாணம், பெப். 7

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான நீதிக்கான எழுச்சிப் பேரணி தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவுக்குப் பாலமாக 15

## பேரணி ஒன்றுக்கும் உதவாத வேலையாம்

*எள்ளிநகையாடுகிறார் டக்ளஸ்*

யாழ்ப்பாணம், பெப். 7

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டம் அரசுக்குச் சார்பான போராட்டம். இதனால் 15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,

செலான் இ.க்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி

Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை

# விழிப்புணர்வுப் பரப்புரை நேற்று துரித கதியில்!



யாழ்ப்பாணம், பெப். 7
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்துக்கு ஆதரவைத் திரட்டும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பரவலாக முன்னெடுக்கப்பட்டன.

சிவில் சமூக அமைப்புக்களின் ஏற்பாட்டில் பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரைக்குமான பேரணி ஆரம்பிக்கப்பட்டு இன்று யாழ்ப்பாணத்தில் நிறைவுபெற இருக்கின்ற நிலையில் மக்களைத் திரட்டும் வகையில் இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மக்கள் அதிகம் ஒன்றுகூடும் பகுதிகளிலேயே இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் , மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், தமிழரசுக் கட்சியின் மகளிர் அணி முக்கியஸ்தர் சசிகலா ரவிராஜ், சுன்னாகம் பிரதேச சபை தவிசாளர் கு. தர்சன் உள்ளிட்ட பலரும் இந்த விழிப்பு ணர்வு நடவடிக்கைகளில் கலந்துகொண்டனர். (ம-20)

## தீயில் எரிந்த பெண் நேற்று உயிரிழப்பு!

வவுனியா, பெப். 7
வவுனியா தெற்கிலுப்பைக்குளம் பகுதியில் தீயில் எரிந்து படுகாயமடைந்த பெண் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

37 வயதுடைய குறித்த பெண் கடந்த வாரம் தனது வீட்டில் தீயில் எரிவதை அவதானித்த அயலவர்கள் அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். அதிகமான எரிகாயங்களுடன் அவர் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்தார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி கிஷோர் மேற்கொண்டார். (ம-110)

## பெறாமகளைத் துஷ்பிரயோகம் செய்தவருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், பெப். 7
பெறாமகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சிறியதந்தையை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டது. அச்செழுப் பகுதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சிறுமி இருமாத கர்ப்பிணியாக உள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-25)

# நீதிக்கான போராட்டத்துடன் உணவுத் தவிர்ப்பும் நிறைவு!

## உறவுகள் தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப். 7
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நீதிக்கான போராட்டத்துடன் நிறைவுக்கு வருகிறது என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் தெரிவித்தனர். சிறுபான்மையின மக்கள் அரசால் அடக்குமுறைக்கு உள்ளாவதை எதிர்த்து தமிழ் உணர்வாளர்கள் பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரையான மாபெரும் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அந்தப் போராட்டம் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகியது. அதனுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து தருமாறு வலியுறுத்தி வீதியில் போராடும் உறவுகளும், தமக்கான நீதிகோரி சுழற்சி முறையான உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இந்தப் போராட்டமே நீதிக்கான போராட்டத்துடன் நிறைவடையும் என்று உறவுகள் தெரிவித்துள்ளனர்.

'கிளிநொச்சியிருந்து பொலிகண்டி நோக்கி இன்று புறப்படும் நடைபவனியில் கிளிநொச்சியைச் சேர்ந்த உறவுகளும் இணைந்து செல்லவுள்ளனர். பொலிகண்டியில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள பொதுக் கூட்ட நிறைவின் பின் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் உணவுத் தவிர்ப்புப் போராட்டமும் முடிவுக்கு வரும்' என்று வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி தெரிவித்தார். (ப-ரி1,12)











பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணி நேற்று வவுனியாவில் ஆரம்பித்து மன்னாரை வந்தடைந்தது. இன, மத வேறுபாடுகள் இல்லாம் பல்லாயிரம் மக்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு வீதி அபிவிருத்தி வேலைகளில் முன் அனுபவம் உள்ள பின்வரும் வேலையாட்கள் தேவை.

Supervisor, Technical Officer, JCB Driver, Excavator driver, Road Roller driver.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

**075 975 9214**


# ரவி, அலோசியசுக்கு பிணை

கொழும்பு, பெப்.7

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பேப்ப சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியது.

அவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்ட லஞ்ச வழக்கு தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே இந்தப் பிணை வழங்கப்பட்டுள்ளது. குறித்த இருவரையும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும், தலா 50 லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையிலும் செல்வதற்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரத்தில், பேசுபொருளான மொனார்க் தொடர்மாடி சொகுசு குடியிருப்பை மையப்படுத்தி, லஞ்ச ஊழல் விசாரணைச் சட்டத்தின் 19 (உ) ஆம் பிரிவின் கீழ் முதலாம், 2 ஆம் பிரதிவாதிகளாக முறையே ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜுன அலோசியஸ் ஆகியோர் பெயரிடப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 05 . 1934 | இறப்பு 05 . 02 . 2021



### சபாபதி இரத்தினம்

வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி இரத்தினம் நேற்றுமுன்தினம் (05.02.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - தில்லாத்தை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - தங்கமுத்து தம்பதியரின் மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா இராசரெட்ணம், அன்னலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருந்தவராணி (ஆசிரியர் - வவுனியா) வாசுகி, கிருஷ்ணகுமார் (ஆஞ்சநேயர் றேடர்ஸ், வங்களாவடி), கோமதி, விஜிதா மற்றும் காலஞ்சென்ற செந்தூரன் ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற யோகலிங்கம் மற்றும் விசிதாம்பாள் (ஆசிரியர் - கோப்பாய் நாவலர் த. வித்தியாலயம்), திருநீலகண்டன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவன் (ஆசிரியர்-கண்டி), சரவணன் (மாணவன்-யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடம்), ஜீவகரன், சர்வஜன், விசாகன், பவீனா, சாம்பவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சபோசன் (மகன்)
078 968 8877


## தொழில்சார் கற்கைகள் நிறுவனம் திருநெல்வேலி - யாழ்ப்பாணம்

**தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு மற்றும் பங்குபற்றுநர்களுக்கான சான்றிதழ் வழங்கல்**

க.பொ.த (உ/த - 2020) பரீட்சைகளிற்கு தோற்றி பெறுபேறுகளை எதிர்பார்க்கும் மாணவர்கள் மற்றும் ஆர்வமுடையோருக்கான மேற்படி நிகழ்வானது இடம்பெறவுள்ளது.

திகதி : 14.02.2021, ஞாயிற்றுக்கிழமை
நேரம் : 9.00 AM - 11.30 AM
இடம் : நிறுவன கேட்போர் கூடம்

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் / ஆர்வ முடையவர்கள் 13.02.2021 க்கு முன்பாக பதிவு செய்வது அவசியமாகும். அல்லது 14.02.2021 சமூகமளித்தல் வேண்டும்.

● **பதிவுக் கட்டணம் இலவசம்.**

குறிப்பு : க.பொ.த (சா/த), உ/தரம் - 1998, 1999 பரீட்சையில் பெறுபேறு பெற்ற மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.

இணைப்பாளர்
தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
திருநெல்வேலி.

T.P: 077 602 1794
அல்லது
076 685 2529

## தேவை

சாரதிகள், மில்வேலை தெரிந்தவர்கள், தொழிலாளிகள் தேவை.
104, மாப்பியன் மில் லேன், சுதுமலை, மானிப்பாய்.
077 772 2215

## பட்டா வாகனம் விற்பனைக்கு

Full Body Delivery Van (China)
விற்பனைக்கு, விலை 975,000/=
தொடர்பு: 077 600 7775

## வேலையாட்கள் தேவை

✓ அப்பம், கொத்து தயாரிப்பாளர்
✓ உணவு பரிமாறுபவர் (ஆண், பெண்) உடனடியாக தேவை.

076 000 1695, 077 844 3590

## வீடு வாடகைக்கு உண்டு

No.82, சீனிவாசகம் றோட், கொட்டடியில் வீடு வாடகைக்கு உண்டு. 3 அறை, 1 சமயலறை, 1 கோல், பாத்றூம், வாடகை 25000/-
வாகனதரிப்பிட வசதி உண்டு.
பார்வையிடும் நேரம் : 10 AM - 3PM
075 4614452


## அந்தியேட்டி வீட்டுகிருத்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்

தோற்றம் 20 . 10 . 1962 | மறைவு 09 . 01 . 2021



### அமரர் திரு. ந.கேசவராஜ்
### (ஈழும் சினிமா இயக்குனர்)

கடந்த 09.01.2021 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப தலைவரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (08.02.2021) காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


எமது துயரில் கலந்துகொண்டு தொலைபேசியூடாகவும் இரங்கல் நிகழ்வூடாகவும் மற்றும் நேரில் வந்தும் ஆறுதல் கூறியவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.31, மதவடி லேன்,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 06 . 1955 | இறப்பு 06 . 02 . 2021



### சண்முகம் பாலசுந்தரம்

அம்பன் குடத்தனையை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பாலசுந்தரம் அவர்கள் 06.02.2021 சனிக்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் சின்னமணி தம்பதியரின் மூத்த மகனும், கிரிதாவின் அன்புக் கணவரும், லஜிதா (கனடா) பிரகாஸ் (பிரான்ஸ்) சிவதாஸ் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், நகுலராசாவின் சகலனும், காலஞ்சென்ற நகுலேஸ்வரி மற்றும் இலங்கநாதன் ஆகியோரின் மைத்துனரும், தேவகாஸ் (லண்டன்) அவர்களின் சிறிய தந்தையும், கார்த்தீபன் (கனடா), கிரிஷாந்தி (பிரான்ஸ்), குகர்ஜினி, அனுசியா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், அபிரன் (கனடா), றேஜிகன் (கனடா), துருவ்கரிகாலன் (இலண்டன்) கீர்த்திக் கரிகாலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், சின்னம்மா, செல்லம்மா, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
0777 361 932
077 608 6237

## விற்பனையாளர் தேவை

கோண்டாவிலில் இயங்கும் பான்சிக் கடைக்கு விற்பனையாளர் தேவை.

தொடர்புகளுக்கு: **077 3416 374**

## இரு காணிகள் விற்பனைக்கு

சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியில், கண்டி வீதி, நகரசபை, புகையிரத நிலையம் இவற்றுக்கு அண்மையில் திருமண மண்டபம், தொடர்மாடி வீடு, ஹோட்டல், சுப்பர்மார்க்கற் அமைக்கக் கூடிய நன்னீர்க் கிணறு, இருவழிப்பாதையுடன் கூடிய ஐந்து பரப்பு காணியும், இத்தாவில் கண்டி வீதியோரம் இருபது பரப்பு மேட்டுக் காணி யும் விற்பனைக்குள்ளது.

தொடர்புகளுக்கு:

**076 863 7930**

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள அலுமாரி, ஷோகேஸ் (முதிரை) மற்றும் சாய் மனை கதிரை விற்பனைக்குண்டு.

**074 006 6959, 076 680 1276**

## காணி தேவை

கைதடிக்கும், சுண்டுக்குளிக்கும் இடையில், கொய்யாத் தோட்டம் மற்றும் மணியம் தோட்ட பகுதிகளிலும் 1 1/2 பரப்பு-2 1/2 பரப்புக் காணி தேவை.

தரகர் தேவை இல்லை.

தொடர்புகளுக்கு: **074 146 5721**

## தளபாடம் விற்பனைக்கு

Software Company ஒன்றில் பயன்படுத்திய நல்ல நிலையில் உள்ள அலுவலகத் தளபாடங்கள் உடன் விற்பனைக்கு. 50% இற்கு மேல் விலைக்கழிவுடன்

**074 079 6464**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 44 வயது சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கவில்லை.

தொடர்பு:

**070 377 7937**

## மருதாணி/ மருதோண்டி

மருதாணி இலை தேவை. கொள்வனவு செய்யப்படுகிறது. நேரடியாக கொண்டு வந்தும் தரலாம். எங்களால் வந்து ஆய்ந்து எடுத்துக்கொள்ள முடியும். நியாயமான விலை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**0777367155, 0760935077, 0764024222**

## விற்பனைக்கு

மருந்தக தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

Aluminium tracks, Aluminium Showcase

**077 740 6300**

## அலுவலக வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் Courier நிறுவனம் ஒன்றிற்கு கிளை முகாமையாளர் / உதவியாளர் தேவை.

வயது எல்லை : 21 - 35 வரை

**Email:hr@gtve.com**

**T.P: 0777512299/0766908967**

## மரண அறிவித்தல்

06-02-2021 சனிக்கிழமை நேற்றையதினம் 18ம் பக்கத்தில் பிரசுரமாகிய **திருமதி இந்திரகுமார் சகுந்தலா** அவர்களின் மரண அறிவித்தலில் அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி - பாறுபதி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் அழகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் என திருத்தி வாசிக்கவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி மட்டுவில் தெற்கில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு:

**071 129 8464**

## நாகபூஷணி திருமண சேவை

**பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்**

மணமகள்களுக்கு மட்டும் (06.02.2021 முதல் 09.02.2021 வரை)

உள்நாட்டு, வெளிநாட்டு மண மக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.

**இல. 5, ஐந்தாம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**021 222 9306, 077 138 7596**

## டோகா-கட்டார் வேலைவாய்ப்பு

| இல. | தொழில் வர்க்கம் | வெற்றிடங்கள் | அடிப்படைச் சம்பளம் (கட்டார் றியாலில்) | உணவுப் படி (கட்டார் றியாலில்) |
|---|---|---|---|---|
| 01 | சாரதி (கட்டார் நாட்டு சாரதி அனுமதிப் பத்திரத்துடன்) | 05 | 1500 றியால் | 300 றியால் |
| 02 | மேசன் (முன் அனுபவத்துடன்) | 15 | 1300 | 300 |
| 03 | மேசன் (முதல் முறை) | 10 | 1100 | 300 |
| 04 | பூரணப்படுத்தும் தச்சுத் தொழிலாளி (முன்அனுபவத்துடன்) | 20 | 1400 | 300 |
| 05 | பூரணப்படுத்தும் தச்சுத் தொழிலாளி (முதல்முறை) | 10 | 1200 | 300 |
| 06 | வர்ணம் பூசுபவர் (முன் அனுபவத்துடன்) | 15 | 1200 | 300 |
| 07 | வர்ணம் பூசுபவர் (முதல் முறை) | 05 | 1100 | 300 |
| 08 | கட்டட நிர்மான கூலியாள் | 20 | 1000 | 300 |
| 09 | MEP உதவியாள் | 20 | 1000 | 300 |
| 10 | பாரவூர்திச் சாரதி (கட்டார் நாட்டு சாரதி அனுமதிப் பத்திரத்துடன்) | 10 | 2100 | 300 |
| 11 | இலகுரக வாகன திருத்துனர் | 10 | 1700 | 300 |
| 12 | ஓட்டோ வர்ணம் பூசுபவர் | 15 | 1700 | 300 |
| 13 | உள்ளக சுத்திகரிப்பாளர் | 30 | 1000 | 300 |

விண்ணப்ப அழைப்பாளர்களுக்கு மட்டும், விண்ணப்பக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. கடவுச் சீட்டைக் கையேற்கமாட்டோம்.

(கட்டார் றியால் பெறுமதி - 1 றியால் - ரூபா 52.32) பணப்பெறுமதி மாற்றத்துக்கு உள்ளாகத்தக்கது.

- ✓தங்குமிட வசதி மற்றும் வைத்திய வசதிகள் நிறுவனத்தால் வழங்கப்படும்.
- ✓உணவுக்கான படி மேற்குறிப்பிட்ட விகிதத்தில் வழங்கப்படும்.
- ✓வேலை நேரம் - நாளொன்றுக்கு 8 மணித்தியாலங்கள் வாரமொன்றில் 48 மணித்தியால நேரம்
- ✓தகுதிகாண் காலமாக 3 மாதங்களுடன் இரு ஆண்டுகளுக்கான ஒப்பந்தம்.
- ✓இரண்டு ஆண்டுகள் சேவையின் பின்னர் நாடு திரும்புவதற்கான விமானப் பயணச் சீட்டு நிறுவனத்தின் செலவில் வழங்கப்படும்.

**சைனாஸ் றவல்ஸ் அன்ட் டூர்ஸ்** (தொழில் அனுமதிப்பத்திர இல.1004)

**இல.19, விளையாட்டு மைதான வீதி, ஒபேசேகரபுர, ராஜகிரிய.**

**0112875778 / 070 385 6940 / 077 990 7911**

**cv.sainastravels@gmail.com**

## வேலையாட்கள் தேவை

கடையில் வேலை செய்யக்கூடிய படித்த அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

**தொடர்பு:076 033 3034**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.

ஒரு சதுர அடி- 45ரூபாய்

தொடர்புகளுக்கு:- **077 334 1281**

## Spoken English & சிங்களம்

அடிப்படையிலிருந்து மாணவரின் தன்மைக்கு ஏற்ப பூரண தமிழ் விளக்கத்துடன் 100% பேச்சுப் பயிற்சியோடு புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப் படுகின்றது.

**IBS CAMPAS - யாழ் அச்சுவேலி.**

சான்றிதழ் வழங்கப்படும். **Lect.By-SKB-மனோகரன்**

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் Fancy கடைக்கு ஆண் பணியாளர்கள் தேவை.

**077 210 5286**

## உணவு விநியோகம்

யாழ் நகரில் மதிய, இரவு நேர உணவு சிற்றுண்டி வகைகள் செய்து கொடுக்கப் படும். வீட்டிற்கும் கொண்டுவந்து தரப் படும். விசேஷ வைபவங்களுக்கு உரிய நேரத்தில் சகல விதமான உணவு வகைகளும் கிடைக்கும்.

**கொழும்பு ரெஸ்ரோறன்ட்**

இல. 123, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**021 221 4602 / 076 9278 971**

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை.

**AAA Gold Center**

**076 568 4346**

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

இந்தியன் BAJAJ - 125 WIND மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

**077 614 6434**

## மணமகள் தேவை

கனடாவில் நிரந்தரக் குடியுரிமையுடைய, யாழ். கத்தோலிக்க உயர் கௌரவ குடும்பம். 42 வயதான மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புக்கு:

**0014169041975** (வைபர் & வட்ஸப்)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1974 ஆம் ஆண்டு பிறந்த கார்த்திகை 2ம் பாதம் 5ல் செவ்வாய் உடைய சுவிஸில் நிரந்தர வதிவிட உரிமை உடைய விவாகரத்து பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:- **074 1915 106**

## வேலையாட்கள் தேவை

மருதனார்மடம் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Phone Shopக்கு வேலையாள் தேவை (ஆண்).

தொடர்பு:- **077 115 3412**

## வான் விற்பனைக்கு

NP GQ-xxxx தொடரிலக்கமுடைய TOWNACE (NOAH-CR41) வான் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- **074 0869532**

## IELTS- AI

இப்பொழுது மீசாலையில் IELTS AI (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கானது) அனுபவம் வாய்ந்த (UK Trainee) ஆசிரியரினால் கற்பிக்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு:

**077 972 3202**

**077 323 3200**

**A9 Road, Aigy Kadai, Meesalai**

## ரெயிலர் தேவை

அரியாலையில் இருக்கும் தையல் கடைக்கு ஆண், பெண் ரெயிலர் தேவை.

உடன் தொடர்பு கொள்ளவும்:

**077 938 4809, 076 6694878**

## வீடு, காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு ஆடியபாதம் வீதியில் ஞானபண்டித பாடசாலைக்கு அண்மையில் $1\frac{1}{2}$ பரப்பில் அமைந்த வடக்கு வாசல் வீடும், ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 5 பரப்பு காணியும்.

தொடர்பு: **077 601 1135**

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

### பிரிவு-31

க.பொ.த (உ/த)- 2020 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான குறுகிய கால பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

★ English Courses:
Foundation Diploma /
Diploma in English / Spoken English

★ Computer Courses:
Foundation Diploma / Diploma in ICT / Ms-Office/ Website Development / Programming.

**★காலம் : 3 மாதங்கள் ★சான்றிதழ்**
**★ அடிப்படையிலிருந்து**

★ SINHALA **சிங்கள வகுப்புக்கள்:**
பிரபல சிங்கள விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
**சனி, ஞாயிறு - 11.00 - 12.30**
★ சான்றிதழ் ★ அடிப்படையிலிருந்து
★ எழுத்து, பேச்சு கற்பிக்கப்படும்.

★ IELTS / LIFE SKILLS - A1,B1
பிரபல விரிவுரையாளரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
**சனி, ஞாயிறு 3.00 - 5.00 PM**

- Band Score : 7.5
- 30% Discount
- Sample papers/Mock Exam
- Smart Class room

**ஆரம்பம்**

**11.02.2021, 10.00 AM**

**IPS** பல்கலைக்கழகம் அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**T.P: 021 4640229**
**076 685 2529**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1977 உத்திரட்டாதி மீன ராசி, கி.பா $17\frac{1}{4}$ சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. தரகரும் தொடர்பு கொள்ளலாம்.

நேரடித்தொடர்பிற்கு

**076 449 6275**

## வேலைக்கு ஆட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் மிக்சர் தொழிற்சாலைக்கு ஆண்/பெண் இருபாலாரும் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **077 546 0028**

## பணிநிலை வேண்டுகை

யாழ். நகரில் இயங்கி வரும் மொத்த வியாபார நிறுவனத்திற்கு வாகனத்தில் பொருட்கள் கொண்டு சென்று விநியோகிப்பதற்கு விநியோக பையன்கள் (Delivery Boys) தேவை. விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை எதிர்வரும் 15.02.2021 இற்கு முன்பாக கிடைக்க கூடியவாறு கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**DSI மொத்த விற்பனை நிலையம்**


154, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## வேலையாள் தேவை

இலத்திரனியல் உபகரணங்கள் (Power Tools) பழுதுபார்க்கக் கூடிய தொழில்நுட்பவியலாளர்கள், யாழ்ப்பாணத்துக்கு தேவைப்படுகின்றனர். 5 வருட நல்ல அனுபவம் உள்ளவர்களுக்கு சிறந்த சம்பளம் வழங்கப்படும். விரும்புவோர் தங்கள் சுயவிபரக் கோவையை மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

mahesandinesh8@gmail.com



கவலைகள் அற்ற வாழ்க்கைக்கு
HNB அஷுரன்ஸ் அறிமுகம் செய்யும்
சுப்ரீம்ஹெல்த் மெக்ஸ்



வருடாந்தம் ரூ.50 மில்லியன் வரையான பெறுமதியான காப்புறுதி
மற்றும் உலகளாவிய கட்டணமின்றிய வைத்தியசாலை அனுமதி

விபரங்களுக்கு 011 4 384 384 ஊடாக அழையுங்கள்

HNB அஷ்யூரன்ஸ் PLC (PQ 108)
3 வது மாடி, ஐஸ்லேண்ட் பிஸ்னஸ் சென்டர்,
இல. 30, ஸ்ரீ உத்தரானந்த மாவத்தை, கொழும்பு 03.
www.hnbassurance.com
தொலைபேசி: 0114 384 384
நியதி நிபந்தனைகள் உண்டு

HNB ASSURANCE
SupremeHealth Max



# 18 கிலோ கஞ்சா கடத்தல்: வவுனியாவில் இருவர் கைது

வவுனியா, பெப். 7

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு கடத்தப்பட்ட சுமார் 1.8 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாப் பொதிகளை வவுனியா விஷேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர். அவற்றைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பேரை கைது செய்து தங்களிடம் ஒப்படைத்துள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் ஈரப்பெரியகுளம் குருந்துப்பிட்டிய பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஹெப்பற்றிகொல்லாவ விஷேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது, சந்தேக நபர்கள் பயணித்த காரை சோதனைக்கு உட்படுத்தியபோது, பொதிசெய்து வைக்கப்பட்டிருந்த 18 கிலோ கிராம் கஞ்சா பொதிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட இருவரும் கொழும்பு தெமட்டகொடவில் வசிக்கும் 43 மற்றும் 48 வயதுடையவர்கள். அவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-110)

# அடிமட்ட அரசியல் இயந்திரத்தை பலப்படுத்துகின்றது சஜித் அணி

கொழும்பு, பெப்.7

ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ்மட்ட அரசியல் இயந்திரத்தை பலப்படுத்துவதற்காக தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக நாளை திங்கட்கிழமை 100 தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வால் இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பின் பிரகாரம் முதலாவது மத்தியசெயற்குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது செயற்குழுவுக்கும், இதர முக்கிய பதவிகளுக்கும் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன், தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான புதிய கூட்டணிக்கான யாப்பும் இறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது.

(ய-44)

# சம்பிக்கவுக்கு பிரதித் தலைவர் பதவி? ஐ. ம. ச. கட்சிக்குள் எதிர்ப்பு

கொழும்பு, பெப்.7

சம்பிக்க ரணவக்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் உயர்பதவியொன்றை வழங்குவதற்கு அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் போர்க்கொடி தூக்கியுள்ளனர் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது மத்திய செயற்குழுவில் அவர் பங்கேற்றிருந்தாலும் அக்கட்சியின் உறுப்புரிமையை சம்பிக்க ரணவக்க இன்னும் பெறவில்லை. அவருக்கு வழங்கப்படவுள்ள பதவி தொடர்பான அறிவிப்பு உறுதியாக வெளியான பின்னரே இணைவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் சம்பிக்கவுக்கு பிரதித் தலைவர் பதவியை வழங்குவது தொடர்பில் சஜித் அணி பரீசிலித்து வருகின்றது. இதற்கு அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதனால் தற்போது இழுபறி நிலை தொடர்கின்றது.

இதேவேளை, சம்பிக்க ரணவக்கவால் '43' என்ற அரசியல் இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் சஜித் தரப்பை பயம் கொள்ள வைத்துள்ளது. (ய-44)

# ரஞ்சனின் உறுப்புரிமை
## 12ஆம் திகதிவரை முடிவில்லை

கொழும்பு,பெப்.7

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை சம்பந்தமாக, 12 ஆம் திகதி வரை தீர்மானம் மேற்கொள்ள வேண்டாம் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

தனது நாடாளுமன்ற உறுப்புரிமை நீக்கப்படுவதை தடுக்குமாறு கோரி ரஞ்சன் ராமநாயக்காவால் தாக்கல் செய்யப்பட்ட மனு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது. (ஐ-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எரியும் பிரச்சினைகளால் புகையும் நாடு

ஒட்டுமொத்தச் சிறுபான்மைச் சமூகத்தவர்களின் வாழ்வியல், அரசியல் மற்றும் சுயநிர்ணய உரிமையைத் தமது மேலாதிக்க அதிகார வலுவைப் பயன்படுத்தி உதாசீனம் செய்துவிட்டு, இந்த நாட்டை ஒரு தனிச்சிங்களப் பௌத்த பேரரசாக மாற்றும் கனவுடன் ராஜபக்சக்கள் கடந்த தேர்தலில் வென்றனர்.

அந்தப் பெருவெற்றியின் பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அடுத்த சில தசாப்தங்களுக்குத் தங்களை எவராலும் அசைக்கவே முடியாது என்ற கர்வத்துடன் அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளத் தொடங்கினர். இருந்தும் அவர்கள் வருகையை மீண்டும் ஓர் இருண்ட யுகத்தின் ஆரம்பத்துக்கான கட்டியம் கூறலாகவே மனிதநேயச் சிந்தனையாளர்கள் நோக்கினர். ஒருவித அச்ச உணர்வோடு கூடிய கருத்துக்களை வெளியிட்டனர்.

மக்கள் தேர்தல் மூலம் வழங்கிய ஆதரவுப் பலத்தை தமக்கான அதிகாரப் பலமாகக் கருதிக் கொண்டு அதற்கேற்ப சட்டங்களையும் மாற்றினர். பௌத்த முகமூடிகளுடன் சிங்களப் பேரினவாதம் மேற்கொண்ட அனைத்துச் செயற்பாடுகளும் ஓர் அச்சமூட்டும் இராணுவ ஆட்சிக்கான மாற்றத்தை இலக்கு வைத்ததாகவே இருந்தன.

இலங்கையின் தேர்தல் ஜனநாயக முறைமையானது, மத அடிப்படைவாதச் சிந்தனைப் பொறிக்குள் சிக்கியதோடு மட்டுமல்லாது எவராலும் எதிர்பார்த்திருக்க முடியாத பேரினவாத சர்வாதிகாரத்தை நோக்கியே விரையத் தொடங்கியது.

வலுவற்ற எதிர்க்கட்சியைக் கொண்ட ஜனநாயகப் பொறிமுறை என்பது வலுவான சர்வாதிகாரத்தை நோக்கியே நகரும் என்ற தத்துவத்தை உணர வைத்தது. அப்போதுதான் சிறுபான்மை இனத்தவர் தம்மை அடக்கி அழிக்க முனையும் இரும்புக் கரங்களின் நகர்வை உணர்ந்து கொண்டனர்.

சிறுபான்மை இனத்தவரைப் பிரித்தாளுவதன் மூலம் அவர்களின் சுதந்திர இருப்புக்கான செயலூக்க முனைப்புக்களைப் பலவீனப்படுத்தி அழிக்கும் காலனித்துவ ஆட்சியாளர்களின் மூலோபாயத்தைப் பேரினவாதிகளும் அடியொற்றத் தொடங்கினர். அந்தச் செயலானது எந்த மதத்தை, எந்த இனத்தை, எந்தக் கலாசாரத்தைக் கொண்டவரானாலும் சிறுபான்மை இனத்தவர் யாவரும் ஒரே இனத்தவர் தான் என்றே பேரினவாதிகள் கருதத்தொடங்கினர். இதன் விளைவாகப் பாதிக்கப்பட்ட சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தோரும் தாம் ஓர் இனமாக இணைவதையே இப்போதைய நெருக்கடியை எதிர்கொள்ளும் வழியாக அறிந்து கொண்டனர்.

இப்படி ஓர் உணர்வு விழிப்புநிலை திடீரென எழுச்சி கொள்ளுமென ஆட்சியாளர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. இவ்விடயத்தில் அரசின் கணக்கும் காலத்தின் கணக்கும் மாறுபட்டதை ஒரு எழுதாத விதியாகவே கருத வேண்டும்.

ஐ.நாவின் மனித உரிமைப் பேரவையில் நிகழவிருக்கும் அமர்வுகளில் இலங்கை குறித்த விவகாரம் அரசுக்கு அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தும் பேசு பொருளாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படப் போகிறது.

இந்த நிலையில் இந்தியா, அமெரிக்கா மற்றும் மேற்குலகுடனான ராஜ்ய உறவுகளில் அரசுக்குத் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனைச் சுலபமாக நகர்த்திக்கொள்ள முடியாத அளவுக்கு முரண்பட்டுள்ள சர்வதேசச் சூழலைச் சமாளிக்க அரசு திணறி வருகிறது. அதேசமயம் தேசம் முழுவதும் போராட்டக் களமாகியுள்ளது. ராஜபக்சக்களின் ஆட்சிக்கு மிக விரைவிலேயே இப்படி அழுத்தமானதொரு சூழ்நிலை உருவாகும் என்பது எவரும் கணித்திராத ஒன்று.


தடைகள் அனைத்தையும் கடந்து அடக்குமுறை அராஜகங்கள் என்பனவற்றைப் புறந்தள்ளி சிறுபான்மை மக்களின் ஒருமித்த உணர்வெழுச்சியானது பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான மக்களின் பேரெழுச்சிப் பேரணியாக இன்று யாழ். மண்ணில் கால்பதிக்கவுள்ளது.

நேற்றுமுன்தினம் மலையக மக்களின் கடையடைப்பு மற்றும் வேலைநிறுத்தப் போராட்டம் மலையகத்தை செயலற்றுப் போகச் செய்துள்ளது. அதிகார வலுவின் முன்னால் மௌனம் காத்து முடங்கிக் கிடந்த மக்களின் விழிப்புணர்ச்சியானது அவர்களின் பின்னால் சிறுபான்மையின அரசியல் தலைவர்களை அணிதிரள வைத்துள்ளது.

இந்த நம்பிக்கையூட்டும் ஒருமித்த கருத்தியல் பலத்தின் அடிப்படையிலான மக்களின் எழுச்சியானது, இன ஒடுக்குமுறைக்கும் இன அழிப்புக்கும் எதிரான பேரெழுச்சியாக சர்வதேசத்துக்கு அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

'சிறைமதில் பொடிபட சிறகினை விரி!
சிதைகளில் உயிர்த்தெழு விதியினை எரி!' என்ற ஒரு கவிஞனின் நெருப்பு வரிகள் இச்சமயத்தில் நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாததொன்றே!

### இன்றைய கருத்தோவியம்




நன்றி - அவந்த ஆட்டிகல

# நீதிக்கான போராட்டத்தில் இணைய டிப்போச் சந்திக்கு வாருங்கள்!

## கூட்டமைப்பின் கிளிநொச்சி அணி அழைப்பு

**கிளிநொச்சி, பெப்.7**

**பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை நடைபெறும் நீதிக்கான போராட்டம் கிளிநொச்சியை வந்தடையும் போது அதை வரவேற்று, ஆதரவு வழங்கி, போராட்டத்துக்கு வலுச் சேர்க்க அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
தொடர்ச்சியாக சிறுபான்மை தமிழ் பேசும் மக்கள் மீது இந்த அரசு திட்டமிட்டு மேற்கொள்ளும் இன அழிப்புக்களைக் கண்டித்து சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒருமித்த ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படும் பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை என்னும் கவனவீர்ப்பு போராட்டம் கடந்த 3 ஆம் திகதி பொத்துவில் பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு மூன்றாவது நாளாக நேற்று வவுனியாவைச் சென்றடைந்தது. இந்தப் போராட்டமானது இன்று காலை 8 மணிக்கு கிளிநொச்சிக்கு வந்தடையவுள்ளது. எனவே குறித்த கவனவீர்ப்புப் போராட்ட அணியை வரவேற்று, ஆதரவு வழங்குவதற்கு கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து தமிழ்த் தேசிய உணர்வுமிக்க மக்களும், கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு வந்து போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம். அத்தோடு இளைஞர், யுவதிகள் மோட்டார் சைக்கிளில் வந்து குறித்த பேரணிக்கு முழுமையான ஆதரவை வழங்குவதோடு மோட்டார் சைக்கிள் பேரணியில் கலந்துகொள்ளுமாறும் அழைக்கின்றோம். கிளிநொச்சி நகர வர்த்தகர்கள் தங்கள் கடைகளைத் திறந்து ஆதரவை வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறோம் - என்றனர். (ஐ-6)



## யாழ்ப்பாணம் வந்த இ.போ.ச. பஸ் மாங்குளத்தில் விபத்து

முல்லைத்தீவு, பெப். 7
காலியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் நேற்று அதிகாலை 3.30 அளவில் கட்டுப்பாட்டை இழந்து வீதியைவிட்டு விலகி விபத்துக்குள்ளாகியது. ஏ-9 வீதியில் மாங்குளம் செல்வபுரம் பகுதியில் விபத்து இடம்பெற்றது. எனினும், எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-இ)

## கொரோனா வைரஸ் உருவாக்கப்படவில்லை

### உலக சுகாதார அமைப்பு மீளத் தெரிவிப்பு

ஜெனிவா, பெப்.7
கொரோனா வைரஸ் ஆய்வுகூடங்களில் உருவாக்கப்படவில்லை. அது வௌவால்களிலிருந்தே உருவாகியது என்று உலக சுகாதார அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஃபடெலா சாய்ப் தெரிவித்துள்ளார். ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுவரை கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் வைரஸ் இயற்கையான விலங்கு மூலத் தோற்றத்தைக் கொண்டுள்ளது. இது பெரும்பாலும் வௌவால்களுடன் தொடர்புடையது. இது உருவாக்கப்பட்ட வைரஸ் அல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)




# கிழக்கு தொல்பொருள் செயலணிக்கு மேலும் ஐந்து சிங்களவர்கள் நியமனம்

**கொழும்பு, பெப்.7**

**கிழக்கு, தொல்பொருள் ஜனாதிபதி செயலணிக்கு மேலும் 5 சிங்களவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சிறுபான்மையினரையும் இந்த செயலணியில் நியமிக்க வேண்டுமென 8 மாதங்களாக விடுக்கப்பட்ட கோரிக்கைளை கோத்தாபய அரசு மீண்டும் புறந்தள்ளியுள்ளது.**

புதிய உறுப்பினர்களாக புத்தசாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, தொல் பொருள் திணைக்களப் பணிப்பாளர் மூத்த பேராசிரியர் அனுர மானதுங்க, காணி ஆணையர் நாயகம் கீர்த்தி கமகே, சிவில் பாதுகாப்பு திணைக்களப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஆர்.டி.நந்தனா சேனதீர மற்றும் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் அசின்சல சேனவிரத்ன ஆகியோர் நியமிக் கப்பட்டுள்ளனர். இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி செயலர் பி.பி. ஜெயசுந்தர வெளியிட்டுள்ளார். ஏற்கனவே அங்கம் வகித்த ஐந்து உறுப்பினர்களில் சிலர் ஓய்வுபெற்றமை மற்றும் இடமாற்றம் பெற்றமை ஆகிய காரணங்களால் புதிய நியமனங்கள் நடைமுறைக்கு வருகின்றது என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் ஜனாதிபதி செயலணி 2020 ஜூன் முதலாம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவில் தமிழ் மற்றும் முஸ்லிம்களையும் இணைக்கும்படி எழுந்த வலியுறுத்தல்களையடுத்து, ஒரு பட்டியலை அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, எஸ்.வியாழேந்திரன் ஆகியோர் சமர்ப்பித்திருந்தனர். அந்தப் பட்டியலையும் கோத்தா அரசு கணக்கிலெடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ய)

## 156,310 பேருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது!

கொழும்பு, பெப்.7

இலங்கையில் கடந்த 29 ஆம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம் வரை ஒரு லட்சத்து 56 ஆயிரத்து 310 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இந்தியாவால் இலங்கைக்கு 5 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. இவற்றை 2 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு செலுத்த முடியும்.

அந்தவகையில் முதற்கட்டமாக கொரோனா ஒழிப்பு சமரில் முன்னள பணியாளர்களாக செயற்படும் சுகாதார மற்றும் பாதுகாப்பு பிரிவினருக்கு கொரோனாத் தடுப்பூசி கடந்த 29 ஆம் திகதி முதல் ஏற்றப்பட்டு வருகின்றது.

இதன்படி 29 ஆம் திகதி 5 ஆயிரத்து 286 முன்கள பணியாளர்களுக்கும், 30 ஆம் திகதி 32 ஆயிரத்து 539 பேருக்கும், 31 ஆம் திகதி 21 ஆயிரத்து 329 பேருக்கும், பெப்ரவரி முதலாம் திகதி 36 ஆயிரத்து 396 பேருக்கும், 2 ஆம் திகதி 23 ஆயிரத்து 217 பேருக்கும், 3 ஆம் திகதி 21 ஆயிரத்து 147 பேருக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

அத்துடன், 4 ஆம் திகதி 6 ஆயிரத்து 413 பேருக்கும், 5 ஆம் திகதி 9 ஆயிரத்து 983 பேருக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மொத்தமாக நேற்று வரை ஒரு லட்சத்து 56 ஆயிரத்து 310 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-44)

## பாலர் கலை விழா

உடுவில், பெப். 7

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் பாலர் கலை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## பாற்குட பவனியும் ஹோமப் பெருவிழாவும்

யாழ்ப்பாணம், பெப். 7

வட்டுக்கோட்டை சங்கரத்தை குளத்தடி அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதி அன்று ஆரம்பமாகிய உற்சவப் பெருவிழா நாளை திங்கட்கிழமை ஹோமப் பெருவிழாவுடன் நிறைவு பெறவுள்ளது.

இதன்போது சைவத் தமிழ் பாரம்பரிய மகத்துவங்களை பெருமைப் படுத்தும் நிகழ்வாக சங்கரத்தை பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி ஆலயத்திலிருந்து காலை 6 மணிக்கு பாற்குட பவனி நிகழ்வு நடைபெறவுள்ளது. (ய-இ)

## சாவ. மருத்துவமனை முன்பாக வாகனங்கள் நிறுத்த வேண்டாம்

### பொறுப்பதிகாரி கோரிக்கை

சாவகச்சேரி, பெப்.7

சாவகச்சேரி மருத்துவமனைக்கு முன்பாக ஏ9 வீதியில் வாகனங்கள் நிறுத்துவதைத் தடை செய்யுமாறு மருத்துவமனைப் பொறுப்பதிகாரி சாவகச்சேரி நகர சபையையும், சாவகச்சேரி பொலிஸாரையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மருத்துவமனையின் பிரதான வாயிலை அண்டிய பகுதியில் உள்ள உணவகத்துக்கு வரும் சாரதிகள் தமது வாகனங்களை வீதியோரம் நிறுத்துகின்றனர். இதனால் மருத்துவமனையிலிருந்து நோயாளர்களுடன் செல்லும் அம்புலன்ஸ் வண்டி உட்பட வாகனங்கள் ஏ9 வீதிக்கு செல்வதற்கு சிரமங்கள் உள்ளன.

அத்துடன்பிரதான வீதியில், வாகனங்கள் வருவது தெரியாத அளவுக்கு வீதியை மறித்து வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. இதனால் மருத்துவர்கள் உள்பட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் பயணிக்கும் போது விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே சாவகச்சேரி நகர சபையினர், மற்றும் பொலிஸார், மருத்துவமனை முன்பாக வாகனங்கள் நிறுத்து வதைத் தடை செய்யவேண்டும்- என்றார்.

இது தொடர்பாக சாவகச்சேரி நகர சபைத் தவிசாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

குறித்த பகுதியில் வாகனங்கள் நிறுத்தத் தடை என்னும் அறிவித்தல் பலகை முன்னர் சபையால் வைக்கப்பட்டது. சில நாள்களில் அது இனந்தெரியாதோரால் அகற்றப்பட்டுள்ளது. மருத்துவமனை நிர்வாகம் அறிவித்தல் பலகையை பாதுகாப்பதாக உத்தரவாதம் வழங்கினால் வாகனங்கள் நிறுத்தத் தடை செய்யும் அறிவித்தல் பலகையை நடுவதற்கு தயாராக வுள்ளோம் - என்றார். (ப-9)

## தமிழர்களின் எதிர்பார்ப்பை அரசு நிறைவேற்றவேண்டும்!

### *இலங்கையிடம் ஜெய்சங்கர் கோரிக்கை!*

கொழும்பு, பெப்.7

ஐக்கிய இலங்கைக்குள் நீதி, சமாதானம் மற்றும் சமத்துவத்துக்கான தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவது இலங்கையின் நலன்களுக்கு உகந்த விடயம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கைத் தலைவர்களை கடந்த மாதம் சந்தித்த வேளை, நல்லிணக்க முயற்சிகளுக்கான இந்தியாவின் ஆதரவை வெளியிட்டனர். தமிழ் சமூகம் உள்பட சமூகத்தின் அனைத்துத் தரப்பினரின் அபிலாஷைகளுக்கு இடமளிக்கும் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கையின் முயற்சிகளில் இந்தியா அனைத்து மட்டங்களிலும் தொடர்ந்து ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் உள்பட அர்த்தபூர்வமான அதிகாரப்பகிர்வு குறித்து அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளுக்கும் இது பொருந்தும் - என்றார். (ந-இ)

## 31ம் நாள் நினைவுடன் வீட்டுக்கிருத்திய, சபிண்டிகரண நிகழ்வு

அமரர்

**கதிர்காமு வைரவநாதர்**

**(சந்திரா)**

கடந்த 2021.01.09ஆம் திகதி (சனிக்கிழமை) இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய. சபிண்டீகரண நிகழ்வு. ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் நிகழ்வுகள் நாளை (08.02.2021) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.



மலர்வு 12.08.1943 உதிர்வு 09.01.2021

டச்சு வீதி,
மந்துவில் கிழக்கு. கொடிகாமம்.

குடும்பத்தினர்

# மாற்றுத் திறனாளிகளுக்கு இருசக்கர நாற்காலிகள்!

மன்னார், பெப்.7
இருசக்கர நாற்காலி வழங்கும் திட்டத்தின் கீழ், முதற் கட்டமாக மாற்றுத் திறனாளிகள் 117 பேருக்கு இருசக்கர நாற்காலிகள் மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன.



இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு முஸ்லிம் ஹான்ட்ஸ் (Muslims Hands) நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் ஐ.எஸ்.ஆர்.ஸி நிறுவனத்திடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த இருசக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், மன்னார் மாவட்டச் செயலாளர் ஏ. ஸ்டான்லி டிமெல் ஐ.எஸ்.ஆர்.ஸி நிறுவனப் பணிப்பாளர் மிஹ்லார், மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ற-56)

# வவுனியா மாவட்டத்தில் நெல் கொள்வனவு ஆரம்பம்

**வவுனியா, பெப். 7**

**வவுனியா மாவட்டத்தில் நெல் கொள்வனவுச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த முறை 3 லட்சம் மெற்றிக் தொன் நெல், நெல் சந்தைப்படுத்தும் சபையினூடாகக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 2.5 ஏக்கர் தொடக்கம் 3.75 ஏக்கர் வரையில் பயிர்செய்துள்ள விவசாயிகள் குறைந்தபட்சம் ஆயிரம் கிலோ நெல்லைக் கட்டாயமாக அரசுக்கு வழங்க வேண்டும். 2.5 ஏக்கரை விடக் குறைவாக பயிர்செய்தவர்களுக்கு கட்டாயத் தேவைப்பாடு இல்லை. எந்தவொரு விவசாயியும் ஏக்கரளவைக் கருத்தில் கொள்ளாது, ஆகக் கூடியது 5 ஆயிரம் கிலோ நெல்லை வழங்க முடியும்.

நெல்லை அரசுக்கு வழங்காதுவிடின், இலவச உரமானியத்தை எதிர்வரும் போகங்களில் பெற்றுக்கொள்ள முடியாது. ஒரு கிலோ காய்ந்த நாடு (வெள்ளை மற்றும் சிவப்பு) 50 ரூபா. ஒரு கிலோ காய்ந்த சம்பா மற்றும் கீரி சம்பா 52 ரூபா.

வவுனியா மாவட்டத்தில் காய்ந்த நெல்லைக் கொடுக்க விரும்பும் விவசாயிகள், தங்களது கமநல சேவைகள் நிலையத்தை நாடி விவரங்களை உறுதிசெய்து விண்ணப்பப் படிவத்தையும், நெல் சந்தைப்படுத்தும் சபையின் இலச்சினை பொறித்த பொதி செய்வதற்கான பைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

நெல்லைப் பெற்றுக்கொள்ளும் ஆலை உரிமையாளர்கள் 88 வீதம் நெல்லைக் காய வைத்த பின்னர் வழங்க வேண்டும்.

காய வைக்கப்பட்ட நெல்லை மீள விவசாயிகள் ஆலையில் பெற்று நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு கையளிக்க வேண்டும்.

வவுனியாவில் நெல்லைக் காய வைக்கக் கூடிய ஆலை உரிமையாளர்களின் விவரங்களை, அருகில் உள்ள கமநல சேவைகள் நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

முறைகேடுகள் அல்லது பிரச்சினைகள் ஏற்படின் வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர், நெல் சந்தைப்படுத்தும் சபை, வடக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் ஆகியோருடனும், பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களுடனும் தொடர்புகொள்ள முடியும் - என்றுள்ளது. (க-110)

## அங்கொட லொக்காவின் சடலத்தை உறுதிப்படுத்த உதவிகோருகிறது இந்தியா

கொழும்பு, பெப்.7
இந்தியாவில் உயிரிழந்தார் எனக் கூறப்படும் அங்கொட லொக்காவின் சடலம் அவருடையது தானா என்பதை உறுதிப்படுத்த இந்திய தேசிய விசாரணைப் பிரிவு இலங்கையிடம் உதவி கோரியுள்ளது. பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். இதற்காக அங்கொட லொக்காவின் நெருங்கிய உறவினர் ஒருவரின் மரபணு மாதிரியை அனுப்பி வைக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

களுத்துறை, எதனமடலப் பகுதியில் சிறைச்சாலைப் பேருந்தின்மீது தாக்குதல் நடத்தியதன் பின்னர் அங்கொட லொக்கா இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார் எனத் தகவல் கிடைத்திருந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## சாரதிகளுக்கு ரூ.205,000 தண்டம்

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய வாகனச் சாரதி, மது போதையில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய இருவர் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்தியவர் ஆகியோருக்கு, இரண்டு லட்சத்து 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. சாரதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு 75 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய இரு சாரதிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக ஒரு லட்சம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. சாரதி அனுமதிப்பத்திரத்தை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. தனது தொழிலுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் தேவையென சாரதியின் சட்டத்தரணி கோரியதையடுத்து, அவருக்கு 5 ஆயிரம் ரூபா மேலதிகமாகத் தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

## கிராம அலுவலகம் செல்ல 3 கிலோமீற்றர் தூரம் நடை

### சின்னச்சாளம்பன் மக்கள் கவலை

முல்லைத்தீவு, பெப். 7
கிராம அலுவலகம் சென்று தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு, 3 கிலோமீற்றர் தூரம் நடக்க வேண்டிய நிலை உள்ளது என்று ஒட்டுசுட்டான் சின்னச்சாளம்பன் கிராம மக்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஒட்டுசுட்டான் பொது மண்டபத்தில் இயங்குகின்ற கிராம அலுவலகத்துக்குச் சென்றே எமது தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. எமது கிராமத்தில் பொது மண்டபம் உள்ளபோதும் ஒட்டுசுட்டான் பொது மண்டபத்திலேயே கிராம அலுவலர் பணிகளை முன்னெடுக்கின்றார். இதனால் எமது கிராம மக்கள் மூன்று கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றே அங்கு தேவைகளை நிறைவு செய்கின்றனர். மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில் பயணிக்கின்ற பேருந்துகள் கூட சின்னச்சாளம்பன் கிராம மக்களை ஏற்றுவதில்லை. கிராம அலுவலர் சின்ன சாளம்பன் கிராம பொது மண்டபத்திலும் இரு நாள்கள் பணி புரிந்தால் நடந்து செல்ல வேண்டிய தேவை எமக்கு இல்லை. அவ்வாறு கிராம அலுவலர் சின்னச்சாளம்பன் கிராம மண்டபத்துக்கு வருவதில் நெருக்கடிகள் காணப்பட்டால் ஒட்டுசுட்டான் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சின்னச்சாளம்பன் கிராமத்துக்கு தனியான கிராம அலுவலர் பிரிவை உருவாக்க வேண்டும். இது தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரிடமும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றனர். (ப-13)







## ரயில் சேவைகள் குறைப்பு

கொழும்பு,பெப்.7
புதுப்பித்தல் பணிகள் காரணமாக கொழும்பு - புத்தளம் பிரதான வீதியின் ரயில் போக்குவரத்து கட்டுநாயக்க வரையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
நேற்று சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் 36 மணித்தியாலங்கள் இந்தப் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டு இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
நீர்கொழும்பு கல்கந்த சந்தி ரயில் கடவை புதுப்பித்தல் காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ரயில் கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது. (ஐ-இ)

## ஏப்.21 தாக்குதல் சூத்திரதாரிகள் மீது விரைவில் சட்ட நடவடிக்கை

### அமைச்சர் அளுத்கமகே தெரிவிப்பு




கொழும்பு, பெப். 7
ஈஸ்டர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளுக்கு இன்னும் ஒரிரு வாரங்களுக்குள் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.
அத்துடன், பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளுக்கும் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும்.
ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் நடந்ததுபோல் ஆதாரங்கள் இன்றி, அவசர அவசரமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாது. உரிய வகையில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இது தொடர்பில் மக்களுக்கு உறுதிமொழியும் கடந்த காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. என்றார். (த-44)

## கசகஸ்தான் சுற்றுலாவிகள் வருகை

கொழும்பு,பெப்.7
கொரோனா அச்சத்தைத் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இதற்கமைய, கசகஸ்தான் நாட்டில் இருந்து 165 சுற்றுலாப் பயணிகள் அண்மையில் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.
இவர்கள் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தனியார் உணவகம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-இ)

## வடக்கு, கிழக்கிலுள்ள தொல்பொருள் இடங்களில் 99% பௌத்த மரபுரிமைகள்!

### கூறுகிறார் எல்லாவல மேதானந்த தேரர்



கொழும்பு, பெப்.7
'குருந்தகம' என்பதே தற்போது குருந்தூர் மலையாகியுள்ளது. இதை எம்மால் நிரூபிக்க முடியும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்ற தொல்பொருள் முக்கியத்துவமுடைய இடங்களில் 99 வீதமானவை பௌத்த மரபுரிமைகளுடன் தொடர்புடையவையாகும் என்று எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
குருந்தூர்மலை பௌத்த மரபுரிமை என்பதை எவராலும் மறுக்க முடியாது. இதை தேசிய உரிமையாக அனைவரும் ஒன்றிணைந்து பாதுகாக்க வேண்டும். மாறாக வடக்கு கிழக்கி லுள்ள தமிழ் அரசியல்வாதிகள் இதை தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பிரச்சினையாக்கக் கூடாது.
வடக்கு, கிழக்கில் காணப்படும் ஆயிரக்கணக்கான தொல்பொருள் இடங்கள தொடர்பில் நான் பல சந்தர்ப்பங்களில் ஆராய்ந்திருக்கின்றேன்.
அவற்றில் 99 சதவீதமானவை பௌத்த மரபுரிமைகளுடன் தொடர்புடையவையாகும். இவ்வாறிருக்க குருந்தூர் மலை விவகாரத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் தவறான நிலைப்பாடுகளை சர்வதேச ரீதியில் ஏற்படுத்தியுள்ளனர்.
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி உள்ளிட்ட வடக்கு மாவட்டங்களில் காணப்படுகின்ற மலைகள் பௌத்த விகாரைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். அங்கு பல விகாரைகள் இடிக்கப்பட்டு கோயில்கள் கட்டப்பட்டுள்ளன - என்றார். (ற-இ)

## கோத்தா தலைமையில் இனவாத இராச்சியம்!

### மனோ காட்டம்



கோத்தாபய ராஜபக்ச தலைமையில் இனவாத இராச்சியம் உருவாகியுள்ளது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.
பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரையான நீதிக்கான போராட்டம் நேற்று மன்னார் பேருந்து நிலையத்தை வந்தடைந்தபோது, கலந்துகொண்ட மனோ கணேசன் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது;
தமிழரும், முஸ்லிம்களும், இந்தத் தேசத்தில் வாழ்வதற்கான உரிமையைக் கொண்டவர்கள். வரலாற்றில் எங்களுக்கும் பங்கு உள்ளது என்பதற்கான குரல் ஓங்கி ஒலித்துக்கொண்டு இருக்கின்றது. தமிழர்களையும் முஸ்லிம்க ளையும் ஒதுக்கி வைத்துவிட்டு கோத்தாபய அரசு இனவாத இராச்சியத்தை உருவாக்கிக்கொண்டு இருக்கின்றது. இந்த அடக்குமுறைக்கு எதிராக முஸ்லிம்களும் தமிழர்களும் அணிதிரண்டு இருக்கின்றார்கள். அவர்களுக்குத் துணையாக நான் களமிறங்குகின்றேன் - என்றார். (ப)

## நீர்ப்பாசனச் சுரங்கப்பாதை நிர்மாணப் பணிகள் ஆரம்பம்!

28 கி.மீ நீளமுள்ள தெற்காசியாவின் மிக நீளமான "நீர்ப்பாசனச் சுரங்கப்பாதை" நிர்மாணப் பணிகளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்றுமுன்தினம் அனுராதபுரம், பலுகஸ்வெவவில் ஆரம்பித்தார்.
5 ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் நீர்ப்பாசன சுபீட்சம் திட்டத்துடன் இணைந்ததாக நடைமுறைப்படுத்தப்படும் வட மத்திய மாகாண பிரதான கால்வாய்த் திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் இந்தச் சுரங்கப்பாதை நிர்மாணிக்கப்படு கிறது. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் 6 ஆவது மற்றும் இறுதி திட்டமாக வட மத்திய மாகாண பிரதான கால்வாய்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை ரஜரட்டவுக்கு கொண்டுசெல்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இது சூழல் நட்பு அபிவிருத்தித் திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்கங்களிலிருந்து மேலதிக நீர் 65 கிலோ மீற்றர் கால்வாய் வழியாக யகல்ல வரை கொண்டு செல்லப்படுகிறது.
கால்வாய் நிர்மாணிக்கும் போது 3 சரணாலயங்களை கடந்து செல்ல வேண்டும். இதன்போது சூழல் மற்றும் வனவிலங்குகளுக்கு சேதம் ஏற்படாமல் தடுக்கும் வகையிலேயே இந்த நீர்ப்பாசனச் சுரங்கம் அமைக்கப்படுகிறது. எலஹெர கொந்துருவெவவில் ஆரம்பிக்கும் இந்தச் சுரங்கம் பலுகஸ்வெவ மகமீகஸ்வெவவில் முடிகிறது.
இலங்கை அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்ட இத்திட்டத்தின் சுரங்கப்பாதைக்கான மொத்த செலவு 244 மில்லியன் அமெரிக்க டொலராகும். (ற-இ)

## பொதுக்கூட்ட அறிக்கை

யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 21.02.2021 (ஞாயிற்றுக்கிழமை அன்று சம்பியன் லேன், கொக்குவில் எனும் முகவரியில் அமைந்துள்ள வளர்மதி சனசமூக நிலையத்தில் மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொண்டு ஆலோசனைகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**செயலாளர்,**
**யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனம்.**

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் இங்கிலாந்து இமாலயப் பலம்!

புதுடெல்லி, பெப். 7

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது நாளான நேற்றைய நிலவரப்படி இங்கிலாந்து அணி இமாலயப் பலமுடன் உள்ளது. நேற்றுமுன்தினம் நாள் முடிவில் இங்கிலாந்து அணி 3 இலக்குகளை இழந்து 263 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரூட் 128 ஓட்டங்களுடனும் ஸ்ரோக்ஸ் ஓட்டமெதையும் பெறாத நிலையிலும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.

ரூட்டின் நிலையான ஆட்டம் நேற்றும் தொடர்ந்தது. 150 ஓட்டங்களை அவர் பதிவுசெய்தார். மறுமுனையில் மிக இலாவகமாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தார் ஸ்ரோக்ஸ். 70 என்ற சராசரியில் விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கைகளை கிடுகிடுவென உயர வைத்தார் ஸ்ரோக்ஸ். இணைப்பாட்டம் 100 தாண்டியது.

82 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஸ்ரோக்ஸ். மறுமுனையில் இரட்டைச் சதம் கடந்து 218 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் ரூட். பின்வரிசை வீரர்களும் ஓரளவு செயற்பட நாள் முடிவில் இங்கிலாந்து அணி 8 இலக்குகளை இழந்து 555 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. (ம)

## முன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 . 10 . 1947

மறைவு 11 . 02 . 2018

### திருமதி சறோஜா ஈஸ்வரதாசன்

திதி: 07.02.2021

ஆண்டு மூன்று ஆனாலும்
ஆற முடியவில்லை "அம்மா"
இப் புவியில் உமையிழந்து
நெடுந்துயரால் தவிக்கின்றோம்
ஈடு. இணையில்லை "அம்மா" இற்றைவரை
ஆறுதலாய் ஏதுமில்லை "அம்மா"

180/2, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

பிரிவால் துயருறும்
அன்புக் கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 09 . 04 . 1940



சிவன் அடியில் 25 . 01 . 2006

### அமரர் விநாசித்தம்பி சோமசுந்தரம்

(கொட்டடிச் சந்தி முன்னாள் பிரபல மரக்காலை உரிமையாளரும் - ஸ்தாபகர். சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ். யாழ்ப்பாணம்)

**திதி : அபரபக்க ஏகாதசி (07.01.2021)**

ஆசையாய் எம்மைப் பெற்று வளர்த்து. சிறப்பாய்
அறிவும் பண்பும் புகட்டி வளமுடன்
வாழ வைத்த எங்கள் அப்பாவே!
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விடாலும்
வையத்துள் வாழும் நாங்கள் நித்தமும்
நினைத்தே வாழ்வோம் அப்பா!
தெய்வம் போல் துணையாய் நின்று
நாளெல்லாம் எங்களைக் காப்பீர்கள் அப்பா!
எங்கள் தெய்வத்தின் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
நிமலன் திருவடியில் நீங்கள்
சேர்ந்து வாழ வேண்டுகின்றோம்.

D.1/1, சென்ரல் றோட், கொழும்பு - 12,
119, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.



## யாழ்ப்பாணத்தில் சனத் ஜெயசூரிய

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஜெயசூரிய நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். தனிப்பட்ட முறையில் அவரின் பயணம் அமைந்தது.

தனது பயணத்தின் ஒரு பகுதியாக அவர் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சென்றார். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு சனத் செல்வதை அறிந்த யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் மாணவர்கள் அவரைச் சென்று சந்தித்துள்ளனர். 'தமது பாடசாலைக்கு கிரிக்கெட் உபகரணங்களை பெற்றுத் தர வேண்டும்' என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். அவர்களின் கோரிக்கையை சனத் ஜெயசூரியவும் ஏற்றுக்கொண்டார். (ம-25)

## 40 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 04 . 03 . 1930



விண்ணில் 31 . 01 . 1981

இணுவில் மேற்கைச் சேர்ந்த

### அமரர் கதிர்காமு ஆழ்வாப்பிள்ளை

**திதி. 07.02.2021**

வைத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்பத் தலைவனே
ஆண்டுகள் நாற்பதாகி விட்டாலும்
இன்று உங்கள் வழிகாட்டலே இவ்வுலகில்
எம்மை வாழவைக்கின்றது.
என்றும் எமது வாழ்க்கைப் பயணத்திற்கு
தெய்வமாக விண்ணில் இருந்து
வழிகாட்டுவீர்கள் என்ற
நம்பிக்கையுடன் வாழ்கிறோம்
இவரின் ஆத்மா சாந்திக்காப் பிரார்த்திப்போம்

**பிள்ளைகள்,**
**ஆ.சிறிதரன் (ஜேர்மனி)**

## மரண அறிவித்தல்



### திரு. சிவகுரு சிவானந்தன் (ஆனந்தன்)

BSc Hons. Maths- Colombo, Chartered Accountant,
முன்னாள் மாணவர்- ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
முன்னாள் ஆசிரியர்- உரும்பிராய் இந்துக்கல்லூரி. மானிப்பாய் இந்துக் கல்லூரி. Co-founder and permanent Trustee of Oriental Fine Arts Academy of London(OFAAL)

யாழ். சங்கானை தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும். Nigeria,Lesotho, லண்டன் Edgware ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சிவானந்தன் அவர்கள் 15-01-2021 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான பொ.சிவகுரு(இளைப்பாறிய ஆசிரியர்) ஞானரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும். சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்ற சட்டத்தரணி சிவஞானம் தேவி தம்பதிகளின் அன்பு மருமகனும். கலாதேவி (கலா) அவர்களின் அன்புக் கணவரும். Dr. சியாமினி. சுபன் ஆகியோரின் அன்புத் தந்தையும். Dr.Tim அவர்களின் அன்பு மாமனாரும். சிவதர்சன் (லண்டன்). சிவநேயன்(யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும். ஞானதேவி (லண்டன்). குலநாயகம் (ஜேர்மனி). காலஞ்சென்றவர்களான கொங்காதேவி (லண்டன்). சோமசுந்தரம்(கனடா) மற்றும் நிர்மலதாசன்(லண்டன்). சிவகுமார்(லண்டன்). ரவீந்திரன்(லண்டன்). Dr. மகேசன் (கனடா). சிறீராம் (கனடா). கணேசன்(ஐக்கிய அமெரிக்கா). ஸ்ரீஜெயதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும். சகானா. காய(Gaia) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பார்வைக்கு Get Direction
- Saturday, 06 Feb 2021 11:30 AM - 1:00 PM
- Divinity Funeral Care209 Kenton Rd, Kenton, Harrow HA3 0HD, United Kingdom

கிரியை - Get Direction
- Sunday, 07 Feb 2021 9:00 AM - 11:00 AM
- Divinity Funeral Care209 Kenton Rd, Kenton, Harrow HA3 0HD, United Kingdom
- Immediate family only by invite

தகனம் - Get Direction
- Sunday, 07 Feb 2021 12:00 PM - 12:45 PM
- Golders Green Crematorium62 Hoop Ln, London, NW11 7NL, UK
- West Chapel

தொடர்புகளுக்கு
சிவதாசன் - சகோதரன்
- Mobile : + 447 877 394 501

சியாமினி - மகள்
- Mobile : + 447 891 222 970

தகவல்:
குடும்பத்தினர்.

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 30 • 12 • 1943

உதிர்வு 20 • 01 • 2020

அமரர் செல்வி

## குகனேசமலர் பொன்னுத்துரை

(ஓய்வுநிலை உப அதிபர், உரும்பிராய் இந்துக் கல்லூரி)

திதி : தேய்பிறை ஏகதாசி

| | | |
|---|---|---|
| அவனியிலே | அவதரித்து | எழுத்தறிவித்து |
| ஆழத் தருவாய் | அன்புகொண்டு | ஏழ்மை காட்டி |
| இறைநம்பிக்கை | இறுகப்பற்றி | ஐம்புலன்கள் அடக்கி |
| ஈகையே உங்கள் | சிறப்பியல் சக்தி | ஒழுக்கம் நிலைநாட்டி நாம் |
| உறவுகளுக்காய் | உழைத்து | ஓங்கிவாழ வழி அமைத்து |
| ஊர்போற்ற | வாழ்ந்து | ஒய்வெடுத்துக்கொண்டீரோ |

அக்கா!

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

வேம்பன் வீதி,
உரும்பிராய்.

என்றும் உங்கள் நினைவில்
சகோதர, சகோதரிகள்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 14 • 05 • 1945



இறப்பு 05 • 02 • 2021

## திருமதி ஜெகதீஸ்வரி இரத்தினவடிவேல்

இல.11, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட ஜெகதீஸ்வரி இரத்தினவடிவேல் நேற்றுமுன்தினம் (05.02.2021) வெள்ளிக்கிழமை இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் கனகம்மா தம்பதியரின் அன்பு மரு மகளும், இரத்தினவடிவேல் (முகவர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், நிருபா (ஆசிரியை யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) பிரபாகரன் (லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்) கஸ்தூரி (லண்டன்) காயத்திரி (ஜேர்மனி) பாஸ்கரன் (இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம்) தயாளினி (ஆசிரியை, யா/ கதீஜா பெண்கள் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரமேஷ் (நோர்வே) கௌரிபாலன் (லண்டன்), சிவகரன் (ஜேர்மனி), வித்தியகலா (கமநல சேவைகள் நிலையம் - உடுவில்) சாத்வீகன் (Maxus Marketing) ஆகியோரின் அன்பு மாமியாரும், நல்லம்மாவின் (கனடா, ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சற்குணசிங்கம் மற்றும் கிருஸ்ணசாமி, பரதராஜன் ஆகியோரின் மைத்துனியும் ஆரணி, அனிஷ், சங்கவி, ஆதவன், வாசவி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 221 7232

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## திரு. E.S.பேரம்பலம் கணேசலிங்கம்

(உரிமையாளர் E.S. பேரம்பலம் சக நிறுவனம் - கொழும்பு - யாழ்ப்பாணம்)

தோற்றம் 18.06.1964

மறைவு 23.01.2017

திதி: 07.02.2021

கூண்டுக்குருவி ஒன்றை காலன் எனும் வேடன்
கண் எட்டா தூரம் கொண்டு சென்றானோ
குடும்பத்தின் ஒளி விளக்கே!
அன்பின் பிறப்பிடமே
ஆண்டு நான்கு ஆன போதும்
ஆறவில்லை நம் துயரம்!
காலம் கொண்டு சென்றதோ - உம்மை
தவிக்கும் உம் உறவுகளையும் தாண்டி...
சோக நெருப்பில் எமைதள்ளி
நீர் சென்ற இடம் தான் எதுவோ...?
ஆண்டுகள் உருண்டு ஓட
நினைவுகள் குறையவில்லை
விடை இல்லா வினாக்களோடும்,
வலியுடனும் வேதனையுடனும்
இன்னும் இன்னும் உங்கள் இழப்புத்தான்
எங்களை வாட்டி வதைக்கிறது
தென்றலின் பூங்கரம் தீண்டிடும்போதும்
சூரிய கீற்றொளி தோன்றிடும்போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும்போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக்கூடும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

11, பெதாஸ்ரா பிளேஸ்,
கொழும்பு - 05

மனைவி, பிள்ளைகள்.
680, பருத்தித்துறை வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்.


## ஹற்றன் நஷனல் வங்கி (பி.எல்.சி)

முல்லைத்தீவில் நான்கு அறைகள் மற்றும் இரு இணைக்கப்பட்ட குளியலறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

**அமைவிடம் - பிரதான வீதி, முல்லைத்தீவு**

**காணி அளவு - 24 பேர்ச்சஸ்**

**கட்டிட அளவு - 1964 சதுர அடி**



அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

0112661866 0212290090 0212290091 0779878592 (திரு. கஜரூபன்).

0773604636 (திரு. பெலாமின்), 0761311392 (திரு. ஜெரி)

தொலைநகல் - 0112662820 -

email : recovery@hnb..lk

**கேள்விக் கோரிக்கைகளை 28.02.2021 இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பவும்.**

**Head of Recoveries. Hatton National Bank PLC**
**Recoveries Department, Level 18,-HNB Towers.**
**No.479, T.B Jayah Mawatha, Colombo 10.**

# வவுனியா பொலிஸார் மூவருக்குக் கொரோனா!

வவுனியா, பெப். 7

வவுனியா பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மூவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என 20க்கும் மேற்பட்டோருக்கு கொரோனாத் தொற்று இருக்கின்றமை அண்மையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், மேலும் மூவர் புதிய தொற்றாளர்களாக அவதானிக்கப்பட்டுள்ளனர். (ம-110)

## மணமக்கள் தேவை

யாழ் இந்து. 1987. மிருகசீரிடம் 4ம் பாதம். சூரியன் செவ்வாய் 3ல். கிரகபாவம் 6. தனியார் நிறுவனமொன்றில் கணக்காளராக பணிபுரியும் மணமகனுக்கும். 1991. மூலம் 1ம் பாதம். செவ்வாய் 6ல். கிரகபாவம் $39\frac{1}{4}$. அரச பணிபுரியும் மணமகளுக்கும் பொருத்தமான மணமக்கள் தேவை.

**077 616 1739**

## வேலைவாய்ப்பு

**கொழும்பிலுள்ள ஏற்றுமதி நிறுவனத்திற்கு**

### PRODUCTION OFFICER

We are looking for a young and energetic person to fill the post of Production Officer of our food processing factory. The suitable candidate should have the capacity to plan and execute production according to company schedule. The requirements are as follows:

* GCE Advance Level with Chemistry. Candidates with B.Sc. Food Science or equivalent will be considered.
* Preferably Experience in food processing and food safety management.
* Ability to carry out laboratory experiments to assure quality of products.
* Innovativeness to carry out R&D work to introduce new products.

### PURCHASING OFFICER - MALE

க.பொ.த(சா.த)சித்தி பெற்றவர்கள். அதற்கு மேற்பட்ட தகைமை உடையவர்களும் அத்துடன் ஆங்கிலம் எழுதும் ஆற்றல் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். அனுபவமுள்ளவர்களும் அனுபவமற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி தரப்படும். உங்கள் சுயவிபரக்கோவையை உங்களை நன்கறிந்த உறவினரல்லாத இருவரினது விபரங்களுடன் கீழக்காணும் மின் அஞ்சலுக்கு அனுப்பவும். கிழமை நாட்களில் தொடர்பு கொள்ளும் நேரம் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை

email :expofood82@gmail.com
Mob. 072 7332246

# VACANCY
## PROJECT COORDINATOR

**Friends Lanka Child Foundation** an NGO is seeking an energetic Male/Female for the post of Project coordinator to the project office at Mulankavil.

He/She should have the following requirement:

- ★ Should be in the age of 25 to 40,
- ★ Should have passed GCE A/L
- ★ Minimum of 1 year of experience in the subject of project management.
- ★ Strong analytical, report writing and Communication Skills.
- ★ Excellent English language skills, both written and spoken.
- ★ Excellent knowledge of MS office and other relevant Computer skills.
- ★ Also should closer to Mulankavil Office. (30km)
- ★ Have a Motor bike riding license is preferred
- ★ Salary Negotiable

Please forward your C.V. with details of two non related referees to reach within 7days of this advertisement to

Email: admin@flcf.lk / terrance@flcf.lk
Web: http://www.flcf.lk

# அடகு வைத்து மீட்டெடுக்க இயலாது போன

## உங்களது தங்க நகைகள் மீண்டும் உங்களது கைகளுக்கு

F.A.Ads

நீங்கள் தற்பொழுது அடகு வைத்திருக்கும் ரசீதினை எமது 0777 947120 என்ற இலக்கத்திற்கு WhatsApp செய்யவும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.**

ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 071 1695101 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | நெல்லியடி | 074 0920357 |
| புதுக்குடியிருப்பு | 071 0870633 | சங்கானை | 074 0920317 |
| கல்முனை | 071 0870663 | பேருவளை | 077 2999934 |
| பூண்டுலோயா | 077 7683889 | மத்துகம | 077 2206413 |
| வாளைச்சேனை | 077 8151938 | ஒட்டுச்சுட்டான் | 074 0929571 |
| ராகலை | 071 0870703 | வவுனியா | 074 0920313 |
| கொழும்பு | 070 2539382 | திகன | 077 8156738 |
| கம்பளை | 071 0870735 | களுத்துறை | 077 6167149 |
| மாத்தளை | 070 2539389 | வெள்ளவத்தை | 071 0870686 |

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
## MARUTHANAARMADAM CHUNNAKAM

**தேசிய தொழிற் தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்**

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கிகாரம் பெற்ற பயிற்சி நெறிகள் க.பொ.த (உயர்தரம்) சித்தியடையாதோர் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழிற் தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

**Field Assistant Agriculture**

**(விவசாய வெளிக்கள உதவியாளர் பயிற்சிநெறிகள்)**

1. தேசிய தொழில் தகைமை மட்டம் 3 (4 மாத காலப்பயிற்சி நெறி)
தகைமை - க.பொ.த சாதாரண தரம் கற்றிருப்பதுடன் 16-24 வயதிற்குட்பட்டவராக இருத்தல்

2. தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 (ஒரு வருட காலப்பயிற்சி நெறி)
தகைமை - NVQ மட்டம் 3 அல்லது க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமாக விவசாய பாடத்திலும் சித்தியடைந்திருப்பதுடன் 16-26 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல். வேண்டும்.

**பயிற்சிகட்டணம் இலவசம்**

பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 24.02.2021 அன்று காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வி தகைமை சான்றிதழ்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் மற்றும் வேறு இரு நற்சான்றிதழ்களுடன் தற்போது உள்ள சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நேரில் சமூகமளிக்கவும்.

**மேலதிக விபரங்கள் :**

அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனார்மடம், சுன்னாகம்
தொலைபேசி: 021 224 1420
மின்னஞ்சல்: jcinstituteofagriculture@gmail.com

## சமுர்த்தி சமுதாய வங்கி அங்குரார்ப்பண நிகழ்வு

கண்டாவளை.பெப்.7

கண்டாவளை பிரதேச செயலக சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுச் சனிக் கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஜ-113)

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 08 . 1972



மறைவு 05 . 02 . 2021

### சதாசிவம் நந்தகுமார்

முல்லைத்தீவு கணுக்கேணி கிழக்கை பிறப்பிடமாகவும் அரியாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் நந்தகுமார் நேற்று முன்தினம் (05.02.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சதாசிவம் - அஞ்சலிதேவி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற பத்மநாதன் - மற்றும் ஜெயமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், பவளமலர் (காந்தி சனசமூக நிலைய முன்பள்ளி - ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், கஜந்தன், யதுர்ஷன், யதுர்ஷிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயகுமாரி, ஜெயக்குமார், ஜெயச்சித்திரா, சியாமளா, விஜிதா, கிருஷ்ணசிவம், சதுஷன் ஆகியோரின் அன்புச் சகோ தரனும், ரவீந்திரநாதன், ரஞ்சிதமலர், புஸ்பமலர், சாந்தமலர், சசீந்திரநாதன், கேசவநாதன், பரலோகநாதன், ஜெயமலர், காலஞ்சென்ற செல்வநாதன் மற்றும் சிவ-லோக நாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 120, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

120, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 04 . 1946



மறைவு 05 . 02 . 2021

### திருமதி வசந்தமல்லிகா பாலசுப்பிரமணியம் (விமலா)

திருகோணமலையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கொழும்பு துறையை வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தமல்லிகா பாலசுப்பிரமணியம் (விமலா) கடந்த (05.02.2021) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்கான நடராசா-செல்லக்கண்ணு தம்பதியரின் பாசமிகு மகளும், பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், சுமதி, குமுதி (லண்டன்), அமுதா, பாலன், பாலமித்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், கேதாரநாத், விக்னா, வானதி ஆகியோரின் அன்பு மாமியும், கஜந்தி, லோயிதன், நாடியா, மாயா, பர்ணி, மயோன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2021) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை, துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: விக்னா
(விக்னா ஹோட்டல்)


கொழும்புத்துறை.






## மரண அறிவித்தல்

### சுப்ரமணியம் பாலச்சந்திரன்



54, சிவன்பண்ணை வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலச்சந்திரன் நேற்று (06.02.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் சிவக்கொழுந்து தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான காசிநாதன், சோதிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2021) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.30 மணியளவில் 54, சிவன்பண்ணை வீதி, யாழ்ப் பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

54, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: அ.கதிர்காமநாதன்
(ஒன்றுவிட்ட சகோதரன்)
ச.சசீந்திரன் (0778511265)

## மரண அறிவித்தல்

தாயின் மடியில் 29 . 04 . 1930



இறைவன் அடியில் 05 . 02 . 2021

### திரு.தேவேந்திரா துரைசுவாமி

"மகேந்திரா" யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 84, செட்டித்தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தேவேந்திரா துரைசுவாமி நேற்று முன்தினம் (05.02.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Sir வைத்திலிங்கம் துரைசுவாமி, இராசம்மா துரைசுவாமி ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான மண்டைதீவு விதானையார் முத்துக்குமாரு நவரத்தினராஜா, தி[illegible]நாயகி அவர்களின் அன்பு மருமகனும், சிதம்பரராணி அவர்களின் அன்புக் கணவரும், விஜயலட்சுமி - ர[illegible]ஷ், குமரேந்திரா, லலிதாலட்சுமி - கிரிதரன் (பிரான்ஸ்), க[illegible] - பாலேந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற க[illegible]லிங்கம், ரமேஷ், கிரி[illegible]ன், சசிரேகா, கோகிலவதனா ஆகியோரின் அன்பு மாமனும், அரன், தீபிகா, கயன் [illegible]கி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2021) ஞாயிற்றுக் கிழமை அ[illegible] இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் நல்லூர் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

# மியான்மரில் வெடித்தது மக்கள் போராட்டம்!

நைபிட்டோ, பெப். 7

மியான்மரில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஆங் சான் சூச்சியை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் சூச்சி தரப்பிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. மியான்மர் இராணுவத்தால் அண்மையில் சூச்சி சிறைப் பிடிக்கப்பட்டு இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டது. அடுத்த ஒரு வருடம் அவசர நிலை நடைமுறையில் இருக்கும் என்றும் இராணுவம் அறிவித்தது. இந்த நிலையிலேயே இராணுவ ஆட்சிக்கு எதிராகவும் சூச்சிக்கு ஆதரவாகவும் மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. (ம)





## வாடகைக்கு விடப்படும்

மனித உரிமை நிலையம், ஊரெழு கிழக்கில் உள்ள இடத்தை முன்பள்ளி நடாத்த, பிரத்தியேக வகுப்புக்களை நடாத்த வாடகைக்கு விடப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு இல:

**021 224 0999, 0776452474**


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி பிருந்தா உமாசெல்வன்**
அவர்களின் தாயார்
**திருமதி கந்தசாமி பவானி**
அவர்கள் 05.02.2021 இறைபதமெய்தியுள்ளார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/நாவற்குழி மகா வித்தியாலயம்**
**கைதடி, நாவற்குழி**

## மரண அறிவித்தல்

**(இயேசு) "என்னைத் தேடுபவன் என்னை கண்டடைவான்"**

பிறப்பு 12 . 12 . 1963



இறப்பு 31 . 01 . 2021

**திருமதி எமில்டா ஜோசப்பின் ஜெயசீலன்**


இராமநாதன் கல்லூரி. பழைய மாணவியும். ஆசிரியரும் யாழ் உடுவிலை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட எமில்டா ஜோசப்பின் அவர்கள் 31.01.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் செல்வம். திருமதி மேரி திரேசா அவர்களின் அன்பு மகளும் ஜெயசீலனின் (ஜேர்மனி) அன்பு மனைவியும். அனோஜெயனின் அன்புத் தாயாரும். எமில்ஜோன். எமில்ரன் (கனடா). எரிக். ஏனெஸ்ட் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும். திலகா. றேணுகா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

08.02.2021 அன்று ஜேர்மனியின் 12 மணிக்கு நடைபெறும் இறுதி நிகழ்வு அதே நேரம் இங்கு அவரது இல்லத்தில் 4.30 மணிக்கு நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**தகவல்: எரிக் (சகோதரன்)**
**ஆக் வீதி, உடுவில். 077 344 5750**

## தாவடி மக்களின் கண்ணீர் அஞ்சலி



தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலயத்தில் பெரும் திருப்பணிகளை கடந்த காலகட்டங்களில் முன் நின்று உதவிகள் செய்தும் இவ்வூர் இளைஞர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பினை தேடிக் கொடுத்தவரும் தற்போது ஆலய சுற்றாடலில் அமைந்த பாடசாலை வளர்ச்சிக்கும் தன்னால் பல வழிகளிலும் உதவிகள் செய்த

**செல்லத்துரை சத்தியமூர்த்தி**

ஒரு கிராமப் பற்றாளனை இழந்து தவிக்கின்றோம் அவரின் குடும்பத்தினருக்கு தாவடி மக்களின் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 29 . 12 . 1952



இறப்பு 20 . 01 . 2020

அமரர்
**கணபதிப்பிள்ளை பாலசுந்தரம் (துரை)**

இன்று (07.02.2021) ஞாயிறுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எம் உயிரின் பகுதி
உன்னுடன் உதிர்ந்ததப்பா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் தந்தையே.....
நீர் தந்த அன்பின் நிழலில்
வாழும் உன்....
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**148. பிரதான வீதி, மானிப்பாய்.** **குடும்பதினர்.**


## ஆடை வடிவமைப்பகத்தில் உடனடி வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்குகின்ற ஆடை வடிவமைப்பகத்தில் அனுபவமுள்ள வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்

தையலாட்கள் (பெண்) JUKI Sewing Machine Operator
Embroidery Machine Operator
Graphic Designer (Corel Draw or Adobe Illustrator)

Garment இல் வேலை செய்த அனுபவமிக்கவர்கள் விரும்பத்தக்கது

தொடர்புகளுக்கு:
021 222 4333
070 3344 099
077 3664 106

வாகை ஆடை வடிவமைப்பகம்
பிரப்பன்குளம் வீதி
யாழ்ப்பாணம்
(மனோகரா சந்திக்கு அண்மையில்)

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு. மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு. மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன். பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி. இலாமிச்சை வேர். கருவேப்பிலை. வல்லாரை. நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?. கணச்சூடா?. பலகீனமா?. ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?. மார்பு கூட வேண்டுமா?. உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

077 210 6155 221. நாவலர் றோட். யாழ்ப்பாணம்.


# மேலும் எட்டுப் பேர் கொரோனாவால் சாவு

### நேற்றும் 726 பேருக்கு தொற்று

கொழும்பு, பெப். 7

இலங்கையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த மேலும் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன்படி நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 351ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, நேற்றும் 726 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 68 ஆயிரத்து 576ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தவர்களில் ஆயிரத்து 133 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை 62 ஆயிரத்து 694 பேர் குணமடைந்துள்ளதுடன், 5 ஆயிரத்து 631 பேர் மருத்துமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-22)

# விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த குடும்பத்தலைவர் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார். இராசரத்தினம் பிரகாஸ் (வயது -48) என்ற நபரே உயிரிழந்தவராவார்.

மேற்படி நபர் சுன்னாகம் கிழக்கில் வசித்து வருகின்றார். நேற்றுமுந்தினம் மாலை சுன்னாகத்தில் இருந்து மருதனார்மடம் நோக்கிச் செல்லும் போதே அவர் விபத்துக்குள்ளானார். டிப்பர் வாகனமொன்று மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. குறித்த நபர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுக்காலை அவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். டிப்பர் வாகனத்தின் சாரதி சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ம-25.26.319)

## பேரெழுச்சியுடன்....

இந்தப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உணர்வெழுச்சியுடன் விடுதலை வேட்கையுடன் இன்று அணிதிரளவுள்ளனர். யாழ்ப்பாணமே ஸ்தம்பிக்கும் அளவுக்கு மக்கள் வெள்ளம் கரைபுரண்டு ஓடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்தில் கடந்த 2ஆம் திகதி பேரணி ஆரம்பமானது. சிவில் சமூகத்தினர், அரசியல் தரப்பினர், பொது அமைப்புக்கள் மற்றும் மக்கள் எனப் பல்வேறு தரப்புக்களினதும் பங்கேற்புடன், விண்ணதிரக் கோசங்களுடன் பேரணி தனது பயணத்தை ஆரம்பித்தது.

நீதிமன்றங்கள் ஊடாகப் பொலிஸார் தடை உத்தரவுகளைப் பெற்றிருந்தனர். வீதிகளில் மறியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவற்றை தகர்த்தெறிந்து பேரணி வீறுநடைபோட்டது. வீதிகளில் ஆணிகளைப் போட்டும், பேரணியில் கலந்துகொண்ட வாகனங்களுக்கு கல்லெறிந்தும் முடக்க நினைத்தபோதும் பேரணி வீச்சுடன் நகர்ந்தது.

பேரணி ஒவ்வொரு இடமாக நகரும் போது அந்தந்தப் பகுதி மக்கள் தங்கள் ஆதரவுகளை பேரணிக்கு வழங்கினர். ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்த்ததை விட அதிகமாகவே மக்கள் திரண்டனர். முஸ்லிம் மக்களும் உரிமைக்கான பேரணியில் கலந்துகொண்டனர். பேரணியின் இறுதிநாள் இன்றாகும். கிளிநொச்சியை நேற்றிரவு வந்தடைந்த பேரணி இன்று காலை 8 மணிக்கு அங்கிருந்து புறப்படும்.

**முகமாலையில் வரவேற்பு**

சமாதான ஒப்பந்த காலத்தில், 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏ -9 வீதியூடாக முதன்முறையாக யாழ்ப்பாணம் நுழைந்த போது, முகமாலையில் மிகப் பிரமாண்டமான வரவேற்பு வழங்கப்பட்டது. ஒட்டுமொத்த யாழ்ப்பாண மக்களுமே திரண்டு, வீதிகள் தோறும் நின்று வரவேற்றனர். அதைப்போன்று இன்றைய தினமும், உரிமைக்கான போராட்டப் பேரணியை, விடுதலைத் தீயை நெஞ்சில் சுமந்தவாறு மக்கள் வரவேற்கவுள்ளனர்.

**மோட்டார் சைக்கிள் பேரணி**

ஏ-9 வீதியூடாக பரந்தன், இயக்கச்சி, பளை, கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, நாவற்குழி, அரியாலை ஊடாக நகரும் பேரணி யாழ்ப்பாண நகரை வந்தடைந்த பின்னர் பருத்தித்துறை வீதி ஊடாக பொலிகண்டியைச் சென்றடையும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, உலகத் தமிழராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவிடம், யாழ்.பல்கலைக்கழகம், தியாக தீபம் திலீபன் நினைவுத் தூபி, வல்வெட்டித்துறை தீருவில்வெளி ஆகிய இடங்களை ஊடறுத்தே பேரணி செல்லும்.

இதேவேளை, இளைஞர்கள் மோட்டார் சைக்கிள்களுடன் பேரணியாக கலந்து கொள்ளவுள்ளனர். குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் இளைஞர்கள் இந்தப் பேரணிக்கு தயாராகி வருகின்றனர். நடைபயணப் பேரணியைத் தொடர்ந்து வரும் வாகனப் பேரணியால் ஏ - 9 வீதி மற்றும் பருத்தித்துறை வீதி என்பன இன்றைய தினம் முடங்கும்.

**உபசரணை**

பேரணி ஏ- 9 வீதியூடாக நகரும்போது வீதிகளின் இருமருங்கிலும் நின்று மக்கள் ஆதரவு வழங்கவுள்ளனர். அத்துடன் பேரணியில் கலந்துகொள்பவர்களுக்கு குடிதண்ணீர் மற்றும் சிற்றுண்டிகள் என்பனவும் வழங்குவதற்கு மக்கள் ஆயத்தமாகி வருகின்றனர். போர் முடிவின் பின்னர் தமிழர் தாயகத்தில் நடந்த முதலாவது மிக எழுச்சியான பேரணியாக இது அமையவுள்ளது. (ஒ,5)

## சா/தர செயன்முறை...

யப்பட்டுள்ளன. கலைப் பிரிவுக்குரிய பாடங்களுக்கு மாற்று வழியில் புள்ளிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி.பூஜித தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தப் பரீட்சைக்கான செயன்முறைப் பரீட்சைகளே இரத்துச் செய்யப்பட்டுள்ளன. பாடசாலை மட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டறிக்கைக்குரிய புள்ளிகளை செயன்முறை பரீட்சைக்கான பதிலீட்டு புள்ளி வழங்கும் திட்டமாக முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என பூஜித தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, மாணவர்களின் தரம் 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளில் பெற்றுக்கொண்ட மதிப்பீட்டு அறிக்கைக்குரிய புள்ளி விவரங்கள் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கான ஆலோசனைகள் பாடசாலை அதிபர்களுக்கும் வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி. பூஜித சுட்டிக்காட்டினார். (ஒ,இ)

## பேரணியில்...

குணவர்த்தனவின் பெயரும் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பேரணி மன்னாரை நோக்கி நேற்றுச் சென்றது. பேரணியை வழிமறித்த பொலிஸார், போராட்டக்காரர்களின் பெயர்களைப் பதிவு செய்தனர். வாகனம் ஒன்றில் சென்றவர்கள் வழிமறிக்கப்பட்டனர். அவர்களிடம் பெயரைக் கேட்டுப் பதிவு செய்தனர். வாகனத்தில் இருந்தவர் தன்னுடைய பெயர் "பந்துல குணவர்தன "என்று கிண்டலாகத் தெரிவித்தார். இதைக் கேட்டு வாகனத்தினுள்ளே இருந்தவர்கள் பெரும் சத்தமிட்டு சிரித்தனர்.

அவர்களுடைய நகைப்பை சற்றேனும் புரிந்து கொள்ளாத பொலிஸார் கடமை உணர்வின் உச்சத்தில் பந்துல குணவர்த்தன என்ற பெயரையும் பதிவு செய்தனர். இந்தச் சம்பவம் காணொலியாக முகநூலில் நேற்று அதிகம் பகிரப்பட்டிருந்தது. (ஒ,ப)

## கவனவீர்ப்பு...

கவனவீர்ப்புப் பேரணி வடக்குக்குள் நுழைந்துள்ள நிலையில், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், மல்லாகம் நீதிமன்றங்களில் பொலிஸார் போராட்டத்துக்குத் தடை உத்தரவு கோரி மனுத் தாக்கல் செய்திருந்தனர். எனினும், அந்த மனுக்களை. நீதிமன்றங்கள் நிராகரித்திருந்தன.

வடக்கின் பல இடங்களில் கவனவீர்ப்புப் பேரணி தொடர்பான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதுடன், பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன. அச்சுவேலிப் பகுதியில் காணப்பட்ட சுவரொட்டிகளும், பதாகைகளும் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் நேற்று அகற்றப்பட்டுள்ளன. அதேவேளை, யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் இராணுவத்தினரின் பிரசன்னமும், பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (எ,ஒ,26)

## சிங்கள....

டையச் செய்யும் செயலாகும். இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி' பேரணி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கொள்கையுடன் செயற்படும் அரசு நாட்டுமக்களை தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று வேறுபடுத்தி பார்க்கவில்லை.

ஆனால் தமிழ், முஸ்லிம் சமூகம்தான் நாட்டின் சட்டதிட்டங்களை மீறி, நீதிமன்ற உத்தரவுகளை மீறி போராட்டங்களை நடத்தி இன்று இனங்களுக்கு இடையில் பிளவுகள் இருக்கின்றன என்று சர்வதேசத்துக்கு பொய்ப்பித்தலாட்டம் ஆடுகின்றனர்.

இந்த நாட்டில் பிரச்சினையி ருந்தால் அதனை அரசுதான் தீர்க்க வேண்டுமே தவிர சர்வதேசத்தால் அதனைத் தீர்க்க முடியாது. பேரணி ஏற்பாட்டாளர்கள் இதனை கவனத்தில் கொள்ளவேண்டும், என்றார். (ஒ,5,22)

## உரிமைக் கோசங்களால்...

இலங்கை அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்தும் சர்வதேசத்திடம் நீதி கோரியும் முன்னெடுக்கப்படும் பேரணியின் நான்காம் நாள் வவுனியாவிலிருந்து நேற்று ஆரம்பமானது.

**வவுனியா**

வவுனியா புதிய பேருந்து நிலையத்தின் முன்பாக ஆரம்பித்த பேரணி மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியை அடைந்து அங்கிருந்து பசார் வீதி வழியாக ஹொறவப்பொத்தானை வீதியை அடைந்து பண்டாரவன்னியன் சிலையடியில் முற்றுப் பெற்றது.வவுனியா பெரிய பள்ளி வாசலுக்கு முன்பாக ஒன்றிணைந்திருந்த முஸ்லிம் மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் பேரணியுடன் ஒன்றிணைந்து பண்டாரவன்னியன் சிலை வரை சென்றிருந்தனர்.

பண்டாரவன்னியன் சிலைக்கு மரியாதை செலுத்தப்பட்டதுடன் பேரணி நிறைவுக்கு வந்தது. அங்கிருந்து புறப்பட்டு நெளுக்குளம் சந்தியில் மீண்டும் பேரணி ஆரம்பமானது. அதன் பின்னர் மன்னார் நோக்கிப் பேரணி பயணித்தது.

**மன்னார்**

பூவரசங்குளம், செட்டிக்குளம் ஊடாக, மன்னார் மாவட்டத்தை நேற்றுக் காலை 11.30 மணியளவில் பேரணி அடைந்தது. மன்னார் குஞ்சுக்குளம் பொலிஸ் சாவடியில் பேரணி தடுத்து நிறுத்தப்பட்டது. நீதிமன்றக் கட்டளை வாசிக்கப்பட்டபின் பொலிஸார் பேரணியை மன்னாருக்குள் செல்ல அனுமதித்தனர்.

மடு வீதியில் அமைந்துள்ள மடு அன்னையின் திருச்சொரூபத்துக்கு முன் மெழுகுதிரி ஏற்றி வழிபாடு செய்த பின்னர் உரிமைக் கோஷங்களை எழுப்பியவாறு பேரணி நகர்ந்தது. பின்னர் முருங்கனில் மீண்டும் நடைபவனி இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து மன்னார் நுழைவாயிலை அடைந்ததும் பொலிஸார் அங்கும் வாகனங்களின் இலக்கங்களை பதிவு செய்ததுடன் பேரணி தொடர்பாக நீதிமன்றத்தில் பெறப்பட்ட கட்டளையை ஒலிபெருக்கி மூலம் வாசித்து காட்டியபின் பேரணியைச் செல்ல அனுமதித்தனர். மன்னார் நகருக்குள் நுழைந்த பேரணியானது தந்தை செல்வா சிலைக்கு முன்னால் நிறுத்தப்பட்டது. மதத் தலைவர்களால் சிறிது நேரம் பேரணியின் நோக்கம் தொடர்பாக சிறிது உரையாற்றியதைத் தொடர்ந்து பேரணி மன்னாரிலிருந்து பி.ப. 1.30 மணியளவில் புறப்பட்டது.

**கிளிநொச்சி**

பின்னர் வெள்ளாங்குளம் ஊடாக மல்லாவி நகருக்குச் சென்றது. அங்கிருந்து மாங்குளம், திருமுறிகண்டி, இரணைமடுச் சந்தி ஊடாக சென்ற பேரணி கிளிநொச்சி டிப்போச் சந்தியை வந்தடைந்தது.

அதன்பின்னர் கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த உறவுகளை பேரணி ஏற்பாட்டாளர்கள் நேரில் சென்று சந்தித்தனர். பேரணி ஏற்பாட்டாளர்களில் ஒருவரான வேலன் சுவாமி நீராகாரம் வழங்கிப் போராட்டத்தை முடித்துவைத்தார்.

அதன்பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தில் கைதுசெய்து தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலையை வலியுறுத்திப் போராடி வருபவர்களையும் பேரணி ஏற்பாட்டாளர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

(ஒ,18,22,56,60,110,213)

## தமிழ்...

அமைந்துள்ளது. இன்று யாழ்ப்பாணத்தில் முற்றுப்பெறும் பேரணியிலும் முஸ்லிம் மக்கள் கட்டாயம் பங்கேற்க வேண்டும். இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன். (ஒ,5,22)

## பேரணி ஒன்றுக்கும்....

தமிழ் மக்களுக்கு எந்தவிதமான பயனும் கிடைக்கப்போவதில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தகால போராட்டங்கள் ஏமாற்றத்தையும், அழிவுகளையும் கொடுத்ததால் தற்போது போராட்டங்களில் தங்களுக்கு தயக்கம் இருக்கிறது என ஒருவர் கூறியிருந்தார்.

இந்தப் போராட்டம் சுயலாபம் கொண்டது. இதனால் எதுவும் நடக்கப்போவது இல்லை. மாகாண சபையை எதிர்த்தவர்களுக்கு ஒரு நீண்ட தூரப் பார்வை இருக்கவில்லை, ஆனால் அவர்களுக்கு ஒரு கட்டுப்பாடு இருந்தது. ஆனால் மாகாண சபையை ஏற்று நடத்தியவர்களுக்கு தூரப்பார்வை இருந்தது அவர்களிடம் கட்டுப்பாடு இல்லை. இதனால் அது விடுபட்டு போனது.

இந்த அரசுக்கு தென்னிலங்கையில் வலுச் சேர்க்கின்றார்கள். இந்த அரசின் காலத்தில் போராட்டங்களை செய்யலாம் எனவும், மறு பக்கம் மக்களிடமிருந்து வாக்குகளை அபகரிப்பதற்கும் பயன்படுத்துகின்றார்கள். இது அரசுக்குச் சார்பான போராட்டமே தவிர எங்களுடைய மக்களுடைய விடயங்களை வலுப்படுத்த வேண்டும் என்றோ அல்லது எங்களது மக்களுக்கான போராட்டமோ இல்லை - என்றார். (ஒ,இ)

## காணி விற்பனைக்கு உண்டு

இல.25. 3ம் குறுக்குத் தெரு. காங்கேசன்துறையில் (ஸ்ரேசனுக்கு பின்பக்கம்) கினற்றுடன் கூடிய காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. நேரில் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புக்கு:- **077 374 6008**

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி Ladies College இற்கு அருகில் சுமார் 3000 சதுர அடி அளவுள்ள மாபிள் பதிக்கப்பட்ட மேல் மாடி வீடு (Ground/First Floor) வாடகைக்குண்டு. 2 விசாலமான வரவேற்பறைகள். 6 படுக்கையறைகள். 3 நவீன குளியலறைகள் மற்றும் 2 சமையலறைகள் உண்டு. மின் விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன.

தொடர்புகளுக்கு: **077 350 7694**

Whatsapp **+ 447 401 708 819**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம். பரணி. 34 வயது. Bachelor of Software Engineering (இறுதி ஆண்டு) Australian Citizen மணமகனுக்கு பெற்றோர் பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு:

**077 260 4221, 071 4800 212**

## இயற்கை சிகிச்சை

உங்கள் அனைத்து விதமான நாள்பட்ட வலிகள்.மூட்டு வியாதிகள். முள்ளந்தண்டு பிரச்சனை.கொலஸ்ரோல். நீரிழிவு. உடல் பருமன். மற்றும் அனைத்து விதமான அழகு சிகிச்சைகளும் இயற்கை முறையில் சிகிச்சை அளிக்கப்படும்.

**264, ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**077 912 8944, 074 034 4447**

## தேவை

ஸ்ரான்லி வீதியில் கடை வாடகைக்கு அல்லது விற்பனைக்கு இருந்தால் தொடர்புகொள்ளவும்.

**T.P: 077 507 8272**

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

வாடிக்கையாளர் கவனத்திற்கு யாழ்ப்பாணத்தில் பொருட்களை மொத்தமாகவும். சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். 01.01.2021 ம் திகதியிலிருந்து இயங்கிவரும் கடையில் (07.02.2021) இன்று முதல் அழகுசாதன பொருட்கள். அன்பளிப்பு பொருட்கள். சில்வர் பொருட்கள். மாபிள் பொருட்கள். கிளாஸ் வகைகள். பிளாஸ்ரிக் பொருட்கள். கயிறு வகைகள். தையல் உபகரணங்கள். பாடசாலை உபகரணங்கள் போன்றவை அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

**சரவணபவன் பான்சிகவுஸ்**
26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: **தே.கலைத்தாசன் (கரன்)**

**077 4683 354**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவில் இயங்கிக்கொண்டிருக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பொருள்கள் மற்றும் சிறு பிள்ளை களுக்கான விளையாட்டுப் பொருள்கள் விற்பனை செய்யும் நிறு வனத்துக்கு சகல வேலைகளுக்கு ஆண். பெண் இருபாலாரும் தேவை.

**குறிப்பு:** புடைவை விற்பனையில் அனுபவம் உள்ளவர்களுக்கும் அண்மையில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**021 221 3323, 076 264 8766**

## விற்பனைக்கு

Lion sherpet பெண் நாயும்.
கூடும்
**077 9414 288**

## ICT வகுப்புக்கள்

**A/L,O/L ICT** வகுப்புக்கள்
தனிப்பட்ட வகுப்புக்களாகவோ.
குழு வகுப்புக்களாகவோ கொடுக்கப்படும்.
**ஆசிரியர்: திரு. S.சத்தியன்** (B.Sc) PGDE
**இடம் : யாழ்நகர், சாவகச்சேரி.**

**077 271 8498**

## வடமாகாணத்தில்...

**யாழ் மற்றும் வவுனியா நகரில் இளைஞர் யுவதிகளுக்கான சுயதொழில் கற்கைநெறிகள் ஆரம்பம்**

**12.02.2021 முதல் புதிய பிரிவுகளுக்கான அனுமதிகள் தற்பொழுது நடைபெறுகின்றன...**

- ★ புதிய ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்த்து காத்திருப்பவர்கள் மற்றும் இலங்கையில் புதிதாக தொழில் ஒன்றை ஆரம்பிக்க இருப்பவர்களுக்கான அரிய சந்தர்ப்பம்.!
- ★ இது ஒரு சுய தொழில். மிக குறுகிய காலம். மிக சிறிய இடம். மிக சிறிய முதலீட்டில் செய்யக்கூடிய ஒரு தொழில்.
- ★ மாதம் ரூபா.150,000 இற்கு மேல் சம்பாதிக்கக் கூடிய ஒரு சுயதொழில் ஒன்றை கற்றுக் கொள்ள இன்றே இணைந்து கொள்ளுங்கள்.
- ★ உள்நாடு. வெளிநாடுகளில் அதிகமான வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தரக்கூடிய தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பம்..!

- ✓ PROFESSIONAL CCTV TRAINING COURSE (Just 3 Days)
- ✓ MOBILE PHONE REPAIRING COURSE (Just 4 Days)
- ✓ COMPUTER HARDWARE & NETWORKING, CYBERCRIME COURSE (Just 3 Days)
- ✓ HOUSE WIRING COURSE - ELECTRICAL (Just 5 Days)
- ✓ வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர் பாடநெறி (King's RJ)

**மேற்குறிப்பிட்ட அனைத்து கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்.**

இம்மாதம் 12ம் திகதி முதல் அனைத்து வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

- ✓ பதிவுக் கட்டணம் 2500/-
- ✓ பாடநெறிக் கட்டணம் 15000/- மட்டுமே.

உடன் பதிவுகளுக்கு முந்துங்கள்.

யாழ் பதிவுகளுக்கு :- 0777 24 25 83 / 021 43 666 76
வவுனியா பதிவுகளுக்கு :- 0777 60 69 17 / 024 561 5610

**ITA - INTERNATIONAL TECH ACADEMY**
**No.160, 2nd Cross Street, Jaffna.**
**TP: 021 43 666 76 / 0777 24 25 83**

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

**af பிரெஞ்சு மொழி**



- ➢ யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- ➢ அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- ➢ தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- ➢ French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

**021 222 8093** 17, Kandy Road, Jaffna

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 09 . 05 . 1952

இறப்பு 08 . 01 . 2021

### அமரர் உயர்திரு பொன்னுத்துரை தர்மேந்திரன்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - கல்வித்திணைக்களம்)

*திதி: கிருஷ்ணபட்சத் தசமி*

கடந்த 08.01.2021 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (07.02.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

அன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும் அவரின் மறைவுச் செய்தி கேட்டும் ஓடோடி வந்து எமக்குப் பல்வேறு வகைகளில் ஒத்துழைப்பு நல்கிய அன்புள்ளங்களுக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய உற்றார். உறவினர். நண்பர்கள். அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் உள்ளூரிலும். வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலமாகவும். பதாகைகள். சமூக வலைத்தளங்களிலும். கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தும். வெளியிட்டும். மலர் வளையங்கள் சாத்தியும். இரங்கல் தெரிவித்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குறிப்பு:** தற்போது நிலவும் **கொரோனாத்** தொற்றுக்காரணமாக அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைவரையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுக்கு அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

**இல.14, செல்லர் லேன்,**
**செம்மணி றோட், நல்லூர்.**

**குடும்பத்தினர்**

## பணியாளர் தேவை

**யாழ்நகரில் இயங்கும் பிரபல நகை காட்சியறைக்கு ஆண் / பெண் பணியாளர் தேவை.**

சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்

**லலிதா ஜுவல்லறி**
**இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 2863**

## கட்டடம் வாடகைக்கு தேவை

கிளிநொச்சி நகரப் பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அலுவலக தேவைக்கு சிறிய கட்டடம் வாடகைக்குத் தேவை. (A9 வீதியுடன் அண்மையில் இருத்தல் விரும்பத்தக்கது)

**077 9592 628**






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.02.2021இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மலை : 33
வள்ளுவர் ஆண்டு : 2051
தை 25
ஞாயிற்றுக்கிழமை (07.02.2021)
சிகரம் : 34

Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

பொத்துவில் முதலாய் பொலிகண்டியீறாக பெருங்குரலில்
சத்தமிட்டே நம்முரிமைக் கோரிக்கை சொல்லி– அத்துவான
வெளியெல்லாம் கடந்து தொலைதூரம் நடந்திங்கே
உளியாகி செதுக்கியதெல்லாம் கேட்குமா உலகினி?
—ஒட்டுக்குழுச் சுவாமிகள்



# காட்டுக்குள் வேட்டு: நடந்தது என்ன?

## 'சுடச் சுட' ஒரு களமுனை 'ரிப்போர்ட்'

பா.குமுதன்

**01.02.2021**

திங்கட்கிழமை.
இருளும் பகலும் கலந்த மாலை மைம்மல்.

" பட்! பட்...! பட்ட்ட்!"
பேரமைதியோடு நீண்டு படுத்திருந்த செட்டிகுளம்- முசல்குத்தி காடு, திடீர் வேட்டோசைகளால் திடுக்கிட்டெழுந்தது. அதன் அத்தனை அமைதியும், ஒரு சில நிமிட நேர வேட்டோசைகளோடு தொலைந்து போக, காட்டுக்குள் கூச்சலும், கூக்குரலும் மாறிக்மாறி கேட்கத் தொடங்கின. தொடர்ந்து வாகனங்களின் உறுமல். படைகளின் அளவுக்கு மிஞ்சிய நடமாட்டம். ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டது.
சற்றைக்கெல்லாம் - மாலை 6 மணியளவில்-
செட்டிகுளம் பிரதேச மருத்துவமனையில் துப்பாக்கிச் சூட்டுக்காயத்தோடு இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் அனுமதிக்கப்பட்டார். காயம் பட்டவர் ஊரவர் என்பதால் மக்கள் என்ன நடந்தது என்று அறிய அங்கலாய்த்தனர். அந்த இளைஞருக்கு தற்காலிகமாக முதலுதவி வழங்கபட்டே, அங்கு சேர்க்கப்பட்டிருந்தார். காயம் கொஞ்சம் பாரதூரமானது என்பதால் அங்கிருந்து வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு அந்த இளைஞர் பொலிஸ் பாதுகாப்போடு கொண்டு செல்லப்பட்டார். அங்கே அவருக்கு சிகிச்சை ஆரம்பித்திருந்த சமயத்தில், இலங்கை பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்ததாக சிங்கள ஊடகமொன்று , முசல்குத்தி காட்டுக்குள் நடந்ததாகக் கூறி செய்தியொன்றை வெளியிட்டது.

### ஆயுதக்குழு சுட்டதாம்


"வவுனியா செட்டிகுளம் வில்பத்து வனப்பகுதியில் இராணுவத்துக்கும் ஆயுதங்களுடன் இருந்த குழுவொன்றுக்கும் இடையில் பரஸ்பரம் துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அங்கு பதற்றநிலை இடம்பெற்றுள்ளது. ஆயுதங்களுடன் இருந்த மூன்று நபர்களே இராணுவத்தை இலக்கு வைத்து இவ்வாறான தாக்குதலை மேற்கொண்டனர். 22 பேரைகொண்ட படையணி ஒன்று வில்பத்து வனப்பகுதியில் கடமைகளுக்காக சென்றபோது இந்த துப்பாக்கிபிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் ஒருவர் காயமடைந்த நிலையில் கைது செய்யப்பட்டார். ஏனையஇருவரும் தப்பிச் சென்றுவிட்டனர்" இதுதான் அந்த ஊடகம் வெளியிட்ட செய்தி. பொலிஸாரை ஆதாரங்காட்டி வெளியான அந்தச் செய்தியையே தமிழ் ஊடகங்களும் பிரசுரித்திருந்தன.
வடக்கில் ஒரு காட்டுப் பகுதியில் படையினர் மீது குழுவொன்றால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றால் அது எவ்வளவு பாரதூரமான விடயம். நாட்டின் பாதுகாப்புக்கே விடுக்கப்பட்ட சவால் அல்லவா? இந்தச் சம்பவம் நடந்த பின்னரும், அங்கு படைகளைக் குவித்து தப்பியோடியோரைத் தேடவோ, சுற்றிவளைப்புச் செய்யவோ இராணுவத்தினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்படி ஒரு சூட்டுச் சம்பவத்தின் பின்னரும் படைத்தரப்பு காட்டிய அதீத மௌனம் மக்களுக்குச் சந்தேகத்தை உண்டுபண்ணியிருந்தது. அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்யும் நோக்குடன் நமது புலனாய்வு அணியும் களத்தில் இறங்கியது.

### மரவேட்டை

30.01.2021 சனிக்கிழமை மாலை.
ராஜு, பிகிராடோ, ....ஆகிய மூவரும் காட்டுப்பகுதிக்குச் சென்றனர். வழக்கமாக காட்டுக்குச் செல்லும் இவர்கள் தமக்குத் தேவையான மரங்களை வெட்டி வீழ்த்தி, அவற்றை யாருமறியா வண்ணம் சைக்கிள் மூலமாக காட்டிலிருந்து வெளியே கொண்டு வருவார்கள். இதனால் சில நாள்கள் காட்டுக்குள்ளேயே தங்கவேண்டியிருக்கும். அன்றைக்கும் அப்படி தங்கி நின்று தங்கள் 'வேலையை ' முடிக்க நினைத்தனர். ஆனால் அவர்கள் எடுத்துச் சென்ற உணவு முடிந்து விட்டதால் தங்கள் நண்பர் ஒருவருக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார்கள்..அவரும் காட்டுக்குள் நுழைந்து இவர்கள் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து, உணவையும் தண்ணீரையும் கொடுத்துவிட்டுச் திரும்பிச்சென்றிருந்தார். இரண்டு நாள்கள் கழிந்திருந்தன. மரங்களும் வெட்டியாயிற்று. உணவும் முடிந்திருந்தது. பசியும், களைப்பும் போட்டி போட்டுக் கொண்டு வாட்டின.
"சரி, வெளிக்கிடுவம்" பெப்ரவரி முதலாம் திகதி, சைக்கிள்களில் மரக்குற்றிகளை ஏற்றிக்கொண்டு, அவற்றைத் தள்ளியபடி ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினர். அப்படி நடந்து வந்துகொண்டிருந்தபோதுதான் அந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்தது.

> "பயத்தில ஓட , கலைச்சு சுட்டாங்கள்...."

" அண்டைக்கு மரங்களை வெட்டினபிறகு அதை ஊருக்குள்ள கொண்டு வாறதுக்காக சைக்கிளில வைச்சு உருட்டிக் கொண்டு வந்தம். நல்லமழை பெஞ்சிருந்ததால பாதை ஒரே சேறும் சகதியும். அதால மரத்தை வைச்சு உருட்டிக் கொண்டுவர சரியான கஷ்டமா இருந்திச்சு. அப்பதான் " மரங்களை இங்கஒளிச்சு வைச்சிட்டு பிறகு வந்து எடுப்பம்"எண்டு சொன்னாங்கள்.
அதுவும் நல்ல ஐடியாவா இருந்திச்சு. அதால அப்பிடியே மரங்களையும், சைக்கிள்களையும் பதுக்கி வைச்சிட்டு திரும்ப நடக்கத் துடங்கினம். ,
வாறவழியிலதான் பேராறு இருக்குது.. முட்ட முட்ட தண்ணி ஓடிகொண்டிருந்திச்சு. நேரமும் 5 மணியாகிட்டு. எப்படியும் ஊருக்கு நடந்து போக இன்னும் 2 மணித்தியாலமாவது தேவை . இருட்டிறத்துக்கு முன்னம் காட்டைத்தாண்டி போகவேணும் எண்ட எண்ணத்தில , அவசரமாக பேராற்றில குளிச்சுப் போட்டு பழையபடி நடக்கதொடங்கினம்.. இது வழமையா நாங்கள் போய்வாற காடு தான் . பழக்கமான றோட்டு எண்ட படியால் ஒரு பயமும் இருக்கேல்ல.
இப்பிடியே நடந்து, நடந்து ஒரு ஒற்றையடிப்பாதைக்கு கிட்ட போய்க்கொண்டிருந்தம். றோட்டுக்கு ரெண்டுபக்கமும் பெருங்காடு..அதுக்குள்ள இருந்து திடீரெண்டு துவக்கையும் நீட்டிக்கொண்டு ஆமிக்காரர் எழும்பினாங்கள். எங்களுக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேலை.ஒரு நாளும் இப்பிடி நடந்ததும் இல்லை.நடுக்காட்டுக்க ஆமியைக் கண்டால் எந்த மனுசன் எண்டாலும் பயம் வரும் தானே .எவனும் ஓடத்தானே செய்வான். நாங்களும் ஒவ்வொரு திக்கில மூண்டு பேரும் ஓடத் துடங்கினம். அந்தச் சமயத்தில யாரையும் பார்க்க ஏலாது. நாங்கள் பயத்தில ஓடுறதைப் பார்த்து, ஆமிக்காரங்கள், துவக்கால எங்களைப் பாத்து கலைச்சு கலைச்சு சுடத்தொடங்கிட்டாங்கள்..
'சட சட' வெண்டு கண்டபாட்டுக்கு சுட்டாங்கள். கிட்டத்தட்ட 15 தரம் வெடி வைச்சிருப்பாங்கள். உயிரைப்பிடிச்சுக் கொண்டு மூண்டு பேரும் வேற வேற பக்கத்தில ஓடினதால ஆருக்கு என்ன நடந்தெண்டு மற்ற ரண்டு பேருக்கும் தெரியவேயில்லை. அப்பிடியே ஓடி ஓடி, ஒருமாதிரி காட்டுப்பாதைய பிடிச்சு 7 மணி போல வீட்டை வந்திட்டன். வந்தபிறகு தான் ராஜுவுக்கு காயமெண்டு அறிஞ்சன்." என்று மயிரிழையில் தான் உயிர் பிழைத்த அன்றைய நாளை விபரித்து முடித்தார் பிகிராடோ. காட்டுக்குள் மரம் வெட்டப்போனவர்களில் இவரும் ஒருவர்.
மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த பிகிராடோ, செட்டிக்குளத்தில் தான் திருமணம்முடித்திருந்தார். கடற்றொழிலே இவரது பிரதான தொழில் என்றாலும், காடுகளைப் பார்ப்பதிலும், அலைவதிலும் இவருக்கு அலாதிப் பிரியமாம். அதனாலேயே கடந்த இரண்டு மாதமாக இந்தக் காட்டுமரம் வெட்டுக்குழுவோடு சென்றிருக்கிறார். இதன்போதே துப்பாக்கி பிரயோக அசம்பாவிதம் நடந்து முடிந்திருந்தது.



(18.ஆம் பக்கம் பார்க்க)

# மரபுரிமை ஆக்கிரமிப்பும் தமிழ் அறிஞர்களின் பொறுப்பும்



நிலாந்தன்

உருத்திரபுரம் சிவன் ஆலயத்துக்கும் ஆபத்தா? தொல்லியல் திணைக்களம் அவ்வாலயச் சூழலில் அகழ்வாராய்ச்சிகளைச் செய்ய முயற்சிக்கிறது எனச் செய்திகள் வருகின்றன. தையிட்டியில் ஒரு பிரமாண்டமான விகாரைக்கு இராணுவத் தளபதி அடிக்கல் நாட்டியிருக்கிறார். எனது கடந்தவாரக் கட்டுரை ஒன்றில் எழுதியது போல கிழமைக்கு ஒரு பிரச்சினையைக் கிளப்பி, தமிழ் அரசியல்வாதிகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் குடிமக்கள் சமூகங்களின் கவனத்தை அரசாங்கம் திசைதிருப்பி வருகிறது. இக்கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கையில்கூட, எங்காவது ஒரு மரபுரிமைச் சின்னம் அல்லது சைவ ஆலயம் தொல்லியல் திணைக்களத்தின் பார்வைக்குள் வந்திருக்கலாம்.

ராஜபக்சக்களின் இரண்டாவது வருகைக்குப்பின் சிங்கள பௌத்த மயமாக்கல் இப்படித்தான் முன்னெடுக்கப்படுக்கிறது. இது விடயத்தில் தமிழ் மக்களின் எதிர்ப்பு அரசாங்கத்துக்கு நோகக்கூடியவைகளாக அல்லது அனைத்துலக சமூகத்தின் கவனத்தை ஈர்க்கக்கூடியவையாக இல்லை.

கடந்த 3ஆம் திகதியில் இருந்து வடக்கு கிழக்கு சிவில் சமூகம் என்ற ஓர் அமைப்பு ஒரு கவனவீர்ப்பு எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கிறது. பொத்துவிலில் தொடங்கி பொலிகண்டி வரை என்ற பெயரிலான இந்தக் கவனவீர்ப்பு நடவடிக்கை எந்த அளவுக்கு அரசாங்கத்தின் கவனத்தையும் வெளி உலகத்தின் கவனத்தையும் ஈர்க்கக்கூடும் என்பதனை அதன் விளைவுகளை வைத்தே மதிப்பிடலாம். தொடக்கத்தில் மிகக் குறைந்த தொகையினர் அதில் பங்குபற்றினார்கள். ஆனால் அடுத்தநாளில் அதிக தொகையினர் இணைந்திருக்கிறார்கள். குறிப்பாக முஸ்லிம் கிராமங்களில் நாலாயிரத்துக்கும் குறையாதவர்கள் பேரணியில் பங்கெடுத்திருந்தார்கள்.

நில ஆக்கிரமிப்பைப் பொறுத்து தமிழ் மக்கள் மூன்று தளங்களில் போராட வேண்டியிருக்கிறது. முதலாவது, நாட்டுக்குள் இரு முனைப் போராட்டங்களை நடத்தவேண்டும். அதில் முதலாவது புதிய அகிம்சை வழியிலான எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டும். அரசாங்கத்தாலோ அல்லது வெளி உலகத்தாலோ நிராகரிக்கப்பட முடியாத அளவுக்கு போராட்டங்கள் சக்தி மிக்கவைகளாக அமையவேண்டும்.

இரண்டாவது சட்டரீதியான நடவடிக்கைகள். நில ஆக்கிரமிப்பு எனப்படுவது அரசாங்கம் ஏற்கனவே உருவாக்கி வைத்திருக்கும் சட்டங்களின் பிரகாரமே முன்னெடுக்கப்படுகிறது. எனினும் இது விடயத்தில் இலங்கைத்தீவின் நீதி பரிபாலன நடைமுறைகளை பரிசோதிக்கும் விதத்திலும் வெளியுலகத்துக்கு அம்பலப்படுத்தும் விதத்திலும் தமிழ் வழக்கறிஞர்கள் சட்டரீதியிலான தமது நடவடிக்கைகளை ஒருபுறம் முன்னெடுக்கலாம்.

இவை இரண்டும் தாயகத்தில் தமிழ் மக்கள் முன்னெடுக்க வேண்டிய இருமுனைப் போராட்டங்கள். அதேசமயம் தாயகத்துக்கு வெளியே உலக சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் புலம் பெயர்ந்த தமிழ் மக்களையும் தமிழகத்தையும் இணைத்து நில ஆக்கிரமிப்புக்கு எதிராக வெகுசன எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கலாம். அங்கேயும் உலகின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் புதிய படைப்பாற்றல் மிக்க போராட்ட வழிமுறைகள் குறித்து சிந்திக்கலாம்.

இவை இரண்டையும் தவிர மூன்றாவதாக ஒரு விடயத்தை தமிழ்மக்கள் செய்ய வேண்டி இருக்கிறது. அதுவும் உள்நாட்டில்தான். அது தமிழ்ப் புலமையாளர்களுக்கு உரிய ஒரு பணி. தமிழ்ப் புலமையாளர்களுக்கு இதுவிடயத்தில் குறைந்த பட்சம் அவர்களுடைய அறிவியல் ஒழுக்கம் சார்ந்த ஒரு பொறுப்பு இருக்கிறது. அவர்கள் இனம் சார்ந்து கருத்தைக் கூறவேண்டும் என்று இக்கட்டுரை கேட்கவில்லை. ஆனால் அவர்களுக்கேயான புலமை ஒழுக்கத்துக்கூடாக அவர்கள் உண்மைகளை நிரூபிக்க வேண்டும். இலங்கைத் தீவின் மதப் பல்வகைமை, மரபுரிமைப் பல்வகைமை போன்றவற்றை அவர்கள் கேள்விக்குட்படுத்த வேண்டும்.

தமிழ் பௌத்தம் எனப்படுவது தமிழ் தேசியத்துக்கு எதிரானது என்றொரு கருத்து ஒரு பகுதி தமிழ்மக்கள் மத்தியில் உண்டு.

இல்லை. தமிழ் பௌத்தம் எனப்படுவது தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு காலகட்ட வரலாற்று யதார்த்தம். அதை மாற்றி எழுத முடியாது. தமிழ் மக்கள் மத்தியில் பௌத்தம் ஒரு காலகட்டத்தில் பயிலப்பட்டிருக்கிறது. பின்னர் சைவசமயப் பக்தி இயக்கத்தின் எழுச்சியோடு பௌத்தம் பின்வாங்கியிருக்கிறது. தமிழில் காப்பிய காலம் எனப்படுவது பௌத்த சமண காலகட்டம்தான்.

> **மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டிய ஒரு அறிவியல் பொறுப்பு தமிழ் புலமையாளர்களுக்கு உண்டு.தமிழ் வரலாற்று அறிஞர்களும் தொல்லியல் நிபுணர்களும் இந்தப் பொறுப்பை உணர்ந்து, சமூகத்துக்குரிய தமது காலத்துக்குரிய கடமையைச் செய்ய முன்வரவேண்டும்.**

தமிழில் எழுதப்பட்ட ஐம்பெரும் காப்பியங்களும் ஒன்றில் சமண காப்பியங்கள் அல்லது பௌத்த காப்பியங்கள்தான். காப்பியச் செழிப்புக்கு அடிப்படையான சமூகப் பொருளாதார அரசியல் பண்பாட்டு வளர்ச்சி என்பது அக்கால கட்டங்களில்தான் உருவாகியது என்று பொருள். அது தமிழுக்கே செழிப்பு. தமிழ் வரலாற்றில் அதை காப்பிய காலம் என்று தமிழர்கள் கொண்டாடிக்கொண்டு, அதை நவீன அரசியலுக்கு எதிரானதாகத் திருப்புவதற்கு எந்த அறிவியல் அடிப்படையும் இல்லை ,அரசியல் அடிப்படையும் இல்லை. தமிழ் அடையாள உருவாக்கத்தில் பௌத்தத்துக்கும் ஒரு பங்குண்டு.

எனவே தமிழ் பௌத்தத்தை தமிழ் தேசியத்துக்கு எதிரானதாகக் கற்பனை செய்யத் தேவையில்லை. தேசியம் எனப்படுவது மதப் பல்வகைமையின்மீது, மரபுரிமைப் பல்வகைமையின்மீது மக்களைத் திரளாக்குவதுதான். இது விடயத்தில் மதப்பல்வகைமை மரபுரிமைப் பல்வகைமை என்பவற்றை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். எனவே தமிழ் பௌத்தம் இருந்தது என்பது குறித்து தமிழ் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அதேசமயம் பௌத்தத்தை ஓர் ஆக்கிரமிப்புக் கருவியாக பயன்படுத்தும் அரசியலைத்தான் கேள்விக்கு உட்படுத்த வேண்டும். பௌத்தத்தை, பௌத்த மரபுரிமைச் சொத்துக்களை ஆக்கிரமிப்பின் கருவியாக மத மேலாண்மையின் கருவியாக தொல்லியல் துறையோ அல்லது வேறு எந்தத் திணைக்களமோ பயன்படுத்துவதைத்தான் தமிழ்ப் புலமையாளர்கள் அம்பலப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் பண்பாட்டு வேர்கள் குறித்தும் மதப் பல்வகைமை யதார்த்தத்தை குறித்தும் தமது ஆய்வு ஒழுக்கங்களூடாக உண்மைகளை வெளிக்கொண்டு வரவேண்டிய ஒரு பொறுப்பு தமிழ்க் கல்விமான்களுக்கும், அறிஞர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் உண்டு. இது விடயத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை உள்பட நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள தமிழ் அறிஞர்கள் ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்?



மிகச் சில பலவீனமான குரல்களைத் தவிர இதை ஒரு புலமைப் பொறுப்பாக ,புலமைசார் கடமையாக,புலமைச் சவாலாக எடுத்துக்கொண்டு தமது ஆராய்ச்சிகளின் மூலம் உண்மையை வெளியில் கொண்டுவர பெரும்பாலான தமிழ்ப் புலமையா ளர்கள் ஏன் முன்வரவில்லை?


இது விடயத்தில் சிங்களப் புலமையாளர்களான கலாநிதி ஜூட் பெர்னாண்டோ, நீரா விக்ரமசிங்க, ஜெகத் வீரசூரிய போன்றோரின் துணிச்சலான முன்னுதாரணத்தை தமிழ்ப் புலமையாளர்களும் பின்பற்ற வேண்டும். கடந்த மாதம் 21ஆம் திகதி இயற்கை எய்திய கலாநிதி.மாலதி டி அல்விஸ் போன்றவர்களின் முன்மாதிரிகளை பின்பற்றவேண்டும்.

ஆராய்ச்சி முடிவுகளை இனம் சார்ந்து திரிக்கவோ அல்லது சிதைக்கவோ தேவையில்லை. அறிவியல் உண்மைகள் எப்பொழுதும் உண்மைகள்தான். பூமி தட்டை என்று திருச்சபை சொன்னதால் அது தட்டையாகி விடவில்லை. அது உருண்டையாக அப்போதும் இருந்தது ;இப்போதும் இருக்கிறது. கலிலியோவுக்கு முன்னும் அது உருண்டைதான். கலிலியோவுக்கு பின்னும் அது உருண்டைதான். எனவே தமிழறிஞர்கள் இது விடயத்தில் தமது அறிவியல் ஒழுக்கத்துக்கூடாக உண்மைகளை வெளிக்கொண்டு வரவேண்டும்.

இனம் சார்ந்துகூடச் சிந்திக்க வேண்டிய தேவை கிடையாது. இப்படிப் பார்த்தால் நிகழும் மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டிய ஒரு அறிவியல் பொறுப்பு தமிழ் புலமையாளர்களுக்கு உண்டு. தமிழ் வரலாற்று அறிஞர்களும், தொல்லியல் நிபுணர்களும் இந்தப்பொறுப்பை உணர்ந்து, சமூகத்துக்குரிய தமது காலத்துக்குரிய கடமையைச் செய்ய முன்வரவேண்டும். சில மாதங்களுக்கு முன்பு நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தின் தொடக்க உரைகளின்போது வரலாற்று உண்மைகளை முன்வைத்து உரை நிகழ்த்தினார்.

இதுவிடயத்தில் அவர் பெருமளவுக்கு தமிழில் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மூத்த வரலாற்று ஆய்வாளர்களின் ஆய்வு முடிவுகளை முன்வைத்தே தமது உரைகளைத் தொகுத்திருந்தார்.

(03ஆம் பக்கம் பார்க்க)




# காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளல்

○ ந.பரமேஸ்வரன்

சந்தர்ப்பத்துக்கு ஏற்ப சர்வதேசத்தை அல்லது தமக்குத்தேவையானவர்களை வளைத்துப்போட்டு காரியமாற்றுவதில் சிங்கள ஆட்சியாளர்களுக்கு நிகர் சிங்கள ஆட்சியாளர்களே. பிரித்தானியரின் ஆட்சிக்காலம் தொட்டு இன்று வரை இந்தச் செயற்பாட்டை அவர்கள் 'அச்சொட்டாக' முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை பிரிட்டனின் குடியேற்ற நாடாக இருந்த காலத்தில் சிங்களம், தமிழ் என்ற இரண்டு பலம் பொருந்திய அரசியல் அணிகள் செயற்பட்டுக்கொண்டிருந்தன. வடக்கில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் , திராவிடர் கழகத்தினரின் உரைகளை பிரதி பண்ணி "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று முழங்கினார். அப்போது தெற்கில் டி.எஸ். தலைமையிலான அணி ஆட்சி நடத்திக் கொண்டிருந்தது. சோல்பரி பிரபு இலங்கையின் ஆளுநராக (Governor General) இருந்தார். டி.எஸ். சேனநாயக்கா சோல்பரி பிரபுவின் வீட்டில் நாற்பது சிங்கள யுவதிகளை பணிக்கு அமர்த்தியிருந்தார். "சோல்பரியின்ர வீட்டிலை வேலை செய்யிறதுக்கெண்டு நாற்பது குமரியளை டி.எஸ். சேனநாயக்க விட்டிருக்கிறார்" என இந்தச் செயலை நக்கலடித்தார் ஜீ.ஜீ பொன்னம்பலம். யாழ்ப்பாணத்து 'மறத்தமிழர்களும் ' ஜீ.ஜீ.யின் இந்தப் பேச்சைக்கேட்டு விழுந்து விழுந்து சிரித்தனர்.

டி.எஸ். சேனாநாயக்க சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமராக பதவியேற்றார்

அப்போது சுதந்திரப் பிரகடனம் முடிந்ததும் டி.எஸ். தனது உதவியாளரிடம் "பார், பொன்னம்பலம் வந்து என்னை 'சேர்' என்று அழைப்பார் "எனக் கூறியிருந்தார். உதவியாளர் அப்படி நடக்குமென்று துளியும் நம்பவில்லை. ஏனெனில் அதற்கு முதல்வரை டி.எஸ். சேனநாயக்கவை மிக மோசமாக ஜீ.ஜீ விமர்சித்து வந்தவர். எனவே தன் பரமவைரியை ஜீ.ஜீ " சேர்" என அழைத்து உறவாடுவார் என எவர்தான் எதிர் பார்ப்பர்?

ஆனால் எதிர்பாராததே நடந்தது.டி.எஸ் கணித்தது போன்று, " ஹலோ சேர்" என்று டி.எஸ்ஸுக்கு கைலாகு கொடுத்தார் ஜீ.ஜீ பொன்னம்பலம். கூடவே அமைச்சர் பதவியையும் ஏற்றுக்கொண்டார்.

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சின்னமேளம் என்று சொல்லப்பட்டோரும் தேவதாசிகளும் இருந்தனர். வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் கனகி என்ற பெயரில் ஒரு தேவதாசி இருந்தார். கனகியின் கடைக்கண் பார்வைக்காக யாழ்ப்பாணத்து பெருந்தனவந்தர்கள் வரிசையில் காத்திருந்தனர். ( யாருக்காவது சந்தேகமிருந்தால் ஏழாலை நட்டுவச் சுப்பையனார் எழுதிய 'கனகி புராணம்' என்ற நூலை எடுத்துப்பார்க்கவும்)

ஒருவேளை இந்தக் கனகியை "சேர், இவர்தான் யாழ்ப்பாணத்தவர்களின் கனவுக்கன்னி" என சோல்பரியிடம் ஜீ.ஜீ அறிமுகப்படுத்தியிருந்தால், அவர் கோரியது போல, 50க்கு 50 அதிகாரம் கிடைத்திருக்குமே என அப்போது பலரும் நகைச்சுவையாகத் தமக்குள்ளே கதைப்பதுண்டு.

இலங்கையில் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பமான காலத்தில் உலகம் இரண்டு அணிகளாக பிளவுபட்டிருந்தது. ஒன்று ரஷ்ய சார்பு அணி, மற்றையது அமெரிக்க சார்பு அணி பனிப்போர்க் காலம் என்று இந்தக்காலப்பகுதி வர்ணிக்கப்படுகிறது. பனிப்போர்க் காலத்தில் இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி, ரஷ்யாவுடன் நெருக்கமான உறவைப் பேணி வந்தார். ஜே.ஆர்.இந்தியாவின் பரம எதிரியான பாகிஸ்தானுடனும், அமெரிக்காவுடனும் நெருக்கமான உறவைப் பேணி வந்தார். அமெரிக்க ஜனாதிபதி றீகன், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். , பாகிஸ் தான் ஜனாதிபதி ஸியா உல் ஹக் என மூன்று பலம் பொருந்திய இராஜதந்திரிகளுக்கும் ,சேலை அணிந்த நாணமுள்ள இந்தியப்பெண் இந்திரா சவால் விட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு முறை இந்திராகாந்தி றீகனுடன் கைகுலுக்கிய போது கூச்சப்பட்டதைப் பார்த்து வியந்த றீகன் "இவ்வளவு நாணமுள்ள ஒரு பெண் எப்படி இவ்வளவு பெரிய தேசத்தை ஆட்சி செய்கிறார்?" என ஊடகவியலாளர் மத்தியில் கூறியிருந்தார். இலங்கையில் அமெரிக்கா கால் பதிப்பதை தடுக்கும் நோக்குடன் இந்தியா தமிழ்ப்போராளிகளுக்கு ஆயுதப்பயிற்சி அளித்தது. ஆயுதப்போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் தமிழர்களின் பிரச் சினையைத் தீர்த்து வைக்குமாறு பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தனது பிரதிநிதியாக ஜி.பார்த்தசாரதியை அனுப்பினார் இந்திரா காந்தி.

பார்த்தசாரதி இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பற்றி நன்கு அறிந்தவர். அவர் ஜே.ஆருடனான பேச்சுவார்த்தையின் போது உச்சபட்ச அதிகாரப்பகிர்வை வலியுறுத்தினார். இதனால் எரிச்சலடைந்த ஜே.ஆர், பார்த்தசாரதியை விடுத்து வேறு யாரையாவது அனுப்புமாறு இந்தியாவிடம் கோரினார். பார்த்தசாரதிக்குப் பதிலாக ரொமேஷ் பண்டாரியை அனுப்பியது இந்தியா.ரொமேஷ் பண்டாரிக்கு ஒரு விலை உயர்ந்த நவரத்தினக்கல் பதித்த மோதிரமொன்றை ஜே.ஆர் அன்பளிப்புச்செய்தார்;

ரொமேஷ் பண்டாரி பேச்சுவார்த்தையின்போது பார்த்தாரதியைப்போல் இறுக்கமாக இருக்கவில்லை நெகிழ்வுப்போக்கைக் கடைப்பிடித்தார். இந்திரா காந்தியின் கொலையைத்தொடர்ந்து ராஜீவ்காந்தி இந்தியப்பிரதமராக பதவியேற்றார். அரசியல் அனுபவமில்லாத ராஜீவ்காந்தியைப் பார்த்து "எனக்கு உங்களது தாத்தாவைத் தெரியும், உங்களது அம்மாவையும் தெரியும்; உங்களது வயது, எனது அரசியல் அனுபவம்" என்று சொன்ன ஜே.ஆர் அரசியல் அனுபவமில்லாத ராஜீவ் காந்தியை தனது வலையில் வீழ்த்தி இந்திய இராணுவத்தை புலிகளுக்கு எதிராக யுத்தம் புரியச்செய்தார்.

புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையே யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் ஜே.ஆர் "நான் மத்தியஸ்தம் செய்வதற்கு ஒருவரை அழைத்தேன், நான் அழைத்த மத்தியஸ்தர் இப்போது மைதானத்தினுள் இறங்கி விட்டார்" என சர்வதேச ஊடகமொன்றுக்கு பேட்டியளித்திருந்தார்.

இறுதிப்போர் நடந்தபோது, மகிந்த ராஜபக்ச ஒருவராலும் செய்ய முடியாத சாதனையொன்றை நிகழ்த்தினார். காலாதிகாலமாக பகைமை பாராட்டும் நாடுகள் அனைத்தையும் ஒரே நேர்கோட்டில் கொண்டு வந்தார். இந்தியாவும் பாகிஸ்தானும் பகை நாடுகள், அதே போல் இந்தியாவும் சீனாவும் பகை நாடுகள், அமெரிக்காவும் ரஷ்யாவும் பகை நாடுகள், அமெரிக்காவும் சீனாவும் வல்லாதிக்க போட்டியில் ஈடுபட்டுள்ள நாடுகள். இவ்வாறு பகைமை பாராட்டும் நாடுகள் அனைத்தையும் கைக்குள் போட்டுகொண்டதால், புலிகளுக்கு எதிரான போரில் மஹிந்தவால் வெல்ல முடிந்தது. போர் முடிந்தவு டன் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக முன்வைக் கப்பட்ட குற்றச்சாட்டுகளை மஹிந்த அரசு நிராகரித்தது. ரணில் - மைத்திரி நல்லாட்சி அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கி காலத்தை இழுத்தடித்தது.


தற்போது பதவியேற்றுள்ள ராஜபக்ச சகோதரர்கள் தலைமையிலான அரசு, ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை இரண்டு விதமாக கையாள்கிறது. ஒருபுறம் தீர்மானத்தை முறியடிப்பதற்கு சீனா, ரஷ்யா, கியூபா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் ஆதரவைத் திரட்டும் அதேவேளையில், அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகளை வளைத்துப்போட்டு தீர்மானத்தின் இறுக்கத்தை குறைக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறது. ஒருபுறம் இந்தியத் தூதுவர் அமெரிக்க தூதுவர் போன்றவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தும் அதேவேளை, இந்தியாவை அச்சுறுத்தும் நோக்கில் பாகிஸ்தான் பிரதமருக்கும் இலங்கை அழைப்பு விடுத்துள்ளது.

ஸ்ரீலங்காவின் இராஜதந்திரத்திடம் சர்வதேசம் அடிபணியுமா அல்லது உண்மையிலேயே இலங்கையில் மனித உரிமைகள் நிலை நாட்டப்படுமா என்பது அடுத்த மாதம் தெரிந்து விடும்.

■

(02ஆம் பக்க தொடர்ச்சி)

# மரபுரிமை ஆக்கிரமிப்பும்....



ஆனால் அவருடைய உரைகளைச் சகித்துக் கொள்ள முடியாத சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதிகள் அவருக்கு எதிராகத் தாக்குதல் தொடுத்தபோது இது தொடர்பில் சம்பந்தப்பட்ட துறை சார் தமிழ்ப் புலமையாளர்கள், அறிஞர்கள் எவரும் வாய் திறக்கவில்லை. விக்னேஸ்வரன் ஆற்றிய உரையில் காணப்படும் வரலாற்று உண்மைகளில் பெரும்பாலானவை ஆய்வு முடிவுகளே என்றும் அவை அங்கீகரிக்கப்பட்ட ஆய்வாளர்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளே என்றும் கூறத்தக்க துணிச்சல் தமிழ்ப் புலமையாளர்கள் எத்தனை பேரிடம் இருந்தது? விக்னேஸ்வரன் தனது உரைகளில் வெளிப்படுத்திய வரலாற்று உண்மைகள் பெரும்பாலானவை அங்கீகரிக்கப்பட்ட வரலாற்று ஆசிரியர்களால் நிரூபிக்கப்பட்ட ஆய்வு முடிவுகள் ஆகும். ஆனால் சிங்கள பௌத்த பெருந்தேசியவாத அரசியல் வாதிகள் அந்த ஆய்வு முடிவுகளைக் கண்டு அச்சமடைந்தார்கள். அதாவது உண்மையைக் கண்டு பயந்தார்கள். அந்த உண்மையை ஏற்றுக்கொண்டால் சிங்கள பௌத்த மேலாண்மை வாதம் அடிபட்டுப் போய்விடும் என்ற பயம் அவர்களுக்கு. அதைப் போலவே தமிழ் பௌத்தம் குறித்தும் தமிழில் மதப் பல்வகைமை மரபுரிமை, பல்வகைமை குறித்தும் ஆய்வு முடிவுகளை உள்ளதை உள்ளபடி கூறத் தமிழ்ப் புலமையாளர்களும் தயங்குவதாகத் தெரிகிறது. அதைக் கூறினால் ஒருபுறம் தமது பதவி; தாம் அனுபவிக்கும் வரப்பிரசாதங்களை இழக்க நேரிடலாம் என்ற அச்சம் இருக்கலாம். அல்லது தமிழ்த் தேசியவாதிகள் என்று தம்மை காட்டிக் கொள்பவர்கள் குருட்டுத்தனமாக தமது கருத்துக்களை விளங்கிக் கொண்டு எதிர்க்கலாம் என்ற முன்னெச்சரிக்கையும் இருக்கலாம். ஆனால் அவரவர் அவரவருடைய அறிவியல் ஒழுக்கத்தின் பாற்பட்டு தமக்குரிய தொழில்சார் அறத்தையும் துணிச்சலையும் நிரூபிக்க வேண்டிய காலம் இது.

அவ்வாறு நிரூபிக்கத் தவறினால் முதலாவதாக அவர்கள் தங்களுடைய அறிவியல் ஒழுக்கத்திலிருந்து தவறுகிறார்கள். இரண்டாவதாக அறிவியல் அறத்திலிருந்து தவறுகிறார்கள். மூன்றாவதாக தமது காலத்தில் தமது சமூகம் சார்ந்த தமக்குரிய அறிவியல் பொறுப்பிலிருந்தும் தவறுகிறார்கள்.

■



# சின்னம்மா என்னும் தலையிடி

○ மயூ

பெரிய எதிர்ப்புகள் எதுவும் இல்லாது ஆட்சியைக் கொண்டு நகர்த்திக் கொண்டிருந்த தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமிக்கு தேர்தல் நெருங்கும் நேரத்தில் பெரும் தலையிடி ஏற்பட்டிருக்கின்றது. அப்படித் தலையிடியாக மாறியவர் வேறு யாருமல்ல, அ.தி.மு.க. ஆதரவாளர்களால் சின்னம்மா என்று அழைக்கப்படும் சசிகலாவேதான். சசிகலா சிறைக்குள் போகும்வரை அவரது அடிமையாக இருந்து முதலமைச்சரானவர் எடப்பாடி. ஆனால் சசிகலா சிறைக்குள் போனதும், அவரை எட்டி உதைந்துவிட்டு, ஓ.பன்னீர்செல்வத்தோடு இணைந்து ஆட்சியையும், கட்சியையும் தனதாக்கிக் கொண்டார் எடப்பாடி பழனிச்சாமி.

இந்த நிலையில் தான் சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைக்குச் சென்ற சசிகலா இப்போது தண்டனைக்காலம் முடிந்து வெளியே வந்திருக்கிறார். கொரோனாத் தொற்றுடன் சிறையில் இருந்து வந்த அவர் மருத்துவ சிகிச்சைகளை முடித்துக் கொண்டு இப்போது ஓய்வெடுத்து வருகின்றார். சிறையில் இருந்து வந்த பின்னர் இன்னமும் அவர் பொதுவெளியில் கருத்துக்கள் எதுவும் கூறவில்லை. ஆனால் இப்போது வெளியாகும் தகவல்களின்படி நடக்கவுள்ள தேர்தல் "சின்னம்மாவின்" அதிரடி இல்லாது நடந்து முடியாது என்றுதான் தோன்றுகின்றது. ஜெயலலிதாவின் மறைவின் பின்னர், சசிகலாவும் சிறைக்குச் செல்ல, ஓ.பழனிச்சாமியை ஓரமாகத் தள்ளிவிட்டு, எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சர் பதவிக்கு வந்தார். அதன்பின்னர் அவருடன் பலப்பரீட்சை செய்யும் எவரும் இருக்காததால் இலகுவாகக் கட்சியையும், ஆட்சியையும் அவர் காப்பாற்றியிருந்தார். இந்திய மத்திய அரசுடன் இணக்கமான போக்குடன் அவரது ஆட்சி இருந்ததால், தமிழகத்தில் அவர் ஆட்சி மீது அதிருப்தி இருப்பது வேறுகதை. ஆனால் கட்சிக்குள் எந்தப் பிரச்சினையும் இல்லாது, தனக்குப் போட்டியாளர் இல்லாது பார்த்துக் கொண்டார் எடப்பாடி. இப்போது சட்ட மன்றத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், மும்முரமாக மூளையைக் கசக்கி வேலை செய்துகொண்டிருந்த நேரத்தில்தான் சின்னம்மா சிறையில் இருந்து வெளியே வந்திருக்கின்றார். கொரோனாவையும் விரட்டியடித்துவிட்டு இப்போது பண்ணை வீடொன்றில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருக்கிறார் சின்னம்மா.

முன்னாள் முதலமைச்சர் அமரர் ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான சசிகலா எனப்படும் சின்னம்மா, 20 ஆண்டுகளாக அ.தி.மு.கவுடன் பிணைந்திருப்பவர். ஜெயலலிதா எப்படி அ.தி.மு.கவை தனது இரும்புப் பிடியில் வைத்து ஆட்டிப்படைத்தாரோ, அதற்கு சின்னம்மாவும் கொஞ்சமும் சளைத்தவர் அல்ல. குமரி முதல் சென்னை வரையில் கட்சியின் அடிமட்டம் வரையில் சின்னம்மா வுக்கு அத்துப்படி. கட்சியில் அவரால் ஆதாயம் பெற்றவர்கள், உயர்ந்தவர்கள் அதிகம். அதுதான் இப்போது எடப்பாடியின் வயிற்றில் புளியைக் கரைக்கின்றது என்றும் கூறலாம்.

அ.தி.மு.கவின் பிரமுகர்கள் பலர் சின்னம்மாவின் பக்கம் பாயத் தயாராகிவிட்டனர் என்று இப்போதே தகவல்கள் கசிகின்றன. மறுபக்கத்தில் அ.தி.மு.கவின் இப்போதைய ஆட்சிமுறையில் அதிருப்தி கொண்டுள்ள ஆதரவாளர்களும் சசிகலா பக்கம் சாய்வார்கள் என்று தெரிகின்றது. இப்போது சிதறிக் கிடக்கும் அ.தி.மு.கவை ஒன்றிணைத்து ஜெயலலிதா போன்று ஒரே குடையின் கீழ் கொண்டுவரும் வல்லமை கொண்டவர் சசிகலா மட்டும்தான் என்று அவர்கள் நம்புகின்றனர்.

சிறையில் இருந்து வந்த சசிகலா தனது அரசியல் நகர்வு தொடர்பாக எதுவும் கூறவில்லை. அவர் 8ஆம் திகதிதான் தமிழகம் வருகின்றார். அதன்பின்னரே அவரது நகர்வுகள் பற்றித் தெரிந்து கொள்ளமுடியும். அவரை வரவேற்பதற்கு அ.தி.மு.க. தொண்டர்கள் பெரும் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர். அவற்றைத் தடுத்து ஏற்பாட்டாளர்களின் மனதை மாற்றும் முயற்சிகளில் எடப்பாடி பழனிச்சாமி செய்யாமல் இல்லை. அதற்காக ஓரிருவரை நியமித்துள்ளார் என்றும் கட்சிக்குள் பேசுகின்றனர். ஆனால் அதையெல்லாம் மீறி சசிகலாவுக்கு பிரமாண்ட வரவேற்பு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இது இனிவரும் காலம் எடப்பாடியாருக்கு அவ்வளவு நல்லதாக இருக்காது என்பதையே காட்டுகின்றது. இது ஒருபக்கம் இருக்க, சகிகலாவின் வருகையால் துள்ளிக்குதிக்கும் ஒருவரும் இருக்கின்றார். அவர் வேறுயாருமல்ல தி.மு.க. தலைவர் ஸ்டாலின்தான். தேர்தல் நெருங்கும் நேரத்தில் இப்படியான சம்பவம் நடந்திருப்பது அவருக்கு உற்சாகத்தைத் தந்திருக்கின்றது. சசிகலாவின் வருகையால் அ.தி.மு.கவின் வாக்கு வங்கி குறையும், வாக்குகள் பிளவடையும் என்று நம்புகின்றார் ஸ்டாலின்.

இவர்கள் இப்படியெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்க, சசிகலா என்ன செய்யத் தீர்மானித்திருக்கிறார் என்பது இன்னமும் சில நாள்களில் தெரியும். இரும்புப் பெண் ஜெயலலிதாவுடன் நீண்டகாலம் இருந்தவர், அவரது வழிகளைப் பின்பற்றுபவர். அதனால் தமிழக அரசியலில் இனிக் கொஞ்சக்காலம் ஒரே அதிர்வெடியாக இருக்கும் என்று நம்பலாம். ■

# அன்புமிக்க முஸ்லிம் சகோதரனுக்கு...

## அவசரமா ஒரு கடுதாசி

**அஸ்ஸலாமு அலைக்கும் ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு**

பழையபடி எழுபதுக்குப் போயிட்டம்போலை கிடக்கு. இப்ப நாலைஞ்சு நாளா எங்கடை சனம் செய்யிற போராட்டத்தை ரெலிபோனிலை என்ரை மகன் எனக்குக் காட்டினவன். பனி, மழை வெள்ளம் எண்டு பாராமல் பொத்துவிலிலை இருந்து பொலிகண்டிவரை எங்கடை ஆக்கள் நடந்து வாறதாக் கேள்விப் பட்டனான். அதை ஒருக்காக் கான்போனிலை பாக்க வேணும் எண்டு ஆசைப்பட்டன். ஒரு மாதிரி என்ரை பெரிய பெடி காட்டிப் போட்டான்.

ஒரு பக்கம் பாக்கச் சந்தோசமாத்தானிருந்திது. மற்றப் பக்கம் நெஞ்சுக்கை குத்திற விசியம் என்னெண்டால்...... இன்னும் எத்தினை நாளைக்குத்தான் இப்பிடி றோட்டிலை நிண்டு கத்திக் குளறப்போறம் ? எண்டு தெரியாமல் கிடக்கு. கன நாளைக்குப் பிறகு உங்கடை ஆக்கள் வந்து எங்களோடை சேர்ந்திருக்கினம். உதைத்தானே கூட்டணி துவங்கேக்கை தந்தை செல்வநாயகத்தார் மண்டாடிக் கேட்டவர். அப்ப அரையும் குறையுமா நிக்கிறதைப்போல ஒட்டி நிண்டு ஓடிவிட்டியள். பிறகு சண்டைக் காலத்திலை அவங்கடை ஏவலிலை குண்டைக் கொண்டு வந்து குதர்க்கம் செய்ய வெளிக்கிட்டியள். பிறகும் சும்மா இருக்கேல்லை. சாவகச்சேரியிலை நானான்ரை ஹாட்வெயர் கடைக்குள்ளை துவக்கு , கத்தி எண்டு கொண்டுவந்து வைச்சிருந்து மாட்டுப்பட்டனியள். அதைக் கையும் களவுமாப் பிடிச்சபடியாலைதான் போகச் சொன்னவங்கள். ஆனால் இண்டைவரைக்கும் அவங்கள் கலைச்சதைத்தான் சொல்லுறீங்களே ஒழிய, நீங்கள் விட்ட பிழையளைப்பற்றி வாய் திறக்கிறியள் இல்லை. ஒரு மனுசனிலை பிழையைச் சொல்லேக்கை அப்ப நடந்த கதை எல்லாத்தையும் சொல்லித்தான் பிழை சரியைக் கதைக்க வேணும். அது பழைய கதை, சரி அதை விடுங்கோ!

இப்ப செய்யிறதைப்போலை , உண்மையான நிலவரத்தை விளங்கிக்கொண்டு எப்பவோ வந்து எங்களோடை சேந்து போராடி இருந்தால் உங்களுக்கு இத்தினை கேடு வந்திருக்காது. எங்களுக்கும் தீர்வு எப்பவோ கிட்டியிருக்கும். இது எங்களைக்காட்டி உங்களை வெருட்டிறது. உங்களைக் காட்டி எங்களை வெருட்டிறது. எண்டு இண்டைவரை எத்தினை கேவலம் நடந்து போச்சு. அதிலை அவங்கடை குளிசையை நாங்கள் விழுங்கினதைக் காட்டிலும் உங்கடை ஆக்கள் விழுங்கின குளிசைதான் கனக்க. "இலங்கையிலை இனப்பிரச்சினை எண்டு ஒண்டும் இல்லை. புலிப் பயங்கரவாதந்தான் இருக்கு" எண்டு ஹிஸ்புல்லா நானாவைக் கொண்டு சொல்லப் பண்ணி எங்கடை போராட்டத்தை கேவலப்படுத்தினதுக்கு நீங்கள் காரணமில்லையோ? அதுதான் இண்டைக்கு உங்களையும் எங்களோடை சேந்து பொத்துவிலிலை இருந்து பொலிகண்டிவரை நடக்க வைச்சிருக்கு.

ஒரு மனிசர் வாழ்க்கையிலை பிழை விட்டுத்தான் திருந்த வேணும். அதுக்காக நித்தமும் பிழை விட்டுக்கொண்டு இருக்க வேணும் எண்டதல்ல அதின்ரை விளக்கம். ஒருக்காகப் பிழை விட்டிட்டம் எண்டால் அதைப்பற்றிக் கூடி நிண்டு கதைச்சு ஏன் அந்தப் பிழை நடந்தது? எப்பிடி இனிமேலும் அது நடக்காமல் பாத்துக் கொள்ளலாம்? எண்டு ஆராய்ஞ்சு நடந்தால் தான் நாங்கள் உண்மையான மனுசர் எண்டு சொல்லலாம். இல்லாட்டி எல்லாம் பம்மாத்துத்தான்.

ஆனபடியாலை நாங்கள் ஒண்டில் இரண்டு பாக்கிறதாத் தீர்மானிச்சுக் களத்திலை குதிக்கிறம். விரும்பினால் வந்து எங்களோடை சேந்து இருந்து அடிமையளா இருக்காமல் மனிசரா சீவிக்கிற வழியைப் பாருங்கோ. இல்லை தொடர்ந்தும் நாங்கள் வேறை ஒரு தேசிய இனம். எங்களுக்கும் இஞ்சை வழி வாய்க்கால் பங்கு இருக்கு. அதையும் பிரிச்சுத் தாருங்கோ எண்டு கேட்டு எங்களைக் குழப்புறதெண்டால், எங்களுக்கு இருக்கிற உண்மையான உரிமையையும் இல்லாமல் செய்யிறதெண்டால் தயவுசெய்து எங்களோடை வராதையுங்கோ. போய் நிண்டு அவங்களிட்டை அடியை வேண்டுங்கோ.

எங்களைப் பொறுத்தவரை எங்களை நாங்கள் தமிழர்கள் எண்டு மட்டும் சொல்லுவம். தமிழர், தமிழ்பேசும் மக்கள், தமிழை உச்சரிக்கிறவை, தமிழைப் பாத்துக்கொண்டு நிக்கிறவை எண்டு இரண்டு மூண்டு தேசிய இனங்கள் இல்லை. நாங்கள் தமிழர்கள். நாங்கள் ஒரு மரியாதையான தேசிய இனம். எங்களுக்கெண்டு சரித்திரம், வரலாறு எண்டெல்லாம் இருக்கு. நாங்கள் இந்த நாட்டிலை பண்டு தொட்டுச் சீவிக்கிறம் எண்டதுக்குத் தகுந்த ஆதாரம் இருக்கு. அது எங்களுக்குப் போதும் எங்கடை உரிமை பற்றிக் கதைக்கப் பேச... .ஆனபடியாலை பதியுதீன் சொன்ன மாதிரித் தமிழர்கள் நாங்கள் எண்டு ஒரு குடைக்குக் கீழை ஒண்டாச் சேர்ந்திருப்பம் வாங்கோ. -

இப்படிக்கு
அன்பு மறவாச் சகோதரன்
**- அப்பாவி அன்னமுத்து**



# ஈழத்தமிழர் - மியான்மர் விவகாரமும் மேற்குலக நாடுகளின் தோல்வியும்



நிக்ஸன்

சீனாவுக்கு ஆதரவான மியான்மர் இராணுவம் அங்கு ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நிலையில், இந்தோ-பசுபிக் பாதுகாப்புக்கான அமெரிக்க இந்திய அரசுகளின் நகர்வுகளிலும் தளர்வு அல்லது மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான நிலைமை உருவாகியுள்ளது. இந்தவொரு நிலையிலேயே கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய அபிவிருத்தியை இந்தியாவுக்கு வழங்குவது என்ற உடன்பாட்டில் இலங்கை அரசாங்கமும் உள்ளூர் எதிர்ப்புகளைக் காண்பித்துத் தாமதத்தை ஏற்படுத்துகிறது என்ற கருத்துக்களும் இல்லாமல் இல்லை.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இந்தோ- பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு என்ற அடிப்படையில், கடல்சார் கூட்டுப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஒத்துழைப்பு (Maritime Domain AwarenessMDA) நடவடிக்கைகளை சில நாள்களுக்குள் இலங்கை ஆரம்பிக்க வேண்டுமென்று சென்ற மாதம் கொழும்புக்கு வந்த போது கட்டளையிட்டிருந்தார். ஆனால் அந்தச் செயற்பாடுகள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டன எனத் தெரியவில்லை.

ஏனெனில் இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதாவது சிங்கள ஆட்சியாளர்கள் 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களை அரசியல் ரீதியாகத் தோற்கடிக்க வேண்டுமென்ற மனநிலையோடு செயற்பட்டு வருகின்றனர்.

மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு எதிராக 2012 ஆம் ஆண்டு ஜெனிவா மனித உரிமைச் சபையில் பிரேரணை சமர்ப்பித்து நிறைவேற்றியிருந்த தீர்மானத்தை, 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி எனவும் நிலைமாறு கால நீதியென்றும் கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்த மைத்திரி ரணில் அரசாங்கம் நீர்த்துப் போகச் செய்திருந்தது.

மாறாக 30/1 தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதாகக்கூறி போர்க்குற்ற விசாரணைகூட ஆரம்பிக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டது.

ஆகவே முடிந்தவரை சிங்கள ஆட்சியாளர்கள் எவராக இருந்தாலும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளையும் பிரித்தானியா போன்ற ஐரோப்பிய நாடுகள் மற்றும் இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளையும் தங்கள் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தும் உத்தியைத்தான் கையாளுகின்றனர். அதாவது இலங்கை சிறிய நாடு என்ற எண்ணக் கருவோடு செயற்படும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளை முடியுமானவரை தங்கள் காலடிக்கு வரச்செய்யும் நகர்வுகளையே மேற்கொண்டு வருகின்றது. இலங்கைத் தீவில் இரண்டு தேசிய இனங்கள் இருக்கின்றன என்பதை நிறுவக்கூடாது என்ற நோக்கமே இதன் பின்புலமாகும்.

கொழும்பு துறைமுக கிழக்கு முனைய அபிவிருத்தியை இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளிடம் கையளிக்கக் கூடாது என்பதல்ல இப்போதைய பிரச்சினை. இந்த விவகாரத்தை வைத்து ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்கள் மற்றும் போர்க்குற்ற விசாரணை மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் போன்றவை உள்ளிட்ட பொறுப்புக் கூறல் விவகாரத்தை ஜெனிவா மனித உரிமைச் சபையில் இருந்து முற்றாக அகற்றிவிட வேண்டும் என்பதை மையப்படுத்தியே இந்தப் பிரச்சினை பூதாகாரமாக்கப்படு கின்றது. கொழும்பு துறைமுக ஊழியர்கள் மற்றும் பௌத்த குருமார் எதிர்ப்பு வெளியிடுகின்றனர் என்பதைக் காண்பித்து தமிழ்த்தேசியத்தை முற்றாக நீக்கம் செய்யக்கூடிய அரசியல் பேரம் பேசுதல்களில் வல்லரசு நாடுகளோடு சிங்கள ஆட்சியாளர்கள் ஈடுபடுகின்றனர் என்பதே உண்மை.

மறுபுறத்தில், ஈழத்தமிழர் விவகாரத்தை மையப்படுத்தியே இலங்கையைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளும் முற்படுகின்றன. ஆனால் இந்த விடயத்தில் இந்த நாடுகள் இரண்டு வகையான பிரச்சினையை எதிர்நோக்குகின்றன. ஒன்று ஈழத்தமிழர்களை முற்றுமுழுதாக ஏமாற்றிவிட முடியாதென்பது.

இரண்டாவது ,இலங்கையை முற்றுமுழுதாக நம்பிவிடவும் முடியா தென்பது. இங்கே இரண்டாவது காரணத்தை நோக்கினால், ஜே.ஆர். ஜயவர்த்தனவின் ஆட்சியில் இருந்து இலங்கை எப்படி இந்தியாவை ஏமாற்றியது என்பதற்கு வரலாறுகள் உண்டு. ஆனால் இந்த வரலாற்றுப் பட்டறிவுகளின் அடிப்படையில் இந்தியா இன்று வரைகூட இலங்கை அரசாங்கத்தை அதாவது சிங்கள ஆட்சியாளர்களைக் கையாளவில்லை என்பதே வேடிக்கை.

இந்தோ பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு என்ற அடிப்படையில், எம்.ஏ.டி எனப்படும் கடல்சார் கூட்டுப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஒத்துழைப்புத் தொடர்பாகவும் இலங்கைக் கடற்படையின் ரேடார்கள் இந்தியக் கடற்படையின் ரேடார்களில் தெரிய வேண்டும் என்ற விடயங்கள் உள்ளிட்ட கடல்சார் பாதுகாப்புச் செயற்பாடுகள் குறித்தும் இலங்கை இதுவரை இந்தியாவின் கோரிக்கைக்கு ஏற்ப செயற்படவில்லை.

அமெரிக்க, இந்திய நலன்களுக்கு ஏற்றவாறு செயற்பட இலங்கை மறுப்பது என்பது கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் கூடுதலாக இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று, மறுப்பதாலும் ஏகாதிபத்தியமென விமர்சிப்பதாலும் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் இறங்கி வரும் என்ற நம்பிக்கையும் அதற்கேற்க இந்தியாவும் தலையசைக்கும் என்ற எதிர்ப்பார்ப்பும்.

இரண்டாவது , இந்துமா சமுத்திரத்தில் தன்னையும் செயற்கையாக காண்பித்து இந்து சமுத்திர நாடுகளுக்குள் சீனாவும் உள்ளடக்கப்பட்டுவிட்டதென்ற உணர்வு இலங்கைக்கு அதிகமாகவே உண்டு.

ஆகவே இந்த இரண்டு காரணங்களையும் பிரதானமாகக் கொண்டு இலங்கை அரசாங்கம், அமெரிக்கா இந்தியா ஆகிய நாடுகளைத் துணிவோடு எதிர்த்து இலங்கையின் ஒற்றையாட்சியையும் இலங்கை தனிச் சிங்கள பௌத்த தேசம் என்பதையும் நிறுவிக் காண்பித்தும் வருகின்றன. ஆனால் இலங்கையின் இந்த நகர்வை அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளும் இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளும் தெரிந்து கொண்டாலும், சிறிய நாடு என்ற கோணத்தில் சிந்திப்பதால், அதனைப் பயன்படுத்தி மிக இலகுவான முறையில் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய பேச்சுக்களையும் முற்றாகவே ஒழித்துவிடலாம் என இலங்கை நம்புகின்றது.

இலங்கையில் வாழும் ஏனைய தேசிய இனங்கள் அடக்கப்படுகின்றன என்பதைக்கூட இந்த வல்லரசு நாடுகள் ஏற்றுக்கொள்வது போன்றதொரு தோற்றப்பாட்டை மாத்திரமே காண்பிக்கின்றன. ஜெனிவா மனித உரிமைச் சபை ஆணையாளரின் பரிந்துரைகூட இன அழிப்பு என்பதை ஏற்கவில்லை. ஆகவே அரசுக்கு அரசு என்ற அணுகுமுறைக்கு ஒப்பான முறையில் இலங்கை ஒற்றையாட்சி அரசின் சிங்கள ஆட்சியாளர்கள் மாத்திரமே இந்த நாடுகளுக்குத் தேவையாகின்றனர்.


மியான்மர் நாட்டில் தமக்குரியவாறு ஆங் ஷாங் சூச்சியை பதவியில் அமர்த்தியபோதும், அவர் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளுக்கு ஏற்றவாறு செயற்பட மறுத்திருந்தார். ஏனெனில் போர்க்குற்றச்சாட்டுக்கள் இன அழிப்பு விவகாரங்களில் இருந்து தனது படைகளைக் காப்பாற்றவே ஆங் ஷாங் சூச்சி முற்பட்டிருந்தார். இதனால் இறுதியில் சீனாவோடுகூட கைகோர்க்கும் நிலைக்கு ஆங் ஷாங் சூச்சி சென்றிருந்தார். ஆனாலும் மியான்மர் இராணுவம் சீன அரசோடு ஏற்கனவே நட்புறவாகி, பிராந்தியத்தில் சீனாவுக்குரியதான செயற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் சீனாவுக்கு விசுவாசமாகவே செயற்பட்டது. பதவி கவிழ்க்கப்படுவதற்கு முன்னர் ஆங் ஷாங் சூச்சி சீனா பக்கம் சென்றிருந்தாலும் அவரைவிட , மியான்மர் நாட்டின் இராணுவம் அதிக நம்பிக்கைக்குரியது என்ற எண்ணம் சீனாவுக்கு ஏற்பட்டிருந்தது. இதனாலேயே ஆங் ஷாங் சூச்சியை சீனா நம்பவில்லை. ஏனெனில் சூச்சி மேற்குலக நாடுகளின் தெரிவு என்பது சீனாவுக்கும் நன்கு தெரியும்.

ஆகவே இவ்வாறான அணுகுமுறை ஒன்றை இந்தியா, அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் 2015 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராகக் கையாண்டு மைத்திரி - ரணில் அரசாங்கத்தை உருவாக்கியிருந்தன. ஆனால் இறுதியில் அந்த அரசாங்கம் கூட சீனா பக்கம் செல்லும் நிலைக்குச் சென்றுவிட்டது.

ஆக மியான்மர் நாட்டில் மேற்குலக நாடுகளுக்கு ஏற்பட்ட தோல்வி மாத்திரமல்ல. உலகில் தேசிய விடுதலை கோரி நிற்கின்ற இனங்களின் செயற்பாடுகளில் தமது புவிசார் நலன்களை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு மேற்குலக நாடுகள் அரசுக்கு அரசு என்ற கொள்கையைப் பின்பற்றுவதால், உலக அரசியல் ஒழுங்குமுறை குழப்பத்துக்கு உள்ளாகின்றது.

இதனைப்புரிந்து கொண்டாலும், வல்லரசு நாடுகளின் வெளியுறவுக் கொள்கையும் அந்த நாடுகளைச் சார்ந்த ஜெனிவா மனித உரிமைச் சபை போன்ற சர்வதேசப் பொது அமைப்புகளின் செயற்பாடுகளும் உலகில் விடுதலை கோரிப் போராடும் தேசிய இனங்களுக்கு ஏற்றதாகவே இல்லை. பூகோள அரசியலும் புவிசார் அரசியலும் அரசுக்கு அரசுக்கு என்ற அணுகுமுறையில் செயற்படுகின்றபோதும் அது காலத்துக்குக் காலம் தேவைகளைப் பொறுத்து மாறுபடும் தன்மை கொண்டவை. ஆனால் சர்வதேச சட்டங்கள் அவ்வாறில்லை. இருந்தாலும் காலத்தின் தேவைக்கு ஏற்ப சர்வதேசச சட்டங்கள் செயற்பட்டாலும் புவிசார் அரசியலில் தமக்குரிய தேவை எதுவோ அதனையே வல்லாதிக்கச் சக்திகள் செய்து கொண்டிருக்கின்றன. 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் ஈழத்தமிழர்கள் மீதான இன அழிப்பு விசாரணைக்குரியதான சர்வதேச சட்டங்களும் அணுகுமுறைகளும் ஏற்புடையனவாக இருந்தாலும் புவிசார் அரசியல் நலன்சார்ந்து அது பற்றிய விசாரணைப் பொறிமுறை தவிர்க்கப்படவே செய்யும். ■







○ சிக்மலிங்கம் றெஜினோல்ட்

# தண்ணீர்: என்று தீரும் இந்த தாகம்?

பேஸ்புக்கில் பகிர்வதைத் தவிர, வேறு எதையும் பகிர்வதென்பது மனிதர்களுக்குப் பெரிய சிரமமான காரியமாகவே உள்ளது. அது அதிகாரத்தைப் பகிர்வதாக இருந்தாலென்ன, உரிமைகளைப் பகிர்வதாக இருந்தாலென்ன, சொத்துக்களை, பணத்தை, உடமைகளை என எதைப் பகிர்வதாக இருந்தாலும்தான். அப்படித்தான் தண்ணீரைப் பகிர்வதும் முடியாமலிருக்கிறது.

இதனால், இனப்பிரச்சினை, சாதிப்பிரச்சினை, சமூகப் பிரச்சினை, மதப்பிரச்சினை போல தீராத - தீர்க்கக் கடினமாக உள்ள இன்னொரு பிரச்சினை, நீர்ப்பிரச்சினை என்றாகியுள்ளது.

ஆனாலும் மனிதர்களால் எல்லாப் பிரச்சினையையும் தீர்க்க முடியும் - எதற்கும் தீர்வைக் காணவும் முடியும் என்பதைப்போல, இந்த நீர்ப்பிரச்சினையையும் தீர்க்க முடியும். அல்லது இதற்கும் தீர்வைக் காண முடியும். ஆனால், எதையும் தீர்க்காமல் அல்லது தீர்வு காணாமல், வெவ்வேறு காரணங்களுக்காக இழுத்தடிப்பதைப்போல, வைத்திருப்பதைப் போலவே தண்ணீர்ப்பிரச்சினையும் பேணப்படுகிறது.

ஏனென்றால், இதுவும் ஒரு குறிப்பிட்ட தரப்பினருடைய நலனோடு சம்மந்தப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் தமக்கு ஏற்ற வகையில் இதை அரசியலாக்கப் பார்க்கிறார்கள். இதுதான் கிளிநொச்சியிலும் நடக்கிறது. கேரளாவிலும் நடக்கிறது. கர்நாடகாவிலும் நடக்கிறது. எகிப்திலும் நடக்கிறது. தென்னாபிரிக்காவிலும் நடக்கிறது.

ஆனால், இதனால் எல்லா இடங்களிலும் பாதிக்கப்படுவது பெருந்திரள் மக்களாகும். துயரமென்னவென்றால், இந்தப் பெருந்திரள் மக்களைப் பற்றி, அவர்களுடைய பிரச்சினையைப் பற்றிப் பொருட்படுத்தாமல், ஒரு குறிப்பிட்ட தரப்பினரின் நலனை மட்டுமே அரசியலாளர்கள் சிந்திப்பதாகும். இதுதான் வர்க்க நலன் என்பதாகும். மக்கள் நலனை முன்னிலைப்படுத்திச் செயற்படும் அரசியல் தரப்பினர் அதிகாரத்திலிருந்தால்தான் அவர்கள் மக்கள் நலன் நோக்கில் சிந்திப்பர். அப்படியில்லை என்றால், அவர்கள் தமக்கிசைவான தரப்பினரின் நலன் நோக்கில்தான் சிந்திப்பர். அதுதான் இங்கும் நடந்து கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் குடிநீர்ப்பிரச்சினை என்பது, ஒரு தீராப் பிரச்சினையாக மாறிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது அநேகமான குடும்பங்கள் குடிப்பதற்கான நீரை விலைக்கே வாங்குகின்றன. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இப்படியொரு நிலை இருந்ததில்லை. தண்ணீரைக் காசுக்கு வாங்க வேண்டியதாக இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவுமில்லை. ஆனால், இப்பொழுது எல்லோருக்குமே குடிதண்ணீர் ஒரு பொதுப்பிரச்சினை என்ற நிலைக்கு வந்து விட்டது.


முன்பு தீவுப்பகுதி வலி மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாண நகரைச் சூழவுள்ள கடலோரப் பகுதி மற்றும் அரியாலை போன்ற பிரதேசங்களில் சில இடங்களில் மட்டுமே நல்ல தண்ணீருக்கான பிரச்சினை இருந்தது. இந்தப் பகுதிகளில் இருப்போரே குடிதண்ணீருக்காக கோயில் கிணறுகளையும் நல்ல தண்ணீர்க் கிணறுகளையும் நீர் விநியோகப் பிரிவினரையும் எதிர்பார்க்க வேண்டியிருந்தது.

ஆனால், இன்று நல்ல நீர் வளத்தைக் கொண்டிருந்த சுன்னாகம், ஏழாலை, இணுவில் போன்ற இடங்களிலுள்ளவர்களே குடிதண்ணீரைக் குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. காரணம், நிலத்தடி நீர் கெட்டு விட்டது என்பதே. நிலத்தடி நீர் கெட்டுப்போனதற்கு காரணம் ஒழுங்கான வடிகாலமைப்பு - கழிவகற்றல் பொறிமுறை இல்லை என்பதாகும். இது ஒரு பெருங்குறைபாடுதான். ஆனால், இதைத் தீர்த்தாலும் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் எதிர்காலத்தில் அங்குள்ள மக்களுக்குப் போதாது என்பதே உண்மை.

அப்படியென்றால் இதற்கு மாற்றுப் பொறிமுறை - மாற்று வழி - மாற்றுத்திட்டம் என்ன?

இதற்கு ஏராளம் பரிந்துரைகளும் பொறிமுறைத் திட்டங்களும் முன்மொழியப்பட்டுள்ளன. ஒன்று, முறைப்படுத்தப்பட்ட கழிவகற்றல் மற்றும் வடிகாலமைப்புப் பொறிமுறையை மேம்படுத்தி, நிலத்தடி நீரைப் பாதுகாப்பது. இரண்டாவது, முடிந்த அளவுக்கு உவர் நீர்த்தடுப்பு அணைகளை நிர்மாணித்து சதுப்பு நிலம் மற்றும் உவர் மண்டல வெளிகளில் நன்னீரை - மழை நீரைத் தேக்குவது. இதன் மூலம் நிலத்தடி நீரை மேம்படுத்திக் கொள்ளலாம் என்பது. மூன்றாவது, வெளியிலிருந்து நீரைக் கொண்டு வருவது. இதற்காகவே ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி மற்றும் திட்டமிடல் உதவியுடன் கிளிநொச்சி - இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கான நீர் விநியோகத்திட்டம் ஆலோசிக்கப்பட்டு, இரணைமடுக்குளம் 23000 மில்லியனில் நிர்மாணிக்கப்பட்டது. இதன் மூலம் விவசாயத் தேவைகளுக்கான நீர் போக மேலதிக நீரை யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப் பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்வது என்பதாக திட்டம் முன்வைக்கப்பட்டது.

ஆனால், அந்தத் திட்டத்தின் வழியாக நீர்ப் பகிர்வுக்கு இரணைமடுவின் கீழ் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மறுப்புத் தெரிவித்ததால், அது கிடப்புக்குச் சென்று விட்டது. பதிலாக வடமராட்சி கிழக்கு மருதங்கேணி - தாளையடிக் கடலிலிருந்து கடல் நீரைச் சுத்திகரித்து நன்னீராக யாழ்ப்பாணத்துக்கு வழங்குவது என மாற்றுத் திட்டம் ஆலோசிக்கப்பட்டது. அதுவும் அங்குள்ள மீனவர்களால் நெருக்கடிக்குள்ளாகியது. இப்பொழுது அது மென்னுறக்கத்தில் உள்ளது.




இவற்றைத் தவிர, இன்னொன்று பூநகரிக்குளத்தை நிர்மாணித்து அங்கிருந்து மேலதிகமாகவுள்ள தண்ணீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லலாம் என்பது. ஆனால், பூநகரியே வறட்சியில்தான் நூற்றாண்டாகத் தவித்துக் கொண்டிருக்கிறது. முதலில் அதனை உவரிலிருந்தும் வறட்சியிலிருந்தும் காப்பாற்ற வேண்டும். அதற்குப் பிறகே யாழ்ப்பாண நீர் விநியோகத்தைப் பற்றிச் சிந்திக்க முடியும்.

இது தனியே யாழ்ப்பாணத்தையும் அதனை அண்மித்த பூநகரியையும் மட்டும் ஆட்டிப் படைக்கும் நீர்ப்பிரச்சினையல்ல. கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு போன்ற வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் கோடை காலங்களில் நிலவும் ஒரு பிரச்சினையே. இவ்வளவுக்கும் வடக்கில் போதிய அளவுக்குத் தாராளமாக நீர் வளமுண்டு. ஏறக்குறைய 50 வரையான நீர்ப்பாசனக் குளங்கள் உள்ளன.

அதிலும் இரணைமடு, கட்டுக்கரை, வவுனிக்குளம், அக்கராயன்குளம், முத்தையன்கட்டுக் குளம் போன்ற பெருங்குளங்கள் இருக்கின்றன. இருந்தாலும் சரியான முறையில் நீர்ப்பகிர்வுக் கொள்கை இல்லாத காரணத்தினால், கோடைகாலத்தில் நீர்ப்பிரச்சினையும் நெற்செய்கை தவிர்ந்த ஏனைய பயிர்ச்செய்கையாளர்களுக்கு நீர்ப்பங்கீடு இல்லை என்ற நிலையும் தொடர்கிறது. இது அந்தந்த மாவட்டங்களிலேயே உள்ளது.

இதையெல்லாம் கவனத்திற் கொண்டு "வட மாகாணத்தின் நீர் வளம், நீர்ப்பயன்பாடு, நீர்ப்பங்கீட்டுக் கொள்கை" பற்றிய ஆய்வு நூலொன்றை எழுதியிருக்கிறார் நீர்ப்பாசனப் பொறியியலாளரும், யாழ் பல்கலைக்கழக பொறியியற்துறை விரிவுரையாளருமான சு. சிவகுமார். இதை கிளிநொச்சி மக்கள் சிந்தனைக் களம் கடந்த வாரம் வெளியிட்டு வைத்துள்ளது.

இந்த நூல் வடக்கின் நீர்வளம்(நிலத்தடி நீர் உள்பட), சராசரி மழை வீழ்ச்சி, ஆறுகள், குளங்கள், அவற்றின் நீர்க்கொள்ளளவு, கொள்ளாமல் கடலில் விடப்படும் சராசரி நீர் எனப் பலவற்றையும் ஆய்வு செய்கிறது. அத்துடன், இந்த நீரின் பயன்பாடு எப்படியிருக்கும் என்றும் கூறுகிறது. குறிப்பாக குடிதண்ணீர், விவசாயத்துக்கான நீர், கைத்தொழில், கால்நடை அபிவிருத்தி (மேய்ச்சல் நிலம் உள்பட) காடு, மற்றும் பிற சூழலியல் தேவைகள் எனப் பலவற்றுக்கும் தேவை என்று குறிப்பிடுகிறது. தொடர்ந்து இவை ஒவ்வொன்றுக்கும் என்ன விகிதத்தில் நீர்ப்பங்கீடு செய்யப்பட வேண்டும் என்பதை உலகளாவிய நீர்ப் பயன்பாட்டுக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு நம்முடைய சூழலின் தன்மை - நிலைமைக்கு ஏற்ற வகையில் ஒரு திட்டத்தையும் முன்வைக்கிறது.

இன்றைய எதிர்காலத்தைய தண்ணீர்ப்பிரச்சினைச் சூழலில் இது ஒரு முக்கியமான பணியாகும். பொருத்தமான காலச் சூழலில் பொருத்தமானதொரு ஆய்வுப் பணியைச் செய்திருக்கும் சிவகுமாருக்கும் அதை வெளிக் கொண்டு வருவதற்கு உதவியிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியற் பீடத்துக்கும் நன்றி கூறிப் பாராட்ட வேண்டும். ஆனால், இந்த நூல் ஒரு முடிந்த முடிவல்ல. இது ஒரு ஆய்வு நூலாகப்பல விடயங்களைக் குறித்துச் சிந்திக்கத் தூண்டுகிறது. இந்த ஆய்வைத் தொடர்ந்து மறுபார்வைகளும் மேலதிக ஆய்வுகளும் வரலாம். அப்படி வருவது சிறப்பே. அதுதான் அறிவியற் செயற்பாடாகும். இப்பொழுது நம் முன்னே உள்ள ஒரு தலையாய பிரச்சினைக்கு இந்த நூலில் முன்வைக்கப்படும் சிந்தனைகள், வழிமுறைகளைப் பரிந்துரைக்கின்றன என்பது முக்கியமானது. இதை ஒரு முன்னேற்றமாகக் கொண்டு எதிர்நோக்கப்படும் நீர்ப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்கலாம். எல்லாப் பிரச்சினைக்கும் நாம் வேறு இடங்களை நோக்கிக் கைகளைக் காட்டுவதை விடவும் நம்மால் தீர்க்கக் கூடிய , நாம் தீர்வு காணவேண்டிய - பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பது நல்லது. இதற்கு 13 ஆவது திருத்தமோ அல்லது அதற்கான அதிகாரமோ வேண்டும் என்றில்லை. ஆனால், இதை நாம் தீர்க்காமல் விட்டால், முறையான நீர்ப்பயன்பாட்டுக் கொள்கையும் பங்கீடும் நிகழவில்லை என்றால், அந்த இடத்தில் மத்திய அரசு எதிர்காலத்தில் தலையிடக் கூடிய அபாயம் உண்டு. அது ஏற்கனவே இருக்கின்ற மாகாணசபை வழியாக இருக்கின்ற குறைந்த பட்சச் சுயாதீனத்தையும் இல்லாததாக்கி விடும். இது நடக்காது என்றில்லை. வழமையாகச் சாதாரணமாகவே நீர்ப்பாசனத்துறையினரால் பராமரிக்கப்பட்டும், பங்கீடு செய்யப்பட்டும் வரும் இரணைமடுக் குளத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அதிரடியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வந்து திறந்து வைத்தமை பலருக்கும் நினைவிருக்கலாம். இதற்கும் காரணம், தேவையற்ற அரசியல் தலையீடுகளே. அரசியல் தலையீடுகள் இல்லையென்றால், தண்ணீர்ப் பிரச்சினை சுலபமாகத் தீர்ந்து விடும். ■

# குழைக்காட்டு கதைகள்

○ கோகுலராகவன்

கிராமத்து சிறு சண்டைகள் பார்க்க மிகச் சுவாரசியமாக இருக்கும். பெரும்பாலும் வாய்ச்சண்டைகளோடு அவை முடிவுக்கு வந்துவிடும். இந்தச் சண்டைகளில் சிலவேளை பரம இரகசியங்கள் உடைபட்டுப் பயம் காட்டும். சண்டைகளுக்கான காரணம் என்றால் வேலிச்சண்டை , ஆடு மாடு தோட்டத்துக்குள் போனமை , திருமணக் குழப்பம், போன்று வலுவற்றவையாகத்தான் இருக்கும். இந்தக் கோபம் ஒரு பத்து நாள் தான் நீடிக்கும் .பிறகு மாமன் மச்சான் உறவு தொடரும்.

“அத்தான் உந்த மருந்தடிக்கிற மெசினைத் தாருங்கோ ஒருக்கா”

“குடுத்து விடு”

சண்டை சமாதானம் ஆகிவிடும். இப்படித்தான் ஒரு ஊர்ச் சண்டை தொடங்கியது. ஆசைப்பிள்ளை மாமாவுக்கு மூன்று பெண் பிள்ளைகள். மூத்தவள் ராதாவுக்கு பதினெட்டு, பத்தொன்பது வயதிருக்கும்.

**ஆசைப்பிள்ளை மாமாவுக்கு மூன்று பெண் பிள்ளைகள். மூத்தவள் ராதாவுக்கு பதினெட்டு, பத்தொன்பது வயதிருக்கும். காதல் ஆரம்பிக்கும் வயது. காதல் யாருடன் வந்தது என்றால் ராசாண்ணையின் மச்சான் - கருணாகரனுடன் .**

காதல் ஆரம்பிக்கும் வயது. காதல் யாருடன் வந்தது என்றால் ராசாண்ணையின் மச்சான் கருணாகரனுடன் . ராசண்ணை வட்டக்கச்சி ஹட்சன் வீதியில் இராசமாணிக்கத்தின் மூத்தமகளை மணமுடித்திருந்தார். கருணாகரன் தன் அக்கா வீட்டை அடிக்கடி வருவான். சக்கி 'கட்' தலை வெட்டும் 'ரூ ஹன்ரர்ட்' மோட்டார் சைக்கிளுமாக சிலிப்பிக் கொண்டு திரிய ராதாக்கா மயங்கிவிட்டாள்.

அரசல் புரசலாக ஆசைப்பிள்ளை மாமாவுக்கு கதை தெரிய வர,

“காவாலி நாயே காலடிச்சு முறிப்பன்ரா”

என்று றோட்டில வைச்சு கருணாகரனை மிரட்டி விட்டு வந்தார்.

கருணாகரனுக்கும் வெட்கமாகப் போய் விட, அக்காவுக்கு கிட்ட அழுதிருக்கிறான். இதை ராசாண்ணை அறிந்தவுடன் பெரிய கொட்டனோட ஆசைப்பிள்ளை மாமா வீட்டுக் கேற்றுக்குப் பாய்ந்து வந்தார்.

“டேய் ஆசைப்பிள்ளை வாடா வெளிய”

ஆசைப்பிள்ளை மாமா திடுக்கிட்டு போனார்...ராசாண்ணை நின்றால் போல காலால அடிக்கிற சண்டியன்.

ஆனாலும் விடக்கூடாது. ராதாக்கா 'சீனில்' இருந்து நழுவிவிட்டாள். தனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லிவிட்டாள். ஆசைப்பிள்ளை மாமாவுக்கு இது போதும்.

ஆசைப்பிள்ளை மாமா மனுசி பிள்ளைகளிடம் தான் அடிக்கப் போகும்போது இறுக்கி விடாமல் பிடிக்க வேண்டும் என்று சொல்லி வைத்துக் கொண்டார். கையில் அலவாங்கை எடுத்துக் கொண்டார்.

“வட்டக்கச்சியானுக்கு அவ்வளவு திமிரோ?”

அடிக்கிற மாதிரி பாய்ந்து வர மனுசி பிள்ளையள் , ஏற்கனவே அவர் சொல்லிக் கொடுத்ததுபோல, இறுக்கிப் பிடித்து கொண்டார்கள். இங்காலே ராசாண்ணையையும் அவருடைய மனுசி இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

“அடிச்சு உடைப்பன்ரா”

“விடுங்கோடி என்னை”

இவ்வாறு கொஞ்ச நேரம் இழுபறி நடக்கிறது. ஒரு கட்டத்தில் ஆசைப்பிள்ளை மாமா முன்னுக்குப் பாய முனைய, களைத்துப் போன மனிசியும் பிள்ளைகளும் கைப்பிடியை நழுவ விட ஆசைப்பிள்ளை மாமா ராசாண்ணைக்கு முன்னே வந்து விட்டார். ஆசைப்பிள்ளை ஒருவாறு அடிக்கு விலகி ,விழுந்தடித்து பின்னுக்கு ஓடிப் போனர்.

“ஏனடி விட்டனீயள்?”

இரகசியமாய் கேட்டபதாக நினைத்து பலமாகவே கேட்டு விட்டார்

“வாறன்ரா கத்தி எடுத்துக் கொண்டு”

“உன்னை வெட்டாமல் விடமாட்டன்”

உள்ளுக்குப் போன ஆசைப்பிள்ளை மாமா திரும்ப வரவேயில்லை.

ராசாண்ணை உடனடியாக கருணாகரனை ஊருக்கு அனுப்பி விட்டார். ஏன் வீண் சோலி? ஆனாலும் ராசாண்ணைக்கு சண்டை பிடித்தது வெட்கமாய்ப் போய் விட்டது. பளைப் பக்கம் போய்வந்தார். காலோ, அரையோ அடித்திருப்பார் என நினைக்கிறேன்.

"இவன் பாவி கருணாகரன் இஞ்சை வாறதாலேதான் இந்தப் பிரச்சினை. தமக் கையைப் பாக்க வரத்தானே வேணும். வந்தால் உடனே போய்விட வேணும்" சிவராசாண்ணை வெறியில் கொஞ்சம் உரத்துக் கத்தினார்.

“நாயே...

வா... தின்... குடி.... போ

தங்காதே” தங்கினால்தானே ஊருக்குள்ள பெட்டைகள் மீது கண் வைக்கிறான்.

ஆனால் கருணாகரனை அதற்குப் பிறகு ஊர்ப் பக்கம் நான் கண்டதாக ஞாபகம் இல்லை. இப்போது ராதாக்கா கனடாவில் சீரும் சிறப்புமாக இருக்கிறாள்.

■



○ அகமது ஃபைசல்

# பல்லியின் சொல்

## மினிக்கதை

கதவுக்கு வெளியே இருந்து ஒரு பல்லி நேற்றுச் சொன்னதையே இன்றும் சொன்னது. கதவைத் திற என்றுதான் சொல்லியிருக்குமா? தண்ணீர் மெல்ல நடந்து சென்று கதவைத் திறந்தாள். ஜன்னல்களையும் திறந்து கண்களை வெளியே போட்டுப் பார்த்தாள். பின்னர் தன் அறைக்குத் திரும்பி விட்டாள். வீட்டில் எல்லோரும் அவளைத் தண்ணீர் என்றுதான் பெயர் சொல்லிக் கூப்பிடுவினம். ஏனென்றால் குண்டூசி மாமாவின் தோட்டத்துக் கிணற்றடிக்கு குடத்தை இடுப்பில் வைத்து அதன் கழுத்தை வாரி அணைத்துக்கொண்டுபோய் தினமும் வீட்டுக்குத் தேவையான தண்ணீரைக் கொண்டு வருபவள் அவள்தான். அவள் கைகளைத் தொட்டால் தண்ணீரைத் தொடுவது போல்தான் இருக்கும். இதற்காகவே திட்டம் போட்டு தென்னை ஓலையால் கைக்கடிகாரம் செய்து அவள் இடது கையில் ஒரு நாள் கட்டி விட்டேன். ஊர்ந்து ஊர்ந்து ஆமை வேகத்தில்தான் கட்டுவேன். அப்போது என் விரல்கள் ஈரமாகிக் கொண்டிருப்பதாக உணர்வேன். வருகிற இருபத்தி நாலாம் திகதி அவளுக்கு இரு பத்தி நான்கு வயது. இத்தோடு அவளுக்கு வயது போதும், இதற்கு மேல் அவளுக்கு வயது தேவையில்லை என்ற முடிவில் நான் ஒரு போதும் மாறாதவனாக இருந் தேன்.



இவள் இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு போகும் குடத்துக்கு எந்தப் பக்கம் முகம் இருக்கிறது என்று அந்தக் குடத்தை சுற்றிச் சுற்றிப் பார்ப்பேன். அது வட்ட வடிவத்தில் தன் வாயைத் தான் காட்டிக்கொண்டிருந்தது. அன்று அவள் குடத்தைத் தூக்கி இடிப்பில் வைத்துக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றாள். அவள் இடுப்புத் தோலைப் பார்த்துக்கொண்டு அசையாமல் இருந்தது குடம். குடத்தின் வாயில் ஒரு பல்லி இருப்பது குறித்து அவள் கவனம் கொள்ளவேயில்லை. கிணற்றடியில் குடத்தை இறக்கி வைத்து விட்டு வாளியை கிணற்றுக்குள் இறக்கி தண்ணீரை அள்ளி குடத்துக்குள் ஊற்ற முற்பட்ட போது அந்தப் பல்லி பக்கத்தில் தேங்கி நின்ற தண்ணீரில் துள்ளிப் பாய்ந்தது. அது துடியாய்த் துடித்து கரை சேர்வதை அவள் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது அவள் மனம் துண்டான பல்லியின் வால் போலவே துடித்திருக்கும் என்பது எனது நம்பிக்கை. திரும்பவும் பல்லி சொன்னது கதவைத் திற என்றுதானோ. மீண்டும் வந்து கதவைத்திறந்து வெளியே பார்த்தாள். ஜன்னல்களையும் திறந்தாள். வெளியே அந்தப் பல்லி இல்லை. கதவு, ஜன்னல் எல்லாவற்றையும் அடைத்துக்கொண்டு உறங்கச் சென்றாள். மறு நாள் காலை அந்தப் பல்லி யின் சொல் கேட்டுத் தான் அவள் எழுந்திருந்தாள்.

■



33 இற்கான

# கவிதைகள்

**பரிசு பெறும் கவிதை**

சுத்தி வட்டமிட்டு -பெரும்
சத்தத்துடன் - குத்தி
வருகுது பொம்பர் - காதை
பொத்தியே மாணவர் நாம்
பங்கருள் - வாழைப் பொத்தி போல்
போடும் பல குண்டு - மண்ணில்
குத்தி வெடித்திடும் அன்று
குண்டும் குழியுமான பூமியில்
நன்றே படித்தோம் அன்று

**சி.அருண்**
*அராலி சரஸ்வதி மகா வித்தி.*

ஹெலிகள் சுற்றும் வேளை
வலிகள் சுமந்து பதுங்கு
குழியில் பதுங்கி
எலிகள் போல பயந்து
படித்து கல்வியில்
புலிகளாகினோம்
நம் தேசம் காக்க அந் நாட்களில்

**சி.பாவனா**
*அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை*

எத்தனை குண்டுகள் துளைத்தாலும்
எத்தனை இன்னல்கள் வந்தாலும்
எங்கள் கல்வியைத் தொடர்வோம்
என்று வீரச் சூளுரைக்கும்
எங்கள் வீரத்தாய் பெற்ற
எம் வீரச் செல்வங்களுக்கு
என்றும் வெற்றி நிச்சயம்

**திருமதி. கமலாதேவி கயிலாயபிள்ளை**
*அராலி தெற்கு, "முருகதோட்டம்", வட்டுக்கோட்டை.*

பதுங்கு குழிக்குள் உயிர் காத்து
பள்ளி சென்று கல்வி கற்று
பகையினை நீக்கி அன்பு கொண்டு
பயணிக்கும் உலகு நாளும் கண்டு

துள்ளித்திரியும் பருவம் என்று
துணிவு பெற்று காலம் வென்று
துன்பம் துறப்பின் கனவு வசப்படும்
துவளாத மனமென வல்லமை அடையும்

**சிவரம்யா**, *யாழ்ப்பாணம்.*

பாடை ஏறினும்
ஏடது கைவிடேல்
என்று இறுமாப்புடன்
பள்ளி சென்று பதுங்கி
செல் ஒலியில் அதிர்ந்த நாட்கள்
தமிழர் எம் வாழ்வில்
ஆறாத வடுக்களே!

**இ.ரிஷிதா**, நயினாதீவு


பள்ளி சென்ற வேளை
குண்டு மழை பொழிய
சத்தமதை தாங்காது
செவியிரண்டைப் பொத்தி
பற்றை தேடி மறைந்து வாழ்ந்த
பொல்லா காலமதை
நினைவுற செய்தனரே
பச்சிளம் பாலரிவர்

*ந.தனுபதன்,*
*வணிகர் கழகம், யாழ்பாணம்*

விமானக் குண்டு வீச்சிலிருந்து உயிரைக்
காத்திட பாதுகாப்புத் தேடி பங்கருக்குள்
பதுங்கும் பள்ளிச் சிறுவர்களே! உங்களது
இக் காட்சி நம் வன்னி மண்ணில் அரச
படையால் அரங்கேற்றப்பட்ட தமிழின அழிப்புக்கு
நாளை ஜெனிவாவில் சாட்சி

**சுப்பிரமணியம் ஜெயரூபன்**
*பருத்தித்துறை.*

## மௌன மொழி 34



கவிதைக்கு பரிசு 1000/=

உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:
**13.02.2021**

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப்பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555

மின்னல்

## திரடி அரங்கு



## அவரே கொன்பியூஸ் ஆகிட்டாரே!

இதுவும் இன்னொரு ஒருங்கிணைப்புக் கூட்டம் பற்றினதுதான். இது நெடுந்தீவில நடந்த கூட்டம். தூரப் பிரதேசம் எண்டதாலயோ என்னவோ அந்தக் கூட்டத்துக்கு அப்பிடி ஒரு சிறப்பு. அங்க எங்கட கிளிநொச்சி எம்.பி, முன்னணியின்ர எம்.பிக்கள் எல்லாரும் வந்திருந்தினம், ஆனால் நெடுந்தீவுதான் தன்ர கோட்டை எண்டுற அமைச்சர் வரேல்லை. உடையாரின்ர பொல்லு மாதிரி அவற்றை பிரதிநிதிதான் வந்தார்.

கூட்டம் ஆரம்பிச்சாச்சு. அபிவிருத்தியளைப் பற்றி கதையள் நடக்குது. எங்கட ஆக்கள் அது சரியில்ல, இது சரியில்ல எண்டு அடுக்கிக்கொண்டே போச்சினம். இப்ப படகுப் போக்குவரத்துப் பற்றின கதை . அதில குமுதினியின்ர பேச்சுக்களுக்கு குறைவே இருக்கேல்ல. இடைக்கிடை வட தாரகை, நெடுந்தாரகை பற்றின பேச்சுக்களும் கேட்டிச்சு. இதுதான் சாட்டெண்டு அமைச்சரின்ர பிரதிநிதி கிளிநொச்சி எம்.பிக்கு சூடு வைக்கிற மாதிரி சில கதையளை அவிட்டு விட்டார். ஆனாலும் வழக்கம் மாதிரி அந்தாள் ஆ, ஊ் எண்டு குதிக்காமல் அமைதியாக் கேட்டுக் கொண்டிருந்தார். ஒருகட்டத்தில துள்ளி எழும்பின எம்.பி நெடுந்தாரகை எண்டா என்ன? அதின்ர வரலாறு என்ன எண்டு புட்டுப் புட்டு வைச்சார்.

இடையில கிளிநொச்சி எம்.பியின்ர விசுவாசிக்கு கோவம் வந்திட்டுது. கூட்டத்துக்கு நடுவில எழும்பின அவர் கூட்டத்துக்கு தலைமை தாங்கின இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜனைப் பார்த்து, "கௌரவ அமைச்சரே" எண்டார். இப்ப கூட்டத்தில சின்னச் சிரிப்பொலி.

அதுக்கு பிறகு கிளிநொச்சி எம்.பியைப் பார்த்து "எங்கட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரைப் பற்றிக் கதைக்க உவையளுக்கு அருகதையில்ல" எண்டார். கூட்டத்தில இருந்த சின்ன சிரிப்பொலி, கொஞ்சம் பெரிசா கேட்டிச்சு. அவர் முன்னாள் எம்.பியா, இந்நாள் எம்.பியா எண்டு தெரியாமல் பேசுறவருக்கு மட்டும் என்ன அருகதை? ஆள் கூட்டத்தில் பேசுற கூச்சதில கொன்பியூஸ் ஆகிட்டார் போல. இப்பிடித்தான் ஆர்? என்ன பதவி? எண்டெல்லாம் தெரியாமல் விண்ணானம் கதைக்கிறதோட கன கூட்டங்கள் முடிஞ்சு போகுது.

## வெளில கீரியும் பாம்பும் உள்ளுக்க பாலும் தேனும்

கனநாளைக்குப் பிறகு யாழ்ப்பாணக் கச்சேரியில ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் போன கிழமை நடந்தது. முந்தியெண்டா கூட்டம் முடிய ரெண்டு நாள், மூன்று நாள் செல்லும். ஆனால் இந்தமுறை ஒரே நாளில 8 மணித்தியாலம் சாப்பிடப் போகாமல் இருந்து நடத்தி முடிச்சிட்டினம். கொரோனாவாலதான் கனநாளா கூட்டம் நடத்தேலாமல் போனது என்று, இணைத் தலைவர்களுள் ஒருவரான அங்கஜன் சொன்னார். ஆனா, இணைத் தலைவர்களான ஆளுநர் சாள்ஸுக்கும், அங்கஜனுக்கும் இடையில இணக்கப்பாடு இல்லாததாலதான் கூட்டம் நடக்கேல்ல என்று அண்டைக்கு கூட்டத்துக்கு வந்திருந்த எல்லாருக்கும் நல்லாய்த் தெரியும்.

கூட்டத்தை இணைத் தலைவர்களுள் ஒருவரான ஆளுநர் சாள்ஸ் சரியாத்தான் நடத்தினவா. அவ முந்தி அதிகாரியா இருந்தவா என்றதால, சுத்துமாத்துக்கள் எல்லாம் அவவுக்கும் தெரிஞ்சிருக்கும். அதால கூட்டத்தில அதிகாரிகளோட அவ கொஞ்சம் 'கறாராத்தான்' இருந்தா. அதிகாரிகள் சிலர் அவவிட்ட வாங்கிக் கட்டிச்சினம்.

இதைவிட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆளுநரை 'மடம்' 'மடம்' என்றுதான் ஒவ்வொருக்காலும் விளிச்சுக் கதைச்சவர். ஆனா அங்கஜனோ அங்க இருந்த வேறொரு எம்.பிமாரோ அப்பிடிக் கூப்பிடேல்ல.

இதைவிட, கீரியும் பாம்புமா எப்பவும் சண்டைபிடிக்கிற கஜேந்திரகுமாரும், சுமந்திரனும் அண்டைக்கு பாலும் தேனும் போல தான் அங்க இருந்திச்சினம். ஆளுக்காள் மாறிமாறி பகிடி விட்டு கூட்டம் நடக்கிறதையே மறந்தும் சிரிச்சினம். இதெல்லாத்தையும் விட முக்கியமான சம்பவம், நடக்கிறது யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம். அதின்ர செயலர், தான் தான் என்றதை மறந்து எங்கட ஜி.ஏ. இருந்தார். கூட்டத்துக்கும் தனக்கும் சம்பந்தமில்லாத மாதிரி அந்த மனுசன் 8 மணித்தியாலமும் சிவனே எண்டு இருந்திட்டு போட்டார்.


# பிஞ்சு தூரிகைகள்















## எதைக் கற்றாலும் சிறப்பு

ஒரு ஊரில் சிவகாசிகர் என்ற பெயருடைய ஒருவர் வசித்து வந்தார். அவருக்கு மகன் ஒருத்தன் இருந்தான். அவனை குடும்பத்தில் உள்ளோர் கிருஷ்ணா என்று செல்லமாக அழைப்பர். அவன் மிகவும் பண்பானவனாக விளங்கினான். கிருஷ்ணாவுக்கு சிறுவயதிலே ஏதேனும் ஒரு கலை பயில வேண்டும் என்ற ஆசை இருந்தது. கிருஷ்ணாவுக்கு படிப்பு அவ்வளவு வராது. அவனுக்கு குறிப்பிட்ட வயது வந்ததும் தந்தை சில பொற்காசுகளைக் கொடுத்து கல்வியைப் பயின்று வா என வழி அனுப்பி வைத்தார். கிருஷ்ணா தனது பயணத்தைத் தொடங்கினான். அவன் செல்லும் பாதையில் புல்லாங்குழல் வாசித்துக்கொண்டு ஒரு ஆசான் இருந்தார். அவ் ஆசானின் அனுமதியுடன் புல்லாங்குழல் கலையை ஒரு வருடமாக பயின்றான். கிருஷ்ணா புல்லாங்குழல் வாசிப்பதில் முழுமையான தேர்ச்சி பெற்றான். அவன் ஆசானிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு திரும்பினான். கிருஷ்ணா மகிழ்ச்சியுடன் தான் கற்ற கலையைப் பற்றி குடும்பத்தில் உள்ளோருக்கு கூறினான். குடும்பத்திலுள்ளோர் சந்தோஷப்படாமல் அவன் மீது ஆத்திரப்பட்டார்கள். புல்லாங்குழல் உனது வாழ்க்கையை மேம்படுத்தாது என்று அவனது தந்தை கூறி அவனை விட்டு துரத்தினார்.

வேதனை தாங்க முடியாமல் கிருஷ்ணா பாதையோரமாக இருந்த மரத்தின் கீழ் பாய் விரித்து புல்லாங்குழலை வாசித்தான். அப் பாதையோரமாக சென்றவர்கள் அவன் இசையில் மயங்கி நடனமாடினார்கள். சிலர் இசையை இரசித்தார்கள். அவ்வளவும் தான் பஞ்சு மூட்டையில் தீப்பற்றியது போல அவனது இசைத்திறன் தேசம் முழுக்கவும் பரவியது. அதனோடு தேசத்தை ஆண்டு வரும் ராஜாவின் கதவையும் தட்டியது. இராஜா ஒரு இசைப் பிரியர். உடனே ராஜா கிருஷ்ணாவுக்கு ஒரு கடிதத்தை எழுதினார். அதில் உள்ளங்கியிருந்த தகவல், வருகின்ற தீபாவளி அன்று எமது அரண்மனைக்கும் உம்மை விருந்தினராக அழைக்கின்றோம் என்தான அழைப்பு. உமது இசையைக் கேட்க ஆவலுடன் இருக்கின்றேன். இதற்காக உமக்கு ஆயிரம் பொற்காசுகளும், அர ண்மனையில் நீர் தங்குவதற்கான ஏற்பாடு செய்கிறோம் என குறிப்பிடப்பட்டி ருந்தது. தீபாவளியும் வந்தது கிருஷ்ணா அரண்மனைக்குச் சென்றான். அவனை ராஜா மிகவும் சிறப்பாக வரவேற்றார். பின் கச்சேரி ஆரம்பமானது. கிருஷ்ணா புல்லாங்குழலை வாசித்தான். அவன் இசைப் பெருக்கில் மயங்கினார் ராஜா. கிருஷ்ணா புல்லாங்குழல் வாசித்து முடிந்ததும் ராஜா அவனை பாராட்டி ஆயிரம் பொற்காசுகளையும், பல பரிசில்களையும் வழங்கியதோடு அரண்மனையில் தங்குவதற்கும் இடம் அளித்தார். இவ்வாறு அவனது வாழ்வு ராஜபோக வாழ்வு ஆக மாறியது. நீங்கள் எதை முழுமையாக கற்றாலும் அதன் பயன் உங்களைத் தேடிவரும்.

**மு.பிரியங்கா**, தரம்9
யா/இந்து மகளிர் கல்லூரி
அங்கத்துவ இலக்கம் 88



## காக்கையார்

கரிய நிறம்
கூர்ந்த பார்வை
கொண்டவர்தான் காக்கையார்!

கண்கள் இரண்டும்
கண்மணி ஒன்றுமாகக்
கொண்டவர்தான் காக்கையார்!

எங்கும் பறப்பார்!
எங்கும் இருப்பார்!
எங்கும் நிறைந்தவர்தான் காக்கையார்!

குழந்தை கையில்
உணவைக் காண்டால்
தட்டிப் பறிக்கும் காக்கையார்!

எதைக் கண்டாலும்
மகிழ்ந்து உண்ணும்
பழக்கமுள்ளவர் காக்கையார்!

கிடைக்கும் உணவை
உறவை அழைத்துப்
பகிர்ந்து உண்ணும் காக்கையார்!

மாலைநேரம்
குளித்த பின்பே
கூடு செல்லும் காக்கையார்!

நரியின் பேச்சைக்
கேட்டு வடையை
இழந்தவர்தான் காக்கையார்!

சனிஸ்வரனைச்
சுமக்கும் பேறு
பெற்றவர்தான் காக்கையார்!

தன்னைச் சுற்றிக்
கதைகள் பலவும்
கொண்டவர் எமது காக்கையார்!

முருகு

## பொது அறிவு

1. இலங்கையில் கடதாசித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
**எம்பிலிப்பிட்டியா**

2. இலங்கையில் சீமெந்துத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
**காங்கேசன்துறை**

3.ரயர்\ரியூப் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
**களனி**

4.ஒட்டுப் பலகைத் தொழிற்சாலை அமைநதுள்ள இடம்?
**ஜின்தோட்டை**

5. கண்ணாடி தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
**நாத்தாண்டியா**

6.பால் மா தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
**அம்பேவல**

7. கட்டிப்பால் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
**பொலநறுவை**

8. கோதுமை மா தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
**திருகோணமலை**

9.இரும்புத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
**ஐக்கல**

10. உருக்குத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
**ஒருவெல**

11. சீனித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
**கிங்குரான**

12.கனிப் பொருள் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்? **புல்மோட்டை**

13. உப்புத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
**அம்பாந்தோட்டை**

14. புடவைத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
**பூகொடை**

**சி.டினோஜன்,**
அங்கத்துவ இலக்கம்181,
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை



# சொற்சிலம்பம் போட்டி

33

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | | ■ |
| 6 | | ■ | 7 | | | ■ | 8 |
| | ■ | 9 | | ■ | 10 | 11 | |
| ■ | 12 | | ■ | 13 | | | |
| 14 | | ■ | 15 | | | | ■ |
| | ■ | 16 | | | | ■ | 17 |
| 18 | 19 | | ■ | | ■ | 20 | |
| 21 | | | | ■ | 22 | | |

அனுப்புபவர் பெயர்:.......................................
முழுமையான தபால் விலாசம்: ...............................
.......................................................
கையொப்பம்:.......................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள் வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலி கள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1.தொப்புள், 6.சரஸ்வதி, 7. இது என்ற மனமே பொன்செய்யும் மருந்து, 9.அறிவுக்கூர்மை/ புகழ், 10.எதிலும் திருப்தியில்லாத நிலை இப்படியிருக்கும், 12.காணியின் எல்லை, 13.நூறு செய்யுள்கள் கொண்ட பிரபந்தம், 14.பலவல்லாது ஒன்றாகவே இருப்பது, 15.பேரூர் அல்லது பட்டினம், 16.பஞ்சபாண்டவருள் ஒருவன், 18.சரியாகப் பொருத்தமான நிலை, 20.உயிரின் ஆரம்பம் இங்கே, 21.இந்திய மாநிலங்களில் ஒன்று, 22.கிட்ட

## மேலிருந்து கீழ்

1.மரக்கலம், 2.உடலைப் பீடிப்பது, 3.கண்பார்வையற்றவன், 4.போதை தருவது, 5.விநாயகருக்கு இப்படியும் ஒரு பெயருண்டு, 8.யாதொன்றும், 9.அருவியில் எழுவது, 11.விடாய், 12.பழம், 13.மனைவியின் சகோதரியின் கணவன், 14. கணவன்-மனைவி, 15.சிரிக்குமாறான ஏவல், 16.நம்பிக்கை வை, 17.மாட்சிமை, 19.அணி அல்லது நில், 20.விழி

### சொற்சிலம்பம் போட்டி 31 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சபதம், 4.மதம், 6.துலாம், 7.தரணி, 8.பிறப்பு, 10.புசி, 12.தரு, 13.சுவாதி, 16.நவமி, 18.துறைமுகம், 20.முதுமை, 22.கல், 24.குதி, 25.தோடு, 26.கலி

**மேலிருந்து கீழ்**

1.சதுப்பு, 2.பலா, 3.தம்பி, 4.மரபு, 5.தனி, 7.தப்பு, 9.கருமி, 11.சிசு, 12.தவம், 14.வாதுமை, 15,திறை, 16.நகல், 17.முதுகு, 18.துமை, 19.முகடு, 21.துதி, 23.வலி

**சொற்சிலம்பம் போட்டி இல.33**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
13.02.2021 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

### பரிசு பெற்றவர்கள் கவனத்துக்கு...!

சஞ்சீவியில் சொற்சிலம்பம் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியோர் வார நாள்களில் உதயன்- சஞ்சீவி அலுவலகத்தில் தங்கள் பணப்பரிசைப் பெற்றுக்கொள்ளமுடியும். நேரில் வருகை தர முடியாதவர்கள் 0214927429 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (ஆ-ர்)

### போட்டி இலக்கம் 31இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**பா.டர்னிகன்**
இடைப்பிட்டி, காரைநகர்.

**2 ஆம் பரிசு**
**சா.ராதிகா**
யசோ ரெக்ஸ், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி

**3 ஆம் பரிசு**
**பு.சஞ்ஜை**
1ஆம் வட்டாரம் மேற்கு, நெடுந்தீவு

**4 ஆம் பரிசு**
**சேர்ச்சிலம்மா, நவரெட்ணராஜா**
இல.19, 2ஆம் குறுக்கு வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்

**5 ஆம் பரிசு**
**இ.மனோகரி**
இல.4,முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

# மாணவர் கழகம்



203

பெயர்: றெ. ஜெனிஸ்ரன்,
முகவரி: 82, காரைநகர் றோட், யாழ்ப்பாணம்.
பி. திகதி: 2011.05.04
பாடசாலை: யா/ஆனைபந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம்.



204

பெயர்: க.ஜினோஷ்,
முகவரி: பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவில்.
பி. திகதி: 22.10.2012
பாடசாலை: யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.



205

பெயர்: பகீரதன் வைஷ்ணவி,
முகவரி: சிவன் வீதி, பருத்தித்துறை.
பி. திகதி: 27.09.2010
பாடசாலை: மெதடிஸ்த பெ.உயர்தர பாடசாலை.



206

பெயர்: பகீரதன் குருபரன்,
முகவரி: சோமர் வீதி, தாவடி தெற்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
பி. திகதி: 11.11.2006
பாடசாலை: யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.




207

பெயர்: பிரகஷ்னி கணேசநாதன்,
முகவரி: 886, பருத்தித்துறை விதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
பி. திகதி: 07.12.2010
பாடசாலை: யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

சஞ்சீவி

## மாணவர் கழகம்



சஞ்சீவி

**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ........................................
2. முகவரி: ........................................
........................................
3. பிறந்த திகதி: ........................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ........................................
5. கற்கும் தரம்: ........................................
6. தொலைபேசி இலக்கம்: ........................................

மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

**உங்கள் புகைப்படங்களுடன்...**

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

0773165555




# தமிழ் – பௌத்த மரபுரிமையை உரிமைகோரல்

தமிழர்கள் மதப்பன்மை அடையாளம் உடையோர். அவர்கள் சைவ - வைணவ மதங்களை அனுட்டிப்போர் மட்டுமல்ல, ஏராளமான தாய்த் தெய்வங்கள் இயற்கைச் சக்திகள் முதல் ஆசிவகம், சமணம், பௌத்தம், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் மட்டுமன்றி சித்தர் மரபுகள், சூபிசம், வள்ளலார் மரபு, உலகாயதம் உட்படக் கடவுள் மறுப்பு வரை அவர்கள் பல்வகைமையானவர்கள். அதுதான் அவர்களது தனித்துவமும் சிறப்படையாளமுமாகும். அவ் வகையில் இலங்கைத்தீவில் சிங்கள பௌத்தம் போலவே தமிழ்- பௌத்தமும் ஒரு வரலாற்று யதார்த்தமாகும். இதுபற்றி தமிழர்கள் சிங்களவர்கள் உட்பட மேற்கு நாட்டவர்கள் எனப் பலரும் பலகாலமாக எழுதியும் விவாதித்தும் வந்துள்ளனர்.

எனினும் இலங்கையின் சிங்கள பௌத்த தேசநிர்மாண எடுத்துரைப்பை கேள்விக்குள்ளாக்கும் வலுவான ஒரு வரலாற்று யதார்த்தமாக தமிழ் பௌத்தம் அமைவதால் அதனைத் தடய அழிப்புச் செய்தல் அல்லது குறைந்தபட்சம் விளிம்பு நிலைப்படுத்தல் எனும் தந்திரோபாயங்கள் ஊடாக முற்றாக மழுங்கடித்தல் என்பது இலங்கையின் அதிகாரபூர்வமான வரலாற்று எழுத்துப் பாரம்பரியத்தில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் நியமங்களுள் ஒன்றாகும். இத்தகைய பின்னணியில் இவ்விடயம் குறித்து 2006இல் பேராசிரியர் சுனில் ஆரியரத்தின எழுதி, கொடகே நிறுவனம் வெளியிட்ட 'தெமள பௌத்தைய' ('தமிழ் பௌத்தர்') என்ற நூல் முக்கியமானது.

அது தமிழக பௌத்தம் முதல் இலங்கைத்தீவு ஈறான தமிழ் பௌத்தப் பரம்பல் பற்றிப் பேசுகிறது.

புத்தசாமி தியாகனூர் தமிழ்நாடு, (சோழர் காலம்) கந்தரோடை, யாழ்ப்பாணம் (1917) அண்மைக்காலத்தில் இலங்கைக்குள் இருந்து எழுதப்பட்டவற்றுள் 'Tamil Buddhism in Sri Lanka' என்ற தலைப்பில் ஜி.பி.வி.சோமரட்ண எழுதிய கட்டுரையும் முக்கியமானது. அது தவிர பேராசிரியர்கள்; ஆ.வேலுப்பிள்ளை பீற்ரர் ஷோக் ஆகியோரால் சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்தை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட பல கட்டுரைகள் மற்றும் நூல்கள் என்பவை இவ்விடயம் தொடர்பில் முக்கியமானவை. இவை யாவற்றுக்கும் முன்னோடியாக இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே தமிழ் பௌத்தம் தொடர்பான புலமைரீதியான பல ஆய்வுகளும் நூல்களும் வெளிவரத் தொடங்கி இருந்தன. கலாநிதி பொ இரகுபதி 'Buddhismin Yalppanam' எனும் தலைப்பில் இலங்கையில் தமிழ் - பௌத்தத்தை முன்னிறுத்தி ஒரு கட்டுரையை 1990 களில் 'லங்கா' ஆய்விதழில் எழுதியுள்ளார் என்பதுடன், அவரது 'Early settle ments in Jaffna' (1987) என்ற யாழ்ப்பாண அகழ்வாய்வியல் பற்றிய முன்னோடி நூலும் அதுபற்றிய அடிப்படைகளை எடுத்துக்காட்டியுள்ளது. மேலும் இவ்விடயத்தின் வேறுபட்ட பரிமாணங்கள் பற்றி தமிழகத்தை முன்னிலைப்ப டுத்தும் குறிப்பிடத்தக்க நூல்களும் ஆய்வுகளும் இன்றுவரை வெளிவந்தவண்ணமாய் உள்ளன. சென்னையை மையமாகக் கொண்ட 'ஆசியக் கற்கைகளுக்கான நிறுவனம்' 'சென்னை அரும்பொருளகம்' முதலான நிறுவனங்கள் தமிழ் பௌத்தம் பற்றிக் குறிப்பிடத்தக்க பல நூல்களைக் கடந்த சில தசாப்தங்களாகத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன.


கந்தரோடை, யாழ்ப்பாணம் (1917)

இந்தியப் பெருநிலத்துக்கும் இலங்கைக்கும் குறிப்பாக இலங்கையின் வட பகுதிக்கும் இடையிலான புவியியல் நெருக்கம் பற்றி கலாநிதி கா.இந்திரபாலா குறிப்பிடும்போது 'இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட கடலானது, குறிப்பாக பாக்குநீரிணைப் பிராந்தியம் என்பது நிலங்களை பிரிக்கும் கடலாக அன்றி எப்போதும் நிலங்களை இணைக்கும் ஒரு கடலாகவே தொழிற்பட்டிருக்கிறது' என்கிறார். அக்காலத்து இலங்கையின் பெருமளவு கடற் பெருந்துறைகள் வடபுலத்தில் அமைந்தமை கடற் போக்குவரத்து வலைப்பின்னலில் வடபுலம் பெற்ற முதன்மை என்பனவற்றின் பின்னணியில் இலங்கைக்குள் வெளியார் உள்நுழைவதற்கான அகலப் பெருவாயிலாக வடபுலமே முதன்மை பெற்று இருந்தது. தமிழின் முதற்காவி யங்களுள் ஒன்றான மணிமேகலை அதன் தலைமைக் கதாபாத்திரமும் பௌத்த பிக்குணியுமான மணிமேகலை மணிபல்லவம் என்று அப்போது


புத்தசாமி, தியாகனூர்
தமிழ்நாடு (சோழர் காலம்)

அழைக்கப்பட்ட யாழ்ப்பாணத்துக்கு ஆகாயமார்க்கமாக விஜயம் செய்தாள் என்று கூறுகிறது. இங்கு கூறப்படும் 'ஆகாய மார்க்கம்' என்பதை உருவகமாகக் கொள்ள வேண்டும் எனவும் அதற்குக் காரணமாக அக்காலத்து சமூக வழக்காறுகள் இருந்துள்ளன எனவும் மயிலை சீனி வேங்கடசாமி கருதுகிறார். அவ்வகையில் இலங்கைத் தீவினுள் நடந்த அனைத்து பௌத்த நுழைவுகளும் வடபுலத் துறைமுகம் ஒன்றின் ஊடாகவே அதிகபட்சம் நடைபெற்று இருக்கும் எனக் கொள்வதில் தவறேதுமில்லை என்ற வகையில் வெள்ளரசக் கிளையின் இலங்கைத் தீவுக்கான வருகை என்பது அப்படிப்பட்ட புரிதல் ஒன்றுக்கான மிகச் தேர்ந்த உதாரணம் ஆகும். அவ்வாறான ஒரு புவியியல் வரலாற்று யதார்த்தத்தின் பின்னணியில் வடபகுதி பௌத்தமயப்படாது பௌத்தத்தை அவ்வாறே - நேரடியாகப் 'பொதி செய்து' அநுராதபுரத்திற்கு அனுப்பியது என்றவாறான வரலாற்று எழுத்து எவ்வளவு தூரத்திற்கு தர்க்க வலுவுடையதாக இருக்கமுடியும்? என்பது அடிப்படையான ஒரு கேள்வியாகும். அது மட்டுமின்றி அவ்விதம் யோசிக்கும் போது இலங்கைத்தீவின் வடகரையில் இருந்து அனுராபுரம் வரை பௌத்த (தமிழ்) வரலாற்றின் தவறவிடப்பட்ட அல்லது கிழித்து வீசப்பட்ட பக்கங்கள் உண்டெனவே எண்ணத் தோன்றுகிறது.

அதுமட்டுமன்றி நாம் இன்று அரசியல் ரீதியான அச்சம் காரணமாக மறைக்கும் வடபுலத்து பௌத்தம் தொடர்பான தடயங்கள் குறிப்பாக வாய்மொழி வரலாறுகளை - அதிலும் குறிப்பாக வலிகாமப் பகுதிகளில் இன்றும் வழங்கும் வாய்மொழிக் கதைகளைத் தொகுத்துப் பார்த்தால், தமிழ்ப் பகுதிகளின் பௌத்தப் பரம்பலது ஆதித் தடங்களைப் பின்தொடர்வதற்கான வாய்ப்புக்கள் மேலும் அதிகரிப்பதனைக் கவனிக்க முடியும். அதே சமயம் பக்தி இயக்கத்தின் எழுச்சியும் அதன் தமிழ் மொழிநிலைப்பட்ட தன்மையும் எவ்வாறு தமிழகத்தில் எவ்விதம் ஒரு பௌத்த சமண மத நீக்கத்தை - மதப்பண்பாட்டு அரசியலின் மோதற்களத்தை உற்பத்தி செய்து பௌத்த - சமண மதங்களைப் பின்தள்ளியதோ, அதே வகையான ஒரு நிலைமாற்றமே இலங்கைத்தீவின் தமிழ் மொழிபேசும் பிராந்தியங்களிலும் நடைபெற்றது எனக் கொள்வதற்கான வரலாற்று வாய்ப்புக்கள் அதிகம்.

சைவ சமயக்குரவரான திருஞானசம்மந்தர் தமிழகக் கரையிலிருந்து இலங்கைத் தீவிலுள்ள கோயில்களை நோக்கிப் பாடுதல் என்பது ஒரு அகன்ற சைவத்தென்னகத்தை கட்டி எழுப்பும் அடிப்படை உடையது எனக் கண்டிப்பாக வாதிட முடியும். அது பௌத்தத்திலிருந்து முழுமையாக தமிழர்களை இடம்மாற்றி இருக்கலாம். இத்தகைய வரலாற்று நிலைமாற்றமும் 'சிங்கள பௌத்த' 'சைவத் தமிழ்' என்ற மொழி - மதக் கூட்டு அடையாளம் ஒன்று உற்பத்தியாவதற்கான காரணங்களைக் கட்டமைத்த வரலாற்று நிலபரமாக இருக்கலாம்.

அதேநேரம் கிடைக்கப் பெறும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், வடக்கு கிழக்கு பிராந்தியங்களுக்கு வெளியாலும் தமிழ் பௌத்த மையங்களும் பௌத்தத்துக்கான தமிழ் வணிகக் கணங்களின் பொதுப்படையான போசிப்புக்களும் கல்வெட்டுக்கள் முதலியவற்றால் அறியக் கிடைக்கின்றன.

அதனால்தான் லெஸ்லி குணவர்த்தனா 'திராவிட பிக்கு என்பவர் புராதன இலங்கையில் நன்கு அறியப்பட்ட ஒரு நபரே' எனக் கூறுகிறார். அதேநேரம் இலங்கையின் பௌத்த வரலாற்று மூலங்களுள் ஒன்றாகக் கருதப்படும் சூளவம்சம் தமிழ் பேசும் பிக்குகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதையும் அவதானிக்க வேண்டும். திருகோணமலையிலுள்ள 'இராஜராஜப் பெரும்பள்ளி' ('வெல்கம் விஹார') மட்டுமல்ல பொலநறுவையிலுள்ள 'தெமள மஹா சாயா' வரை சரியான வரலாற்றின் தடயங்கள் வழி நகர்ந்தால் வரலாற்றின் புதிய அல்லது மறைக்கப்பட்ட செய்திகளை வரலாற்றாசிரியர்களால் வெளியெடுக்க முடியும். அது மட்டுமின்றி தென் இலங்கையிலுள்ள பிரதான பௌத்த மையங்களில் தமிழ்நாட்டில் இருந்து வந்த பல துறவிகள் தலைமைக் குருக்களாக, ஆசாரியர்களாகத் தொழிற்பட்டமை பற்றிய ஆதாரங்கள் பல நூல்களிலும் கல்வெட்டுக்களிலும் பதியப்பட்டு உள்ளன.

சோழநாட்டில் இருந்து வந்த புத்த தத்தர் (கி.பி 5) காவேரிப்பட்டினம், காஞ்சிபுரம் ஆகிய பௌத்த மடங்களில் மட்டுமின்றி அனுராதபுரத்திலிருந்த விகாரையிலும் சேவையாற்றியுள்ளார். இன்றைய தமிழகத்தின் திருநெல்வேலிப்பகுதியில் இருந்து கி.பி 6ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த தம்மபால, அனுராதபுர மகாவிகாரையின் தலைமைக் குருவாக இருந்துள்ளார். 'சோழியத் தேரர்கள்' எனப் பொதுவாக அழைக்கப்பட்ட டிபன்ஹர புத்தமித்திர மஹாகாசியப (கி.பி 1112கள்), பாண்டிய நாட்டிலிருந்து புறப்பட்டு வந்தவரும் பௌத்த உலகிற் புகழ்பெற்றவருமான தர்மகீர்த்தி, மதுரையிலிருந்து வந்த வஜ்ஜிரயான பௌத்த பிரிவைச் சேர்ந்த வஜ்ஜிரபோதி (கி.பி 67கள்) என எண்ணற்ற தமிழ்ப் பிக்குகள் தென்னிலங்கையின் இன்றைய மாபெரும் 'சிங்கள பௌத்த மையங்கள்' என அழைக்கப்படுவனவற்றில் செயற்பட்டு வந்துள்ளனர்.

அதேநேரம் இலங்கைத்தீவில் தேரவாத - மஹாயான பௌத்த சமயப் பிரிவுகளுக்கிடையிலான மோதலில் முக்கிய பங்காற்றியவர் எனக் கருதப்படும் சங்கமித்தை கூட கி.பி 4இல் சோழநாட்டில் இருந்து இலங்கைக்கு வந்தவராகவே கூறப்படுகிறார். இவ்வகைப்பட்ட வருகைகள் மட்டுமின்றி பல்வேறுபட்ட தமிழ் பௌத்த பண்பாட்டுக் கலப்புக்களையும் இலங்கைத் தீவில் கவனிக்க முடியும். உதாரணமாக தமிழ் (பௌத்த) இலக்கண நூலான வீரசோழியம் சிங்களத்தில் பாவனையில் இருப்பதனை அவதானிக்கலாம்.

இந்தவகையில் தமது தமிழ் பௌத்தக் கடந்தகாலத்தை ஏற்கவும் பிரகடனப்படுத்தவும் அதனைப் புலமை ரீதியாக நிரூபணம் செய்யவும் தமிழ்த் தரப்பு முன்வர வேண்டும். அதனை வெளிப்படுத்துவதால் வரக்கூடிய சிங்கள பௌத்த மேலாண்மையின் அனைத்துப் பொறிமுறைகளையும் சந்திக்கக் கூடிய புலமை மற்றும் அரசியற் செயற்பாடு சார்ந்த தயார்நிலையை தமிழர்தரப்பு அடைய வேண்டும்.

இல்லாவிட்டால் சிங்கள பௌத்த பெருங்கதையாடலுள் தமிழ் பௌத்தக் கடந்தகாலம், அதன் மரபுரிமைகள் கரைக்கப்பட்டு முழு இலங்கையும் சிங்கள பௌத்த மயமாக்கப்படும். அது தமிழ் பௌத்த கடந்த காலத்தை மட்டுமன்றி தமிழ் சைவ, தமிழ் இஸ்லாமிய, தமிழ் கிறிஸ்தவ இருப்பு உட்பட அனைத்தையும் விரைவாக விழுங்கி ஏப்பம் விடும். இந்த வரலாற்று விளக்கத்தை அடைவதனூடாகத்தான் இன்று கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் பௌத்தத்தின் பெயரிலான தமிழர்களது மரபுரீதியான வாழிடப்பகுதிகளைக் கைப்பற்றும் செயற்பாடுகளுக்கான அறிவுபூர்வமான எதிர்வினை ஆற்றலைக் கட்டி எழுப்பலாம். இந்தத் தமிழ் பௌத்தக் கடந்தகாலத்தை உரிமை கோரல் என்பது தமிழ் மரபுரிமைக் களத்தை மேலும் செழுமைப்படுத்துவது மட்டுமன்றி, இலங்கைத் தீவில் பௌத்தத்தின் பெயரால் கட்டப்பட்டிருக்கும் 'சிங்கள பௌத்த தேசம்' என்ற பெருங்கதையாடலை குழப்பும் செயற்பாடாகவும் அமையும். ■

# முள்ளிவாய்க்காலில் இருந்து மாலி வரை

நேர்காணல்: பொ.சோபிகா

**கே: இலங்கை அரசாங்கம் இப்போது நினைவேந்தும் உரிமை மற்றும் இறந்தவர்களின் உடல்களைப் புதைத்தல் உட்பட சிறுபான்மையினரின் மிகவும் அடிப்படையான மனித உரிமைகளைக் கூட மறுக்கின்றது. இந்த நிலையில் ஐ.நா. சபையோ வெறும் அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர வேறு எதுவும் இதுவரை செய்யவில்லை. இவ்வாறு ஆக்கபூர்வமாக எதுவும் செய்யமுடியாதுள்ள ஐ.நா, தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு தீர்வு வழங்குமென எவ்விதம் நம்புவது? அனைவரது கவனமும் தற்போது ஜெனிவா மீது திரும்பியுள்ள வேளையில் இந்த முறையாவது தமிழர்களுக்கு நீதி கிடைக்குமா?**

**ப:** நீதியையும் பொறுப்புக்கூறலையும் அடைவதற்கு மோசமான மனித உரிமைகள் மீறல்கள் புரியப்பட்டுள்ளன என்பதற்கான சாட்சியங்கள் அவசியம். மனித உரிமைகளின் நிலைமை பற்றிய ஐ.நா.வின் அறிக்கைகள் குறிப்பாக OHCHR இன் அறிக்கைகள், சர்வதேச சமூகம் மற்றும் குறிப்பாக உறுப்பு நாடுகள் நடவடிக்கை எடுப்பதற்கு மிகவும் முக்கியமானவை.

மனித உரிமைகள் உயர் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் மற்றும் அவரது அலுவலகத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையானது தீர்மானம் 30/1 இன் கீழ் இலங்கை அரசாங்கம் தனது கூட்டு ஈடுபாட்டை நடைமுறைப்படுத்தத் தவறியமைக்கான ஆதாரமாக அமைந்துள்ளது. அத்துடன் இராணுவ மயமாக்கல் மற்றும் இலங்கையில் ஜனநாயகத்தின் பின்னடைவு பற்றிய கரிசனைகளையும் எழச் செய்கின்றது. இது மிகவும் முக்கியமானது.

ஏனெனில் இந்த அறிக்கை இல்லாவிட்டால் ஜெனிவா அமர்வின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரத்தை பேசுபொருளாக்க ஒரு சிறிய சந்தர்ப்பமே இருக்கும். ஆனால் இப்போது பச்லெட் அம்மையார், ஜெனிவாவின் மனித உரிமைகள் சபையிலுள்ள உறுப்பினர்களுக்கு பொறுப்புக்கூறலை தொடர்வதற்கு பல்வேறு வகையான பொறிமுறைகளை வழங்கியுள்ளார்.

இறுதிப் போரில் புரியப்பட்ட போர்க் குற்றங்களுக்கு போதிய பொறுப்புக்கூறல் இல்லாமை குறித்து முற்றிலுமான விரக்தியையும் வலியையும் உங்களுடைய வினாவில் நான் உணரமுடிகிறது.

மக்கள் அனுபவித்துள்ள கொடுமைகளுக்கு முற்றிலுமான தண்டனையிலிருந்து பாதுகாப்பு இருந்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இலங்கையில் இறந்தவர்களை நினைவுகூருவதற்கான உரிமை கூட மறுக்கப்பட்டதனால் இலங்கை நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில், இறுதியுத்தத்தில் உயிரிழந்தோரை நினைவேந்த அமைக்கப்பட்ட நினைவுத்தூபி இடிக்கப்பட்ட போது நாங்கள் அதைக் கண்டோம்.

மேலும் தங்கள் உறவுகளின் நிலையை அறிய பாதுகாப்பு படையினரை அழைத்து விசாரணை செய்வார்கள் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறாமையால், காணாமற்போனவர்களுக்கான அலுவலகத்தின் மீது காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் நம்பிக்கை இழந்திருப்பதையும் நாங்கள் பார்க்கின்றோம்.

அதேவேளையில், நீதிக்கான தமிழர்களின் தாகம் இன்னும் தீரவில்லை என உறுதியாக கூறுகிறேன். தமிழர்கள் தற்போதைய சூழ்நிலையுடன் போராடும் அதேவேளையில் உலகம் முழுவதும் எம்மைப் போன்ற சிறு குழுக்களும் தனிநபர்களும் ஆதாரங்களை ஆவணப்படுத்தி சேகரித்து, எதிர்காலத்துக்காக அவற்றைப் பாதுகாத்தும் வருகின்றோம். இது ஒரு காப்புறுதித் திட்டம் போன்றது என்பதால் தற்போது இடம்பெறும் மீறல்களைத் தொடர்ந்தும் ஆவணப்படுத்துவதுடன் கடந்த காலத்தில் இடம்பெற்ற மீறல்களுக்கான ஆதாரங்களைச் சேகரித்து பாதுகாப்பதும் மிகவும் முக்கியமானதாகும். பல நாடுகளில், மிகப்பெரும் அக்கிரமங்கள் இடம்பெற்ற பின்னர் நீதி மற்றும் பொறுப்புக்கூறலைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்ட காலம் எடுக்கின்றது., ஆனால் நாங்கள் சிறிது சிறிதாக தொடர்ந்தும் முயற்சி செய்வது அவசியம் ITJP MdhJ இலத்தீன் அமெரிக்கா மற்றும் கலிபோர்னியாவில் நீதிமன்ற வழக்குகளைத் தொடர்ந்திருக்கிறது. அத்துடன் நாங்கள் ஐ.நா அமைதிகாப்பு பணியில் இலங்கை தொடர்ந்தம் பங்கெடுப்பது பற்றியும் கேள்வி எழுப்பியுள்ளோம். இந்த அறிக்கைகள் யாவும் உபயோகமற்ற காகிதத் துண்டுகள் போல இருக்கலாம். ஆனால் அவை தான் எதிர்காலத்தில் பொறுப்புக்கூறலைக் கட்டியெழுப்பவதற்கான அடித்தளமாக உண்மையில் இருக்கப் போகின்றன.

எதிர்காலத்தில் எந்தவொரு நீதிமன்ற வழக்கோ அல்லது தடை விண்ணப்பமோ போன்றவற்றை நடைமுறைக்கு கொண்டுவர, குற்றங்களை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரம் அவசியமாகும். பச்லெட்டின் அறிக்கையானது ஐ.நா அமைதிகாப்பு பணியில் ஈடுபடும் இலங்கைப் படையினரை அதற்குரிய பொறிமுறைகளின் படி ஆய்வுக்குட்படுத்தல் மற்றும் அமைதிகாப்பு பணியில் பயன்படுத்தல் பற்றிய பிரச்சினையையும் எழுப்புகின்றது. அவருடைய கருத்துக்கள் பொறுப்புக்கூறலை அடைவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றன.

## சுயாதீனத் தன்மையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இழந்துவிட்டது

**கே: ஜெனிவா அமர்வு நெருங்கும் சமயத்தில் இலங்கையிருந்து படையினரை ஐ.நா. படைக்கு பயன்படுத்துவதை இடைநிறுத்த வேண்டும் என தற்போது கோரிக்கை விடுப்ப தற்கான காரணம் என்ன?**

**ப:** படைகளை வெளிநாட்டில் ஈடுபடுத்துவதற்கு முன்னர் உரிய பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டிய சட்ட ரீதியான கடமை ஐ.நா. அமைதிகாக்கும் அமைப்புக்கும் உண்டு. இலங்கைப் படையினர் அமைதிகாக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட முன்னர் சரியான முறையில் அதற்குரிய பொறிமுறைகளின்படி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை நியுயோர்க்கில் உள்ள அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். அண்மைய ஆண்டுகளாக,குறித்த அதிகாரிகள் அதனைத் தாம் செய்யாமல், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவையே நம்பினார்கள்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னர் ஒரு சுயாதீனமான ஒரு அமைப்பாக கருதப்பட்டது. ஆனால் 20 ஆவது திருத்தச் சட்டத்தின் பின்னர் அது சுயாதீனத் தன்மையை இழந்துவிட்டது. இதனை நான் மட்டும் சொல்லவில்லை. தனது இறுதி அறிக்கையில் மனித
கான ஐ.நா.வின் உயர் ஆணை
சேல் பச்லெட்டும் " இலங்கை
மைகள் ஆணைக்குழு அரசி
கப்பட்டுள்ளது. அதனுடைய
முன்னாள் அரசாங்க அமை
நியமிக்கப்பட்டமையால்
சுயாதீனத்தன்மை பாதிக்கப்
என்றும் தெளிவாகத் தெரிவி
படையினரை ஆய்வுக்குட்ப
ஒரு புதிய பொறிமுறை வே
தையே இது காட்டுகின்றது.
பொறிமுறை கொண்டுவர
இலங்கையில் இருந்து படையி
திப் பணிகளில் பயன்படுத்
இடைநிறுத்தப்பட வேண்டு

## இராணுவத்தளபதியே இலங்கைக்கு பிரச்சினை

**கே: இது ஒரு கொள்
அல்லது தொழி
சார்ந்த விடயம்
லையா?**

**ப:** இல்லை. ஐக்கி
சபையிலுள்ள அ
களும் சர்வதே
மான, மனித உரி
அகதி கள் சட்டத்தை மதித்து
ஊக்குவிப்பது அவசியம் என்ற
தக் கொள்கைக்கு உட்பட்டு
(ஜூலை 2011 இல் ஏற்றுக் கொ
மனித உரிமைகள் உரிய அக்கல
ஐ. நா. வைக்கேட்டுக் கொள்
சர்வதேச சமூகத்தின் உறுப்பின
கையை அதன் வாக்குறுதிக
நடக்குமாறு நிர்ப்பந்திக்க
ஆனால் அவை ஐக்கிய நாடு
கொள்கைளை மதித்து நடக்கு
டுக் கொள்ளமுடியும். எனவே
கொஞ்சமாவது பொறுப்புக்க
றுக் கொள்வதற்கான ஆரம்ப
அடையமுடியும்.
அமைதிகாக்கும் படையினரா
களுக்குச் செல்லும் இராணுவ
நா. சார்பாகச் செயற்படுமா
செய்து கொள்ளப்படுகின்றார்
படையினர் நிலை கொண்டு
லுள்ள பொதுமக்கள் ஆபத்தில்
பாதுகாப்பாக உள்ளார்கள் என்
கவனமாக உறுதிப்படுத்த வே
தனது அதிகாரத்தின் கீழ் மே
பட்ட அனைத்து நடவடிக்
ஐ.நா. வெற்றிகரமாக கட்டுப்ப
விட்டாலும் , அந்த நாடுகளி
ளைப் பாதுகாக்கும் கடமை
னமும் உண்டு. பாரதூரமான ம
மீறல்கள் இடம்பெறும் அபாய
ஒரு இராணுவ வீரரை பெரும்
அவரது சொந்த நாட்டுக்கு
அனுப்ப முடியும் அல்லது அ
படையினரைப் பயன்படுத்த
இடைநிறுத்த முடியும்.
வெளிநாட்டுக்கு படைகளை
இலங்கை போன்ற நாடுகள்,
கும் நடவடிக்கைகளில் படை
படுத்த முன்னர் தமது படையி
செய்வதற்கான பிரதான பெ



**நீதிக்கான தமிழர்களின் தாகம் இன்னும் தீரவில்லை என உறுதியாகக் கூறுகிறேன். தமிழர்கள் தற்போதைய சூழ்நிலையுடன் போராடும் அதேவேளையில், உலகம் முழுவதும் எம்மைப் போன்ற சிறு குழுக்களும் தனிநபர்களும் ஆதாரங்களை ஆவணப்படுத்தி சேகரித்து, எதிர்காலத்துக்காக அவற்றைப் பாதுகாத்தும் வருகின்றோம். இது ஒரு காப்புறுதித் திட்டம் போன்றது என்பதால், தற்போது இடம்பெறும் மீறல்களை தொடர்ந்தும் ஆவணப்படுத்துவதுடன் கடந்த காலத்தில் இடம்பெற்ற மீறல்களுக்கான ஆதாரங்களைச் சேகரித்து பாதுகாப்பதும் மிகவும் முக்கியமானதாகும்.**

சர்வதேச
வேற்றுப்
ஐ.நா. நி
தென் ஆ
இடைக்கா
யன் சஞ்சி

**சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் நிறை
வேற்றுப் பணிப்பாளரும், இலங்கை பற்றிய விசாரணைக்கான
ஐ.நா. நிபுணர் குழுவின் ஒரு உறுப்பினராக இருந்தவரும் ,
தென் ஆபிரிக்காவைத் தளமாகக் கொண்ட ஒரு முன்னணி
இடைக்கால நீதிக்கான நிபுணருமான ஜஸ்மின் சூக்கா, உத
யன் சஞ்சீவிக்காக வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.**



ல் மனித உரிமைகளுக்
டயர் ஆணையாளர் மிச்
" இலங்கை மனித உரி
குழு அரசியல் மயமாக்
அதனுடைய தலைவராக
ங்க அமைச்சர் ஒருவர்
மையால் அதனுடைய
பாதிக்கப்பட்டுள்ளது"
த் தெரிவித்துள்ளார்.
ப்வுக்குட்படுத்துவதற்கு
முறை வேண்டும் என்ப
டுகின்றது. அவ்வாறான
ாண்டுவரப்படும்வரை
ந்து படையினரை அமை
பயன்படுத்தப்படுவது
_ வேண்டும்.

**...யே
...ச்சினை**

**ஒரு கொள்கை ரீதியிலான
து தொழில்நுணுக்கம்
த விடயம் மாத்திரமில்
ா?**

லை. ஐக்கிய நாடுகள்
யிலுள்ள அனைத்து நாடு
ம் சர்வதேச மனிதாபி
, மனித உரிமைகள் மற்றும்
தை மதித்து நடப்பதை
சியம் என்ற தனது சொந்
உட்பட்டு நடக்குமாறு
ஏற்றுக் கொள்ளப்பட்ட
ரிய அக்கறை கொள்கை
டுக் கொள்கின்றது.
ன் உறுப்பினர்கள் இலங்
ாக்குறுதிகளை மதித்து
ப்பந்திக்க முடியாது.
க்கிய நாடுகளை அதன்
த்து நடக்குமாறு கேட்
ும். எனவேதான் இங்கு
பாறுப்புக்கூறலை பெற்
ன ஆரம்பத்தையேனும்

டையினராக வெளிநாடு
் இராணுவத்தினர் , ஐ.
யற்படுமாறு ஒப்பந்தம்
படுகின்றார்கள் அமைதிப்
கொண்டுள்ள நாட்டி
ள் ஆபத்தில் இல்லாமல்
ளார்கள் என்பதை ஐ.நா.
படுத்த வேண்டியுள்ளது.
ன் கீழ் மேற்கொள்ளப்
நடவடிக்கைகளையும்
க கட்டுப்படுத்த முடியா
த நாடுகளிலுள்ள மக்க
ம் கடமை அதற்கு இன்
தூரமான மனித உரிமை
றும் அபாயம் இருப்பின்
ரை பெரும்பாலும் ஐ.நா.
நாட்டுக்குத் திருப்பி
அல்லது அந்த நாட்டின்
பயன்படுத்தப்படுவதை
யும்.
படைகளை அனுப்பும்
நாடுகள், அமைதிகாக்
களில் படையினரை ஈடு
து படையினரை ஆய்வு
ரதான பொறுப்பினை

எடுத்துக் கொள்ளும் அந்த நாடுகளையே ஐ.நா. நம்பியுள்ளது.

இன்னுமொரு நாட்டில் தமது படையினர் மனித உரிமைகளை மீறமாட்டார்கள் என்பதை, அமைதி காக்கும் பணியில் தமது வீரர்களை ஈடுபடுத்தும் நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும். அதற்கு தமது படையினர் பாரதூரமான மனித உரிமைகள் மீறல்களுடன் தொடர்புபட்ட எந்தப் பதிவுகளையும் கொண்டிருக்கவில்லை என்பதை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்த வேண்டிய சட்டரீதியான கடப்பாடு அந்த நாடுகளுக்கு உண்டு. அதனால் தமது படையினர் குற்றமிழைக்காமல் பார்த்துக் கொள்ள ஒவ்வொரு நாடும் அக்கறையோடு இருக்கும்,. இதன் மூலம் போர்க்குற்றம் புரிந்தோரை தமது படைத்தரப்பில் வைத்திருந்து, மக்களுக்கு தீங்கிழைக்கும் அபாயத்திலிருந்து அந்த நாடுகள் பாதுகாத்துக் கொள்ளும்.

ஆனால் தமது இராணுவத் தளபதியே அந்த வகைக்குள் (போர்க்குற்ற மீறலுக்குள்) அடங்குவதே இலங்கைக்கு இப்போதுள்ள பிரச்சினையாகும். அது இப்பொழுது மிச்சல் பச்லெட்டினாலும் அமெரிக்க அரசினாலும் மீளவும் கூறப்பட்டுள்ளது.

## சொன்னதைச் செய்யாத ஐ.நா

**கே:** **இராணுவத் தளபதியாக ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்ட பின்னர் இலங்கையை அமைதி காக்கும் நடவடிக்கையில் இருந்து இடைநிறுத்தப்போவதாக ஐ. நா. சொல்லவில்லையா?**

**ப:** ஆம், தாங்கள் அதைச் செய்வோம் என அவர்கள் சொன்னார்கள். "கடுமையான ஆபத்து நிறைந்த இடங்களைத் தவிர ஏனைய நாடுகளில் இலங்கைப் படையினரை அமைதி காக்கும் பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்வதாக "ஐ.நா கூறியிருந்தது.

இலங்கைப் படைகள் தென்சூடான், மாலி, மத்திய ஆபிரிக்க குடியரசு மற்றும் லெபனான் ஆகிய நாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இத்தகைய மோதல் பகுதிகளுக்கு அனுபவம் வாய்ந்த படையினரைப் பெற்றுக்கொள்வது ஐ.நா.வுக்கு ஒரு பிரச்சினையாக உள்ளது. இதனாலேயே அந்தப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் இலங்கைப் படைகளை அமைதிகாக்கும் பணியில் ஈடுபடுத்துவதில்லை என ஐ.நா முடிவெடுத்தது.

அதனடிப்படையில் லெபனானிலுள்ள இலங்கைப் படைகளை மிகவும் இலகுவாக அங்கிருந்து அகற்றமுடியும் என நம்பப்பட்டது. இலங்கை வெளிநாடுகளுக்கு அனுப்பும் இராணுவத்தினரின் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட 25 வீதமானோர் அங்கேதான் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆனால் அதன் பின்னர் இன்னமும் அப்படி இலங்கைப் படைகள் அங்கிருந்து அகற்றப்படவேயில்லை. இது ஏன் என ஐ.நா விளக்கமளிப்பது அவசியமாகும்.

**கே:** **அமைதிகாக்கும் பணிகளுக்காக இலங்கை இராணுவத்தினர் வெளிநாடுகளுக்குச் சென்றால் அது தமிழர் பகுதிகளில் இராணுவப் பிரசன்னத்தில் தாக்கத்தை உண்டுபண்ணாதா?**

**ப:** வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் 650 இலங்கை இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரைப் பற்றியே நாங்கள் பேசுகின்றோம். அவ்வாறு படையினர் செல்வது வடக்கு கிழக்கின் இராணுவமயமாக்கலை ஒருபோதும் குறைக்காது. ஆனால் இலங்கைக்கு அமைதிகாப்புப் பணி மிகவும் முக்கியமானது. ஏனென்றால் அது நாட்டுக்கு வருமானம் தரும் ஒன்றாக இருப்பதுடன் , முக்கியமாக 2009 க்குப் பின்னர் சர்வதேச ரீதியில் இலங்கை இராணுவத்துக்கு நற்பெயரை ஏற்படுத்தவும் உதவும்.

அத்துடன், சர்வதேச ரீதியாக ஒரு தனித்தகமை வாய்ந்த படையாக அங்கீகரிக்கப்படுவார்கள். இலங்கை இராணுவத்தினர் அனைவரும் மோசமானவர்கள் அல்லர் என்ற தோற்றப்பாட்டையும் உருவாக்க உதவும். இந்த நிலையில் 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற போரில் அல்லது தற்போதும் இடம்பெற்றுவரும் மனித உரிமைமீறல்களில் தொடர்புபட்ட அதிகாரிகளை அதற்குரிய பொறிமுறைகளின் படி ஆய்வுசெய்யும் ஒரு முறை நாட்டில் இருந்தால், தண்டனையில் இருந்து விடுதலைபெறும் கலாசாரம் மற்றும் நடத்தை மாறவேண்டும் என்ற ஒரு செய்தியை அது இராணுவத்திலுள்ள இளநிலை அதிகாரிகளுக்கு உணர்த்தும்,. அதைக் கணக்கிடுவது கடினமானது. ஆனால் நீண்டகாலப் போக்கில் அது முக்கியமானது.

## கெய்ட்டியில் பாலியல் குற்றங்களில் இலங்கைப் படை

**கே:** **இலங்கை இராணுவத்தினர் வெளிநாட்டில் மீறல்களில் ஈடுபட்டுள்ளனரா? அதற்கும் தண்டனையில் இருந்து விதிவிலக்கு உண்டா? வெளிநாட்டவர்களுக்கே பொறுப்புக்கூறல் கிடைக்காது விட்டால் எவ்வாறு நாங்கள் அதனை எதிர்பார்க்கமுடியும்?**

**ப:** ஆம் தண்டனையில் இருந்து பாதுகாப்பு என்பது ஒரு நீண்ட சுழற்சியாக இருந்திருக்கிறது. 2004 இலிருந்து 2007 வரை இலங்கை இராணுவத்தினர் கெய்ட்டியில் அமைதிகாப்பு படையினராக பணியாற்றினார்கள். அப்போது உணவும், இருப்பிடமும் இல்லாமல் தவித்த கெய்ட்டி நாட்டு சிறுவர்கள் மற்றும் சிறுமிகளை திட்டமிட்ட வகையில் பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்தினார்கள். இதுபற்றி ஒரு கூட்டு இராணுவ மற்றும் ஐ.நா குழுவினால் விசாரிக்கப்பட்டது. 2004 பிற்பகுதியில் இருந்து 2007 ஒக்ரோபர் நடுப்பகுதி வரையான காலப் பகுதியில் குறைந்தது 134 இலங்கைப்படையினர் இவ்வாறான துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதையும், ஆகக் குறைந்தது கெய்ட்டி நாட்டுச் சிறுவர்கள் 9 பேர் பாலியல் சுரண்டலால் பாதிக்கப்பட்டார்கள் என்பதையும் சாட்சியங்கள் மூலம் இந்த விசாரணைக்குழு கண்டறிந்தது. இதன் விளைவாக 114 இராணுவத்தினர் 2007 இல் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

> **மக்கள் அனுபவித்துள்ள கொடுமைகளுக்கு முற்றிலுமான தண்டனையிலிருந்து பாதுகாப்பு இருந்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இலங்கையில் இறந்தவர்களை நினைவுகூருவதற்கான உரிமை கூட மறுக்கப்பட்டதனால் இலங்கை நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில், இறுதியுத்தத்தில் உயிரிழந்தோரை நினைவேந்த அமைக்கப்பட்ட நினைத்தூபி இடிக்கப்பட்ட போது நாங்கள் அதைக் கண்டோம்.**

## தண்டனைக்கு பதில் பதவியுயர்வு

பாலியல் சுரண்டல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை பொறுப்பதிகாரிகள் எடுக்கத்தவறியதுடன், அவர்கள் (பொறுப்பதிகாரிகள் )பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் அந்த விசாரணைக்குழு தெரிவித்திருந்தது. அந்த அதிகாரிகளை தாம் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவதாக இலங்கை வாக்குறுதி வழங்கியது .ஆனால் கெய்ட்டியில் சிறுவர்களை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றத்துக்காக இலங்கைப் படையதிகாரிகள் எவரும்சிறைத்தண்டனை அனுபவித்ததாகத் தெரியவில்லை. படையணிக்கு பொறுப்பான அதிகாரிகள் அந்தக் குற்றங்களைநிறுத்துவதற்கு தவறியமைக்காக பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை.

மாறாக, நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்ட படைவீரர்களில் சிலர் 2009 இறுதிப்போர் நடைபெற்ற போது, களமுனையிலும் பணியாற்ற அனுமதிக்கப்பட்டார்கள். கெய்ட்டி பாலியல் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய சில அதிகாரிகள் பதவியுயர்வு வழங்கப்பட்டு, இளநிலை அதிகாரிகளுக்கு பயிற்சிகளும் வழங்கினார்கள்.

இந்த விடயம் தொடர்பாக 2016 இல் சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. ஆணைக்குழுவினால் இலங்கை அரசாங்கத்திடம் வினவப்பட்டது. ஆனால் அதற்கு இன்னமும் இலங்கை அரசாங்கம் பதிலளிக்கவில்லை. கெய்ட்டியில் இடம்பெற்ற சிறுவர்கள் மீதான பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் என்பவை மிகவும் பாரதூரமானவை. அத்துடன் அவை தொடர்ந்தும் இலங்கை இராணுவத்துக்கு ஒரு கரும்புள்ளியாகவே இருக்கும். எனவே அவர்கள் ஒவ்வொரு தடவையும் ஜெனிவாவுக்குச் செல்லும் போதும் ,அமைதிகாக்கும் படையினராக இருப்பதற்கு விண்ணப்பிக்கும் போதும் இந்தவிடயம் இலங்கைக்கு எதிரான மிகப்பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கும்.

(மறுபக்கம் பார்க்க)



# விசுவாசமான மனிதன்

## The Loyal Man

தொகுப்பு: ஆரதி


இது குறும்படங்களின் யுகம் என்றே சொல்ல வேண்டும் போலுள்ளது. அந்த அளவுக்கு ஏராளம் குறும்படங்கள் தினமும் புதிது புதிதாக வந்து கொண்டேயிருக்கின்றன. பலதும் வியப்பை ஊட்டுவன. கலையின் சிறப்பே வியப்பூட்டலில்தான் உள்ளது. இது பெரிய படங்களின் கதையை முடிவுக்குக் கொண்டுவந்து விடுமோ என்று அஞ்சும் அளவுக்கு உள்ளது. கதை, அதை வெளிப்படுத்தும் முறை, நடிகர்கள், நடிப்பு, புதிய களங்கள், கமெரா கையாள்கை, காட்சிகளின் தன்மை, பிற தொழில்நுட்பங்களின் சிறப்பு எனக் குறும்படங்கள் இன்று புதிய பரிமாணத்தில் உயர்ந்து கொண்டிருக்கின்றன. இப்படியான குணவியல்புகளோடுதான் The Loyal Man (விசுவாசமான மனிதன்) என்ற படமும் வந்துள்ளது.

பிரான்ஸில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தப் படம், புலம் பெயர் தமிழர் வாழ்வின் இன்னொரு பக்கக் கதையைச் சொல்கிறது. பரிஸ் நகரத்தில் செயற்படும் தமிழ் மாஃபியா உலகத்தின் ஒரு குறுக்கு வெட்டு முகம் என்று இதைச் சொல்லலாம். புலம் பெயர் சூழலில் இன்றைய தமிழ் அடையாளமும் அதன் தன்மைகளும் எப்படியுள்ளன என்பதைப் படத்தின் காட்சியில் காண்பிக்கப்படும் புறச் சூழல் காட்சிகள் புலப்படுத்துகின்றன. ஆங்காங்கே ஒட்டப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் சுவரொட்டிகள், தமிழ் சினிமாப் பாடல்கள். இப்படியான ஒரு சூழலுக்குள் மாஃபியா (ஷோபாசக்தி) ஒருவருக்கு ஆதி என்றொரு இளைஞர் விசுவாசியாக இருக்கிறார். விசுவாசி என்றால் கேள்விக்கு அப்பாலானவர் என்றே அர்த்தமாகும். ஆகவே தன்னுடைய தலைவரைக் (மாஃபியாவை) குறித்து எந்தக் கேள்விகளையும் ஆதி எழுப்புவதில்லை. எல்லாக் கட்டளைகளையும் நிறைவேற்றும் ஒரு வீரன். விசுவாசத்தின் நெறியாளனாகவே இருக்கிறார்.

ஆனால், வாழ்க்கை எப்போதும் நேர்கோட்டில் நாம் நினைத்தது போலச் செல்வதில்லை அல்லவா? அது ஆதியைச் சோதனைக்கு உள்ளாக்குகிறது.


ஆதி தன்னுடைய தலைவனைச் சோதனைக்குள்ளாக்குகிறான். இதற்குள் நடக்கும் நிகழ்ச்சிகளும் பிரச்சினைகளுமே படம் நமக்குத் தரும் சேதியும் அனுபவமும். புலம்பெயர்ந்து செல்வோர் புதிய வாழ்க்கையில் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் பெரும் சவலானவை. அதிலும் பெண்கள் சந்திக்கின்ற நெருக்கடிகள் என்பது இதில் இன்னும் அழுத்தம் கூடியவை. அப்படித்தான் இதில் வரும் பெண்ணும் மிக வறிய குடும்பச் சூழலில், இலங்கையிலிருந்து பரிஸூக்குச் சென்றிருக்கிறார். (அவருடைய துயரம் தோய்ந்த முகம் மிக அழுத்தமானது) தன்னுடைய துயரத்தை ஒரு பாரச் சிலுவையைப் போலவே அவர் அங்கும் கொண்டு திரிகிறார். ஏதோ நிமித்தமாக அங்கே இந்த மாஃபியாவின் கைகளில் அவர் போய்ச் சேருகிறார்.

ஆனால், அவருக்கு இதெல்லாம் புரியவில்லை. தன்னுடைய சூழலை அவளால் சரியாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. அப்படி விளங்கிக்கொண்டாலும் உடனடியாக அதிலிருந்து அவளால் விடுபட்டு விட முடியாது. வாழ்க்கையின் பின்னல்கள் எப்போதும் அப்படியானவைதானே?



ஆனாலும் ஒரு கட்டத்தில் அவள் மிக அபாய நிலையைச் சந்திக்கிறாள். ஆனால், அந்த மாஃபியாக்களுக்கு இதொன்றும் புதியதல்ல. அவர்கள் தங்கள் வழமையைப்போல அதை எதிர்கொள்ள முற்படுகிறார்கள். இங்கேதான் பிரச்சினை நிகழ்கிறது. விசுவாசிகள் எப்போதும் எதற்கும் விசுவாசமாக இருப்பதில்லை. அவர்கள் மந்தையை விட்டு விலகும் ஆடுகளைப் போலாகும்போது சிக்கல்கள், பிரச்சினைகள் வேறு வடிவமாகின்றன. இங்கே ஆதி வேறு வடிவம் கொள்கிறான்.

ஏறக்குறைய அரை மணிநேரப் படம்தான். ஆனால் ஒரு முழு நீளப்படத்தைப் பார்த்த உணர்வே ஏற்படுகிறது. எழுத்தாளர் ஷோபாசக்தி உள்பட பத்துப் பேர் நடித்துள்ளனர். லோரன்ஸ் வலின்(LAWRENCE VALIN) என்பவர் படத்தை எழுதி இயக்கியுள்ளார். நேர்த்தியுடன் உருவாக்கப்பட்டிருக்கும் The Loyal Man (விசுவாசமான மனிதன்) நாம் கவனிக்கவும் புரிந்துகொள்ளவும் வேண்டிய ஒருலகத்தைத் திறந்து காண்பிக்கிறது. நமக்குள் ஒரு எச்சரிக்கை மணியையும் ஒலிக்கச் செய்கின்றது. ■



# நிவாஸ்:

## வெற்று நிலத்துக்கும் உயிர் கொடுத்தவன்

நிவாஸ், 1970 களின் நடுப்பகுதியில் பாரதிராஜாவின் '16 வயதினிலே' படத்தின் ஒளிப்பதிவு மூலம் தமிழ் சினிமா காட்சியியல் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை தொடக்கி வைத்தவர். அந்தப்படத்தின் மூலம் தன்னையும் தமிழ் சினிமாவின் காட்சி அழகியலையும் புதிதாகக் காண்பித்தார் நிவாஸ். இப்பொழுது இந்தக் குறிப்பை மதிப்போடு எழுதுவதற்கும் இவையே காரணம். இதனால் நிவாஸ், சினிமாவின் காட்சி மொழியில் – ஒளிப்பதிவில் கடந்த நாற்பது ஆண்டுகளாகப் பேசப்படுகின்றவராக இருக்கிறார். '35 எம்.எம்' இல் பெஸ்ட் கொம்போசிஷன். அந்தப் படம்தான் வெற்று நிலத்தை இப்படியும் அழகுற காண்பிக்க முடியும் என நிரூபித்துக் காட்டியது. காரை வீட்டுக்கும் கட்டாந்தரைக்கும், எண்ணெய் வழியும் தலைக்கும் வெற்று கறுப்பு உடம்புக்கும் கமெரா வழி உயிர்கொடுத்தார் நிவாஸ் என்கிறார் திரைக்கதையாளர் அஜயன் பாலா.

நிவாஸ், கேரளாவின் கோழிக்கோட்டில் உள்ள நடுக்காடு என்ற பேரூரில் பிறந்தவர். இயற்பெயர் சீனிவாசன். ஆனால், சினிமாவுக்காக நிவாஸ் என்று தன்னுடைய பெயரை மாற்றிக் கொண்டார். தொடக்கத்தில் சில மலையாளப்படங்களிலேயே வேலை செய்தார். ஆனாலும் 1976 இல் வெளியான "மோகினியாட்டம் என்ற மலையாளப்படம் நிவாஸ்க்குத் தேசிய விருதை சிறந்த ஒளிப்பதிவுக்காகப் பெற்றுக் கொடுத்தது. இதுவே பாரதிராஜாவுக்கு நிவாஸை அறிமுகமாக்கியது. அப்பொழுது நிவாஸ், சென்னை அடையாறு திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவுத் துறையில் படித்துத் தேறியிருந்தார்.

'16 வயதினிலேயே' யைத் தொடர்ந்து "கிழக்கே போகும் ரயில், "சிவப்பு ரோஜாக்கள் போன்ற பாரதிராஜாவின் ஏனைய படங்களுக்கும் நிவாஸே ஒளிப்பதிவாளராகச் செயற்பட்டார். இதில் சிவப்பு ரோஜாக்களின் ஒளிப்பதிவு இன்றும் பலருக்கும் வியப்பூட்டும் ஒன்று. அந்த அளவுக்கு அப்போதே ஹொலிவூட் படங்களுக்கு நிகராக அல்லது அவற்றுக்கு மறு கோணமாக ஒளிப்பதிவைச் செய்திருந்தார். தொடர்ந்து ஸ்ரீதரின் "இளமை ஊஞ்சலாடுகிறது, கே. விஸ்வநாத்தின் சலங்கை ஒலியின் தெலுங்கு வடிவமான "சாகர சங்கமம்" உள்ளிட்ட சில படங்களில் ஒளிப்பதிவைச் செய்த பிறகு, தானே சில படங்களை நெறியாளராகி இயக்கினார். அதில் முக்கியமானது, "கல்லுக்குள் ஈரம்" இடையில் மலையாளம், ஹிந்தி திரைப்படங்களிலும் நிவாஸ் ஒளிப்பதிவாளராக இயங்கியிருக்கிறார்.

தமிழ்ச்சினிமாவில் வின்ஸன்ட், அசோக்குமார், பாலு மகேந்திரா என்ற வரிசையில் முக்கியமான இன்னொருவர் நிவாஸ். நிவாஸையும் இழந்து நிற்கிறது தமிழ் – மலையாளச் சினிமா உலகம். நிவாஸ்க்கு அஞ்சலிகள்.



# தாய்மார்களே....

○ ம.பா.மகாலிங்கசிவம்

**எருசலேம் புத்திரிகாள் என்பொருட்டுக் கலுழாதே**
**துரிசறமற் றுஉம் பொருட்டும் சுதர் பொருட்டும் கலுழ்ந்திடுமின்**
**வரிசை பெறு மகப் பெறா மலடிகள் பாக்கிய ரென்னா**
**உரைசெறியத் தகுநாள் இங்கு உளதாம் என்பதை உணர்ந்தே**
**அன்று புகலிடம் அரிதாய் அவரவரே துயர்விஞ்சிக்**
**குன்றுகளே மலைக்குலமே எமை மூடிக் கொள்ளுதிரால்**

என்றுரைப்பர் என்பவை யேசுநாதர் கூற்றாக அமைந்த பாடற்பகுதிகளாகும். யேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு இழுத்துவரப்படும்போது, துன்பம் தாளாமல் கலங்கி அழுத எருசலேம் நகரப் பெண்களுக்குக் கூறப்படும் யேசுநாதரின் அறிவுரையாக இவை உள்ளன. எருசலேம் நகரப் புத்திரிகளே, நீங்கள் எனக்காக அழவேண்டாம். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். ஏனெனில் குழந்தை பெறாத பெண்களே பாக்கியவதிகள் என்று கூறப்படும் ஒரு காலம் வரும்.

அன்று தம்மைப் பாதுகாப்பதற்கான புகலிடம் கிடைக்காமல், குன்றுகளே மலைகளே எம்மை மூடிக் கொள்ளுங்கள் என்று கூறிக் கதறுவார்கள் என்பது இவற்றின் பொருள். பிற்காலத்தில் ஏரோது மன்னனால் நிகழப்போகும் துன்பங்களை முன்னரே சொன்ன யேசுநாதரின் தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தும் இப்பாடற்பகுதிகள், எச்.ஏ கிருஷ்ணபிள்ளையின் இரட்சணிய யாத்திரிகத்தில் இடம்பெற்றுள்ளன.

இதே கருத்தமைந்த சிங்களக் கவிஞர் ஹரிஷ் சந்திர ரொட்ரிகோ வின் “தாய்மார்களே” என்ற கவிதை இன்றைய தேன் கூட்டை அலங்கரிக்கின்றது. இக்கவிதையை 'இப்னு அஸூமத்' அழகுத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். மல்லிகைக் கவிதைகள் என்ற தொகுப்பில் இருந்து இக் கவிதை பெறப்படுகின்றது.



தாய்மார்களே!
உங்களது பிள்ளைகளை
மறைத்து வையுங்கள்
தூரத்தில் கேட்பது
வெடிச் சத்தங்கள்:
அண்மையில் தெரிவது
பகைமையின்
புகைக் குப்பைகள்;

தூரத்திலிருந்து
வரும் இந்தத் தென்றலும்
இளமை ரத்தத்தின்
உஷ்ணத்தைத்தான்
சுமந்து வருகிறது!

இங்கே ... இந்த
ஓசை நிரம்பிய யுகத்தினை
செவிடாக்கிவிட்டு

பெற்றோர்; சகோதரர்;
பிஞ்சுக் குழந்தைகள்
எழுப்புகின்ற பிரலாப கீதமே
ஓங்கி ஒலிக்கிறது.

அசுத்தமான
பலிபீடமான
யுத்தங்களில் பிரபஞ்சம்
தீப்பற்றும்!

தாய்மார்களே!
பிள்ளைகளை மறைத்து
வையுங்கள்;

பேய்கள் வரும் நாளைய நாள்;
இடது கையில் தர்மச்
சக்கரத்தைப் பிடித்தவாறு
கூர் முனைகள் நீண்ட
தந்தங்களைக் காலணியாக்கி
பேய்கள் வரும்;

உங்களின் மகன்களை
அசுத்தமான ரண பூமிக்கு
அழைத்துச் செல்ல
பேய்கள் வரும்; நாளை!

பகையில்
மனம் இறுகிக் கடிக்கப்பட்டு
யுத்த பூமியில் உம் பிள்ளைகள்
சாகும் நிலவுகளாவர்!
'அவர்களோ '
வெற்றி கோஷம் எழுப்புவர்
உமிழ் நீர் பூமியில்;
மதுக் கடைகளில்
உன் பிள்ளைகளின்
குருதியினை
நிரப்புவர் பீப்பாய்களில்:

இன்று ...... நாளை
இல்லாவிடினும் ஒரு நாள்
அதிகாலையில்
சத்தியச் சூரியன்
எழும்; அந்நாளில்
தாய்மார்களே!
இடி அழுகின்ற பிரலாபம்
ரண சப்தமாகக்
கேட்கக் கூடும்.

எண்பதுகளில் ஜே.வி.பியினருக்கு எதிரான போராட்டத்தின்போது படையினரால் ஜே.வி.பியினரும் அவர்களாக இருக்குமோ என்று சந்தேகம் கொள்ளப்பட்ட அப்பாவிகளும் வேட்டையாடப்பட்டுக் கொண்டிருந்தவேளையில் இந்தக் கவிதை வெளி வந்தது.

**“தாய்மார்களே**
**உங்களது பிள்ளைகளை**
**மறைத்து வையுங்கள்!**
**தூரத்தில் கேட்பது**
**வெடிச் சத்தங்கள்**
**அண்மையில் தெரிவது**
**பகைமையின்**
**புகைக் குப்பைகள்....”**

எனக் கவிதை தொடங்குகின்றது.

தாய்மாரை விளித்துப் பிள்ளைகளை ஒளித்து வைக்குமாறு கவிஞர் வேண்டுகோள் விடுக்கின்றார். தூரத் தில் அண்மையில் என்று எதிர்ச் சொற்களைப் பயன் படுத்தும் முரண் அணியின் ஊடாக வெடிச் சத்தங்க ளும் பகைமையின் புகைக் குப்பைகளும் பிள்ளை களைச் சூழ்ந்துள்ள நிலையைக் கூறித் தாயர்களை எச்சரிக்கின்றார் கவிஞர்.

யுத்தத்தை வெறுக்கும் கவிஞர்.
“அசுத்தமான
பலிபீடமான யுத்தங்களில் பிரபஞ்சம்
தீப்பற்றும்” என, முழு உலகுமே அதனால் பாதிக்கப்படும் நிலையைக் கவலையோடு சித்திரிக்கின்றார்.

“பேய்கள் வரும் நாளைய நாள்,
இடது கையில் தர்மச்
சக்கரத்தைப் பிடித்தவாறு
கூர் முனைகள் நீண்ட
தந்தங்களை காலணியாக்கி
பேய்கள் வரும்
உங்களின் மகன்களை
அசுத்தமான ரணபூமிக்கு
அழைத்துச் செல்ல
பேய்கள் வரும் நாளை!”

எனப் பிள்ளைகள் காணாமற்போன ஒரு காலகட்டத்தின் கொதிக்கின்ற யதார்த்த நிலையைக் கவிஞர் அழகியல் உணர்வோடு நுட்பமாகப் பதிவு செய்துள்ளார். இன்று பிள்ளைகள் காணாமல்போகின்ற நிலை பெருமளவில் இல்லை என்றே கூறலாம். அப்படியானால் ஹரிஷ் சந்திர ரொட்ரிக்கோ இன்று கவிதை எழுதுவதாக இருந்தால் எதை மறைக்கச் சொல்லியிருப்பார்? எவ்வாறு கவிதையைத் தொடங்கி இருப்பார்? என்ற சிந்தனைகள் எழுகின்றன. இன்றைய சூழலில் இவ்வாறு கவிதையைத் தொடங்கியிருப்பாரோ?

“தமிழர்களே உங்கள் ஆலயங்களை
மறைத்து வையுங்கள்!
அண்மையில் கேட்பது
அரசம் இலைகளின்
சலசலப்பு; தூரத்தில் தொடங்குது
தொல்பொருள் திணைக்களத்தின்
கழுத்தறுப்பு!



# மணிக் கதை

## மனோபாவம்

○ மௌனா

கோவில் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. உள்வீதி, வெளிவீதி என எங்கும் பக்தர் கூட்டம் உற்சாக வெள்ளத்தில் திளைத்திருந்தது.

வெளிவீதியில் கண்காட்சி சூழலில் அமைந்திருந்த கடை வீதிகளில் வியாபாரம் களைகட்டியது. ஆங்காங்கே ஒலிபெருக்கிகளில் இருந்து பெருகும் இசையொலி பக்திச் சூழலை ரம்மியமாக்கியது. இன்று கடைசித் திருவிழா; மணவாளக் கோலம். உற்சவமூர்த்தி அலங்கார பூஜிதராக வசந்த மண்டபத்தில் கொலுவீற்றிருந்தார்.

வசந்த மண்டபப் பூஜை முடிய, அவர் முத்துச் சப்பரத்தில் வீதியுலா வர எழுந்திருளுவார்.

இன்னும் சிலமணித்துளிகளில் மகோற்சவ பூஜை ஆரம்பமாக இருந்தது. பூசகர் அதற்கான ஏற்பாடுகளில் மும்முரமானார்.

கோவில் மூலஸ்தானத்தில் நித்திய தவத்தில் இருக்கும் மூலவர் இவையனைத்தையும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தபடி பெருமூச்செறிந்தார்....

"சே...! என்ன வாழ்வு ...!! உற்சவரைப் போல் ஊர் சுற்றி வரும் உல்லாசம் நமக்கில்லையே... எப்போதும் ஒரே இடத்தில் வெறும் கல்லாட்டம் இருக்க வைத்து என் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் விட்டுவிட்டார்களே...!"


பெருமூச்சு மட்டுமே மிச்சம்.

திருவிழா தெருவுலாவுடன் முடிய, உற்சவர் கடந்த இருபத்தைந்து நாள்கள் நடந்த விழாப் பூரிப்பில் இருந்து விடுபட்டவராக சிறிது சலிப்புடன் முணுமுணுத்தார்.

“என்ன.. வாழ்வு இது..? வெறும் அலங்காரமும் ... ஆடம்பரமும் மட்டுமே...! ஊர்வலமாக அலைந்து பக்தியையும் உபசரிப்பையும் யாசிக்கவேண்டியிருக்கிறதே? மூலவரைப் பார். இருந்த இடத்தில் இருந்தே அபிஷேகம், ஆராதனை என ராஜோபசாரம்...... கொடுத்து வைத்த வாழ்வு....!"

இங்கேயும் நெடுமூச்சு நீண்டது. இருவரது பெருமூச்சையும் உள்வாங்கிக் கொண்ட காற்று தனக்குள் நினைத்துக் கொண்டது...

“விருப்பும் வெறுப்பும் இறைவனுக்கும் உண்டு!"



# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை

21

1990 - 1995







தில்லைநாதன் கோபிநாத்

தேர்ந்த கட்டுரைகள் நூல்வரிசை போல பல்வேறுபட்ட ஆக்கங்களைத் தாங்கி 1990 களில் வெளியான சஞ்சிகை உலக உலா ஆகும். சமூக, அரசியல், விஞ்ஞான தொழில் நுட்ப மாத இதழ் எனக் குறிப்பிடப்பட்டு முதலாவது உலக உலா இதழ் 1993 ஆகஸ்ற் மாதம் ஒரு மாத இதழாக வெளியாகத் தொடங்கியது.

கல்வியும் மொழியும் பண்பாடும் நிலமும் எம் இன அமைப்பினைத் தாங்கி நிற்கும் தூண்கள்; அவற்றை அழிக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கிறது எனக் குறிப்பிட்டு இராணுவ நடவடிக்கைகள், பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை போன்றவற்றால் கல்வித்துறை சீரழிந்து அறிவியல் வறுமைநிலை ஏற்பட்டுள்ள நிலையில் கல்வி, அறிவியற் துறைகளில் ஆர்வங் கொண்டோருக்கு உதவுவதற்காக உலக உலா தொடங்கப்படுவதாக முதலாவது இதழின் ஆசிரியத் தலையங்கத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

உலக உலா அதன் பெயர் குறிப்பிடுவது போல உலகின் பல்வேறு பகுதிகளின் நிலவரங்கள் தொடர்பாகவும், உலகில் ஏற்படும் அறிவியல், தொழில் நுட்ப மாற்றங்கள் பற்றியதாகவும் மட்டுமே அமைந்தது. புலிகளின் தமிழீழக் கட்டமைப்புச் சார்ந்து வெளியான ஏனைய அனைத்து வெளியீடுகளிலும் அவர்களது பிரச்சாரமும் இராணுவ வெற்றிகள் தொடர்பான செய்திகளும் ஊடும்பாவுமாகக் கலந்திருக்கும். ஆனால் உலக உலாவின் உள்ளடக்கமானது முழுக்க முழுக்க அதன் நோக்கம் சார்ந்ததாகவே இருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக உலாவின் உள்ளடக்கம் முழுவதும் மொழிபெயர்ப்புக்களாகவே இருந்தன. பல்வேறு அனைத்துலகச் சஞ்சிகைகளிலிருந்து கட்டுரைகள் மொழிபெயர்க்கப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டன. நியூஸ்வீக், ஏசியாவீக், ரைம், த எக்கனமிஸ்ற், லைவ், பார் ஈஸ்ரேர்ன் எக்கனிமிக் ரிவியூ போன்ற பல்வேறு ஆங்கிலச் சஞ்சிகைகளிலிருந்து கட்டுரைகள் பெறப்பட்டன.

உலக உலாவின் உள்ளடக்கக் கட்டமைப்பும் 'த எக்கனமிஸ்ற்' போன்ற சர்வதேசச் சஞ்சிகைகளின் அமைப்பைத் தழுவியதாக அமைந்தது. உலக விவகாரங்கள் என்ற பிரதான பகுதி ஆசியா, ஐரோப்பா, அமெரிக்க, ஆபிரிக்கா என்ற பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கண்டத்தின் நிலைமைகளையும் அலசும் கட்டுரைகள் பிரசுரமாகின. இவற்றில் குறிப்பாக நாடுகளின் நெருக்கடி நிலைமைகள், இன விடுதலைப் போராட்டங்கள் போன்றவை தொடர்பான கட்டுரைகள் குறிப்பாகத் தெரிவாகின.

உலகச் செய்திகளை அலசும் கட்டுரைகளைத் தொடர்ந்து வாணிகம், விண்வெளி, உளவியல், உயிரின் வரலாறு, விளையாட்டு, விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், முகாமைத்துவம், சமூகவியல், குற்றவியல், மருத்துவம், மதம், மனிதவியல் வரலாறு, அறிவியல் ஆய்வு, விண்வெளி போன்ற பல்வேறு தலைப்புக்களில் ஓரிரு கட்டுரைகள் ஒவ்வொரு இதழிலும் இடம்பெற்றன.

இவை தவிர செய்திச்சரம் எனும் பகுதியில் பல்வேறு நாடுகள் சார்ந்த சுருக்கமான செய்திகள் தொகுக்கப்பட்டன. புதியன அறிமுகம் என்ற பகுதியில் பல்வேறு அறிவியற் கண்டுபிடிப்புக்கள், புதிய கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பார்வைகள் எனும் பகுதியில் பல்வேறு சர்வதேச ஆளுமைகள் தெரிவித்த கருத்துக்கள் தொகுக்கப்பட் டன.

இராசன் அச்சகத்தில் தயாரான உலக உலாவின் அட்டைப்படங்கள் பல்வேறுநிறங்களைக் கொண்ட சிறந்த வடிவமைப்பில் உருவாக்கப்பட்டன. ஏ-4 அளவில் உட்பக்கங்களிலும் ஓரளவு நிறப்பயன்பாட்டுடன் ஏறத்தாழ 100 பக்கங்கள் கொண்ட கனதியான இதழாக உலக உலா மாதந்தோறும் வெளியானது. பல்வேறு கோட்டுப் படங்கள், பெருமளவில் புகைப்படங்களும் இணைக்கப்பட்டிருந்தன.

வெளியுலகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தில் உலக உலாவின் அறிவியற் பங்களிப்பு மிக முக்கியமானதாக அமைந்தது. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும் என்ற பாரதியின் கனவினை நனவாக்கும் வகையில் அமைந்த இதழாக உலக உலா வெளியானது என்றால் அது மிகையாகாது. உலக உலா போன்ற தரமான, ஆழமான, விரிவான மொழிபெயர்ப்பு இதழ் ஈழத்தில் வெறெதும் எக்காலத்திலும் வெளியானதில்லை.

முன்னுமில்லை; பின்னுமில்லை; அது ஒரு மகத்தான சாதனை!

(தொடரும்)



# புதிர்மலை

புதிர் 29



# மர்மங்கள்

மாயன்

எவ்வளவோ யோசித்தும் அவனால் சரியான விடையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. உயிர் போகுமளவுக்கு தாகமும் அவனை வாட்ட, சரிவர அவன் கருத்தூன்றி அந்தப் புதிருக்கான விடை தேடும் மனோநிலையில் இல்லை. என்றாலும் தவறாக விடை சொன்னால் இராட்சதனாக மாறிவிடக்கூடுமோ என்ற அச்சத்தோடு இயன்றவரை விடையைத் தேடிக் கொண்டுமிருந்தான்.

"மூன்று பணமுடிச்சுகளோடும் அவனையும் சேர்த்தால் 105 தூக்கு வரும். ஆனால் எல்லாவற்றையும் கொண்டும் போகவேண்டும், அவனும் செல்லவேண்டும். அதுவும் ஒரே படகில்., ஒரேதடவையில்."

யோசித்தவனுக்கு சட்டென ஒரு பதில் கிடைத்தது.

"விடையைக் கண்டுபிடித்து விட்டேன்" என்று அவன் கூவினான். அப்போது மர்மக் குரல் மீண்டும் ஒலித்தது.

"சரி அப்படியானால் சொல்"

தீபவர்மனும் சொல்லத் தொடங்கினான்.

" ஒரு பணமுடிச்சில் இருக்கும் காசுகளை கொட்டி, அதை 5 தூக்கு கொண்டதாக மாற்றிவிட்டு படகில் ஏறி மூன்று பணமுடிச்சுகளோடும் சென்றிருப்பான்" என்றான் தீபவர்மன். கொஞ்சநேரம் அமைதி. பின்னர் அந்தக் குரல் மீண்டும் ஒலித்தது.

" மன்னிக்கவும் தீபவர்மா, விடை தவறு. நீ இராட்சதனாக மாறப் போகின்றாய்"

ஒருகணம் தீபவர்மனுக்கு உலகமே சுற்றுவதைப் போலிருந்தது. வேரற்ற மரம் போல் அப்படியே சாய்ந்தான். அவன் மீண்டும் கண் விழித்தபோது, உடலை அசைக்கமுடியவில்லை. ஏதோ தன் மீது பெரும் மலை விழுந்திருப்பதை போல உணர்ந்தான். கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு , அவன் எழுந்து தன்னைத்தானே பார்த்துக் கொண்டான். பார்த்தவன் பதறினான். அவன் முன்னரைவிடவும் நூறுமடங்கு பெரிய உருவம் கொண்டவனாக மாறியிருந்தான். கடைவாயில் பற்கள் நீண்டிருந்தன. தலைமுடியும் பெரியதாக அசைந்தாடியது. பயங்கரமான பசி எடுத்தது. அதுவும் நரமாமிசம் சாப்பிட வேண்டும் போல விநோத ஆசை எழுந்தது. ஒருமுனையில் தன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மனைவியினதும், நாட்டு மக்களினதும் நினைப்பு வந்து, அதேவேகத்திலேயே காணாமல் போனது. தான் யாரென்பதையே அவன் மறக்கத் தொடங்கியபோது , அந்த மர்மக் குரல் மீண்டும் ஒலித்தது.

" தீபவர்மா, இனி உன் பெயர் சவேந்திராசுரன். உன்னை எவராவது தமது கண்களால் பார்த்தால் அடுத்தநொடியே உறைந்து போய்விடுவார்கள். அவர்களே உன் உணவு. இதுவே உன் வாழ்வு"

சொல்லிவிட்டு கடகடவென அந்தக் குரல் சிரித்தது. தீபவர்மனுக்கு அதைவிட செத்துவிடலாம் போல தோன்றியது.

" வேண்டாம் இந்த நரக வாழ்வு. நானே என் உயிரை மாய்ப்பேன்" என்று ஆவேசத்தோடு சொன்னான்.

" இங்கே உன்னால் உயிர்மாய்க்க முடியாது. அப்படி நினைத்தால் மறுகணமே இன்னும் கொடூரமானவனாக நீ மாறுவாய்."

அந்தக்குரல் சொல்லச் சொல்ல தீபவர்மனுக்கு ..இல்லையில்லை,...சவேந்திராசுரனுக்கு உடல் நடுங்கத் தொடங்கியது.

" இந்த நரகத்திலிருந்து எனக்கு மீட்சியேயில்லையா?"என்று அவன் கதறத் தொடங்கினான்.

அவன் எதிர்பாராத இடத்தில் இருந்து அவன் மீட்சிக்கான வழி எதுவெனப் புலப்பட்டது.


( புதிர்கள் தொடரும்)

# நலம் அறிய...



மருத்துவர்
ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா
மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)




# மணிக்கட்டுகுகை நோய்

## (கார்ப்பல் டனல் நோய்க்குறி)

## Carpal Tunnel Syndrome

**எனக்கு 52 வயது. 23 வருடங்களாக ஆசிரியர் தொழில் செய்கிறேன். எனக்கு வலது கை கட்டை விரல் ஆள்காட்டிவிரல் மற்றும் நடுவிரலில் உணர் வின்மை காணப்படுகிறது. சிலநேரங்களில் கூச்ச உணர்வு ஏற்படுகின்றது. தேங்காய்ப்பூ பிழிவது போன்ற வேலைகளை செய்ய முடியாமலுள்ளது.**
**இது மூட்டுவாத நோயா ?**
**இல்லாவிடின் வேறு ஏதும் பிரச்சினையா ?**
**இது எனது தொழிலால் (வலதுகையினால் கரும்ப லகையில் அடிக்கடி வருடக்கணக்காக எழுதுவதால்) வரும் பாதிப்பா? தீர்வுதான் என்ன?**
**இந்துமதி , கோண்டாவில்.**

கார்ப்பல் ரனல்/ மணிக்கட்டுகுகை நோய் என்பது கையில் காணப்படும் மிக முக்கியமான நரம்புகளில் ஒன்றான மீடியன் நரம்பு- (Median Nerve) மணிக்கட்டுப்பகுதியில் அழுத்தப்படுவதால் ஏற்படும் நிலையாகும். நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 3சதவீதமானோர் மணிக்கட்டுகுகை நோய் தாக்கத்துக்கு உள்ளாகுகின்றனர்.
ஒப்பீட்டளவில் ஆண்களை விட பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் .
பெரும்பாலும் 30-60 வயதுள்ளவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்று ஆய்வறிக்கைகள் கூறுகின்றன.
அறிகுறிகள் பரந்துபட்டவை.
பெரும்பாலும்

1. **கை/ மணிக்கட்டு/ முன்கை வலி**
2. **கட்டைவிரல்/ ஆள்காட்டி விரல்/ நடுவிரல் ஆகியவற்றில் கூச்ச உணர்வு அல்லது உணர்வின்மை.**
3. **தேங்காய் பிழிவது (SQUEEZING), உடுப்புகள் தோய்ப்பது, நீண்ட நேரம் துவிச்சக்கர வண்டி கைப்பிடியை பிடித்துச் செலுத்துதல் போன்ற வேலைகளை செய்ய இயலாமல் இருப்பது.**
4. **கடுமையான நோய்த்தாக்கம் இருப்பின் கட்டைவிரல் தசைகளிலும் பலவீனம் ஏற்படலாம்.**
5. **கைகள் வலுவிழத்தல்.**

**இந்நிலை உண்டாவதற்கான காரணங்கள்** (Risk factors)
1. **காரணமின்மை** (Idiopathic)85%
2. **கர்ப்பம் தரித்தல்**
3. **உடற்பருமன்** (obesity)
4. **தைராயிற் சுரப்பியின் பற்றாக்குறை**
5. **சலரோகம்**
6. **முடக்குவாதம்**
7. **உயர்குருதியமுக்கம்** (high blood pressure)
8. **மாதவிடாய் நிறுத்தம்** (menopause)
9. **நீண்டகாலத்துக்கு இடைவிடாது கைகளை உபயோகிக்கும்படியான தொழில்கள் : உதாரணம் பியானோ பாவனை, கீபோர்ட் பாவனை**
10. **மணிக்கட்டில் காயங்கள் /தாக்கங்கள்** (trauma to the wrist)


வைத்தியர் உங்களை பரிசோதித்து (Nerve conduction test) நரம்பு கணத்தாக்கு கடத்தல் சோதனை மூலம் நோயை உறுதிப்படுத்துவார்.

**சிகிச்சை முறைகள் :**
1.லேசான , மிதமான அறிகுறிகள் இருப்பின், அறுவைச் சிகிச்சையல்லாத, சிகிச்சைக்கான உடற்பயிற்சி, மூட்டசைவு சிகிச்சை அளிக்கப்படுகிறது.
2. wrist Splint மூலம் மணிக்கட்டை நகர்த்த முடியாதவாறு பாதுகாத்தல் - (immobilisation) சிலருக்கு இது பயனளித்தாலும் தொடர்ந்து செய்வதில் நடைமுறைச் சிக்கல் ஏற்படும்.

இந்நோய்க்குரிய நிரந்தரச் சிகிச்சை அறுவைச் சிகிச்சையேயாகும்: Carpal tunnel decompression.

இது சொற்பநேரத்தில் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை. பொதுமயக்க மருந்தளிக்காது பாதிப்படைந்த கையை விறைக்கச் செய்து, மணிக்கட்டு திறக்கப்பட்டு அழுத்தப்பட்டிருக்கும் நரம்பு விடுவிக்கப்படும்.
நோயாளி 24 மணித்தியாலத்தின்பின் வழமைக்குத் திரும்பலாம்.

இனி உங்கள் கேள்விக்கு வருவோம். உங்களது தொழில் காரணமாக நீண்டகாலத்துக்கு வலது கையை இடைவிடாது பிரயோகித்தமை, இந்த நோய் ஏற்படக் காரணமாக அமைந்திருக்கும் என்பது உண்மை. எனினும் கார்ப்பல் டனல் சத்திரசிகிச்சை ஒரு சிறிய அளவிலான சத்திரசிகிச்சை (minor surgery).
இதனைச் செய்து உடனடியாக உங்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொள்ள முடியும். எனவே தாமதிக்காது மருத்துவரை நாடுங்கள். மூட்டு வாதத்துக்கும் உங்கள் நோய்க்கும் எந்தவிதச் சம்பந்தமுமில்லை.
நாட்டின் மொத்தச் சனத்தொகையில் சுமார் 3 சதவீதமானோர் இந்நோயினால் பாதிக்கப்படுகின்றனர். ஒப்பீட்டளவில் பெண்களே ஆண்களைவிட அதிகம் பாதிக் கப்படுகின்றனர்.



# திருவள்ளுவரின் தேநீர்க்கடை





இ.சு.முரளிதரன்

“வியாக்ரன்” என்ற கிரகத்துக்குச் சென்ற தகுநயன் மூன்று வருடங்களுக்குப் பின்னர் பூமியை வந்தடைந்தான். அப்போது அவன் மனைவி மீநயா 21 வருடங்களைக் கடந்திருந்தாள். வியாக்ரன் கிரகத்தில் ஒரு நாள் என்பது பூமியில் 7 நாள்களுக்குச் சமமானதாகும். வியாக்ரன் கருத்துளைக்கு (Black Hole) அருகே அமைந்துள்ளதால், பூமியின் நேரநகர்விலிருந்து வியாக்ரனின் நேர நகர்வானது மாறுபட்டதாகும். பாரிய திணிவுள்ள நட்சத்திரம் சுருங்குவதனூடாகக் கருந்துளை உருவாகின்றது. கருந்துளைக்கு அருகில் செல்லும்போது நேர ஓட்டம் மெதுவாகக் காணப்படும். அதாவது அங்கேயுள்ள நேர ஓட்டமானது பூமியின் நேர ஓட்டத்தை விடக் குறைவாக அமைகின்றது. இதனால் தகுநயன், வியாக்ரனில் ஒரு நாளைக் கடக்கும் போது, மீநயா பூமியிலே 7 நாளைக் கடந்து விடுகிறாள். திருவள்ளுவரின் 1269 ஆவது குறட்பாவான,

**“ஒருநாள் எழுநாள் போல் செல்லும்சேண் சென்றார்**
**வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு”**

என்ற செய்தியானது தனது வாழ்விலே மெய்யாகிப் போனமை மீநயாவுக்கு அதிர்ச்சியாகவே அமைந்தது. கணவர் நீண்ட தூரம் சென்ற தருணத்தில் ஏக்கத்தோடு காத்திருக்கும் மனைவியானவள் கணவன் ஒருநாளைக்கடக்கும்போது ஏழு நாளைக் கடப்பதாகத் திருவள்ளுவர் அற்புதமாகப் பதிவு செய்து விட்டார் என்ற வியப்பை விடத் தன்னிலும் இளமையோடு வந்துள்ள கணவரைக் கண்டே அவள் அதிர்ச்சியுற்றாள்.



# நாங்கள் சுடேலை




### மருந்து கட்டப்போகவில்லை

இராணுவத்தினர் கண்மூடித்தனமாக துப்பாக்கி வேட்டுக்களை தீர்ப்பார்கள் என மரம் வெட்டச் சென்ற மூவரும் கனவிலும் நினைத்திருக்கவில்லை. அவ்வளவு ஏன், படையினர் காட்டுக்குள் வந்து இப்படி பதுங்கி இருப்பார்கள் என்று கூட அவர்கள் ஊகித்திருக்க முடியாது. அதனால் படையினரைக் கண்டு முதலில் ஓடத் தொடங்கியவர்கள், பின்னர் துப்பாக்கிச் சன்னங்களும் துரத்தவே நிலைகுலைந்து போனார்கள். ஆளுக்கொரு பக்கமாக ஓடினார்கள். அவர்களில் ஒருவர் படுகாயமைடைந்து வீழ்ந்துவிட அவரையே படையினர் பிடித்துச் சென்று மருத்துவமனையில் சேர்த்தார்கள், மற்றைய இருவரும் வேறு வேறு பாதைகளால் தங்கள் வீட்டுக்குச் சென்ற பின்னரே தமக்கும் சிறு சிறு காயங்கள் ஏற்பட்டிருப்பதைக் கண்டு கொண்டார்கள். அவர்கள் கொண்டு சென்ற டோர்ச் லைட்டிலும் துப்பாக்கிச் சன்னம் பட்டு சிதறல் ஏற்பட்டிருந்தது. காயம் உயிரே போவது போல வலி தந்த போதும், தப்பிய இருவரும் எந்தவொரு மருத்துவமனைக்கும் போக விரும்பவில்லை. போனால் பொலிஸோ, இராணுவத்தினரோ பிடித்துவிடுவார்கள் என்ற பயத்தில், கைமருந்தையே போட்டுவிட்டு வீட்டிலேயே இருந்துவிட்டார்கள்.

### விசாரணை

தம்மிடம் காயத்தோடு பிடிபட்டவரிடம் துருவித் துருவி படையினர் விசாரணை செய்த பின்னரே அவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள். என்றாலும் அவர் மீது படையினருக்கு சந்தேகம். அதனால் காயமடைந்தவரின் உறவினர் ஒருவரின் வீட்டுக்கு, அன்றிரவு 9 மணியளவில் பொலிஸார் சென்றனர். குறித்த நபர் காயமடைந்த தகவலைச் சொல்லிவிட்டு, வீட்டில் இருந்த உறவினரையும் விசார ணைக்காக பொலிஸ்நிலையத்துக்கு அழைத்துச்சென்றனர்.

" அவன் என்ர சொந்தக்காரப் பெடியன்தான் பொலிஸ்காரங்கள் வந்து சொன்னப்ப தான் தெரிஞ்சுது, இப்பிடி பிரச்சனையெண்டு.ஸ்ரேசனுக்கு நான் போகேக்க ஆமியும், அங்க நிண்டவங்கள். விடியப்பிறம் 1 மணிமட்டும் என்னைவச்சு விசாரிச்சிட்டு வீட்டை போகச் சொல்லிட்டாங்கள். காட்டுக்கு போன மூண்டு பேரும் துவக்கெல்லாம் வைச்சிருக்கிற ஆக்களில்லை" என்று சொல்கிறார் காயமடைந்தவரின் உறவினர்.

குறித்த சம்பவம் பெப்ரவரி முதலாம் திகதி மாலை இடம்பெற்றபோது, படையினரிடம் பிடிபடாமல் தப்பிசென்றிருந்த ஏனைய இருவரையும் மறுநாள் காலையே பொலிஸார் கண்டுபிடித்து , அவர்களது வீடுகளுக்குச் சென்றனர். அவர்களிடம் உரிய விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டபோதும், அவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

" நாங்கள் மரம் வெட்டத்தான் போனம், துவக்கெல்லாம் எங்களிட்ட இல்லை, நாங்கள் சுடவும் இல்லை. ஆமிதான் சுட்டது. நாங்கள் ஓடிவந்திட்டம்" என்பது மட்டுமே அவர்களது வாக்குமூலம். எனவே பொலிஸாரால் எதுவும் செய்யமுடியவில்லை.

அதன் பின்னர் பொலிஸ்குழு ஒன்று சம்பவம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்றது.பொதுவாக வன்னிப்பகுதியில் ஆற்றுப்படுக்கைகளுக்கு செல்வதற்கு பயன்படுத்தும் காட்டுப்பாதைகள் மிகவும் கரடுமுரடானவை. ஒடுக்கமான அந்தபாதைகளூடாக உழவியந்திரம் ஒன்றில் குறித்த பொலிஸ்குழு சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு சென்றது.அங்கு மறைத்துவைக்கப்பட்டிருந்த சில முதிரைமரக்குற்றிகள் மற்றும் சைக்கிள்கள், மரம் வெட்டும் கருவி என்பவற்றை அந்தப் பொலிஸ் குழு கைப்பற்றியது. ஆனால் அங்கு துப்பாக்கியோ வேறு ஆயுதங்களோ கண்டுபிடிக்கப்படவேயில்லை.

கைப்பற்றப்பட்ட பொருள்களை காட்டுக்குள் இருந்து வெளியே கொண்டுவருவதில் சிக்கல். மரங்களை ஏற்றிக் கொண்டுவந்த உழவியந்திரம் சேற்றில் புதைந்துவிட்டது. எவ்வளவோ முயன்றும் அது நகரவேயில்லை. அதனால் அப்படியே மரக்குற்றிகளை விட்டுச் சென்ற பொலிஸார், மறுநாள் பொதுமக்களின் உதவியுடம் மேலும் 5 உழவியந்திரங்களோடு சென்றே புதைந்த உழவியந்திரத்தையும், அதிலிருந்த முதிரை மரக்குற்றிகளையும் , சைக்கிள்களையும் மீட்டுவர முடிந்தது.

### சட்டவிரோத மரக்கடத்தல்

சம்பவத்தோடு தொடர்புட்ட மூன்று பேரும் பலவருடங்களாக சட்டவிரோதமரக்கடத்தல் நடவடிக்கைளில் ஈடுபட்டுவருகின்றனர் என்று ஊரவர்கள் தெரிவிக்கின்றனர்.

செட்டிகுளம் பகுதியானது பெருங்காடுகளை உள்ளடக்கியிருக்கின்றமையால் அங்கு முதிரை, பாலை போன்ற பெறுமதியான மரங்கள் அதிகமாகவே உள்ளன. எனவே அவற்றை இயந்தி ரங்கள் மூலம் அறுத்து சைக்கிளில் வைத்து தள்ளியபடி வீதிக்கு கொண்டுவந்து வைத்துவிடுவார்கள். பின்னர் பொலிஸ் நடமாட்டம் இல்லாத நேரத்தில் உழவியந்திரங்கள் மூலம் அவற்றை ஏற்றிச் சென்று நல்ல விலைக்கு விற்றுவிடுவார்கள்.

சட்டவிரோதமரக்கடத்தல் தொடர்பாக அவர்கள் மீது பல்வேறு வழக்குகள் செட்டிகுளம் பொலிஸாரால் ஏற்கனவே தாக்கல்செய்யப்பட்டுள்ளன. அவற்றில் சில வழக்குகள் நிலுவையில் உள்ளன. மரக்கடத்தலில் ஈடுபட்டாலும், அவர்கள் ஆயுதங்கள் வைத்திருக்கவோ, இராணுவத்தினரைச் சுடவோ வாய்ப்பேயில்லை என்றும் ஊரவர்கள் அடித்துச் சொல்கிறார்கள். ".பெடியள் கொஞ்சம் குழப்படி தான். ஆனால் இந்தவேலையைச் செய்திருக்கமாட்டாங்கள்"என்கிறார்கள் அவ்வூரைச் சேர்ந்தவர்கள்.

### சொல்லிவிட்டே செல்லும் இராணுவம்

செட்டிகுளம் பிரதேசத்தில் பல இராணுவ முகாம்கள் உள்ளன. பெருங்காடுகள் இருப்பதனால் இராணுவப்பயிற்சியும் அங்கு இடம் பெற்றுவந்துள்ளது. அப்படி பயிற்சிக்கு செல்லும் போது,இராணுவத்தினர் அதுகுறித்து பொதுமக்களுக்கு ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்துவிட்டு செல்வதே வழமை. ஏனெனில் செட்டிகுளம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்கள் பூர்விக மாக விவசாயச் செய் கையை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களது வாழ்க்கை முறை இயற்கையோடும் காடுகளோடும் இயைந்தது. குறிப்பாக தேன் எடுக்கசெல்லுதல்,மிருகங்களை வேட்டையாடுதல் போன்றவை மணல் மற்றும் மரத்தேவைகளுக்காக தினமும் அவர்கள் காட்டுக்குள் சென்றுவருவார்கள். அப்படிச் செல்பவர்கள் இராணுவப் பயிற்சியின் போது மேற்கொள்ளப்படும் ஆயுதப்பிரயோகத்தில் சிக்கிவிடக்கூடாது என்பதற்காகவே , பயிற்சி பற்றி பகிரங்க முன்னறிவிப்பை படையினர் செய்வார்கள். ஆனால் சம்பவம் இடம்பெற்ற தினத்தில் அப்படி எந்தவித முன்னறிவிப்பும் வழங்கப்படவேயில்லை.

### தொல்பொருள் நிறைந்த காடு

செட்டிகுளத்துக்குட்பட்ட முசல்குத்தி மற்றும் பேராறு,கொங்கராயன் குளம் போன்ற காட்டுப்பகுதிகள் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்தவை. ,அனுராதபுரத்தின் எல்லைப்பகுதிகளாக இருக்கும் அந்தக் காட்டுப் பகுதிகளில் புதையல்களும், தொல் பொருள்சின்னங்களும் அதிகம் இருப்பதாக பொதுமக்கள் இப்போதும் நம்புகின்றனர். அவற்றை எடுப்பதற்கு பலர் முயற்சியும் செய்கின்றனர். 1990 காலப் பகுதியில் முசல்குத்தி காட்டில் புளொட் அமைப்பின் பெரும் முகாம் ஒன்றும் செயற்பட்டுவந்தது. அதற்குப் பிந்தியகாலப்பகுதியில் விடுதலைப்புலிகளும் தமது போர்நடவடிக்கைகளுக்காக அந்தப்பகுதியைப் பயன்படுத்தியிருந்தனர்.அதற்கு அருகாமையில் உள்ள அனுராதபுரம் மாவட்டத்துக்குட்பட்ட தந்திரிமலையும் அதனை அண்டியே அமைந்திருக்கிறது. அங்கு குகைள், கற்களால் செதுக்கப்பட்டசிற்பங்கள்,பழங்காலக் கல்வெட்டுகள், விகாரைகள் போன்ற தொல்பொருள் படிமங்கள் ஏராளம் உண்டு. அங்குள்ள குகைகள் மூன்றாம் நூற்றாண்டுக்குரியவை யென்றும் சொல்லப்படுகின்றது. தந்திரிமலையில் 40 அடி நீளமான சயனநிலையில் உள்ள புத்தர் சிலை ஒரேகல்லில் செதுக்கபட்டுள்ளது.அத்துடன் இலங்கையின் மிகவும் ப்ழமை வாய்ந்த ஓவியங்களும் அங்கு இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. குறித்த காட்டுப்பகுதியில் ஆங்காங்கே புதையல் அகழ்ந்துள்ளமைக்கான அடையாளங்களும் காணப்படுகின்றன. முசல்குத்தி வீதி வழியாக பௌத்தபிக்குமார்களின் நடமாட்டத்தை சிலவேளைகளில் தாம் அவதானிப்பதாக அந்தப்பகுதிகளில்வசிக்கும் மக்களும்,காட்டுக்குள் வேட்டைக்குச் செல்பவர்களும் சொல் கிறார்கள்.

### சூடுவது தான் தீர்வா?

வன்னிக்காட்டுப்பகுதிகளில் சட்டவிரோதமான செயற்பாடுகளான ,மரக்கடத்தல் , மணல் அகழ்வு தொடர்கதை தான். அன்றாடத் தேவைகளுக்காக பொதுமக்கள் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டாலும்கூட, அநேகமாக இப்போது வியாபாரநோக்கில் பெருமெடுப்பில் காட்டு வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. அதனைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை பாதுகாப்புத் தரப்புக்கு இருக்கிறது. அதனை மறுப்பதற்கில்லை. எனினும் உயிரைப் பலி எடுத்துத்தான் அதனை நடைமுறைப் படுத்த வேண்டும் என்ற தேவை நிச்சயம் இல்லை. ஏற்கனவே கட்டமைக்கப்பட்டுள்ள சட்டங்களை நீதியான முறையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவற்றை கட்டுப்படுத்தமுடியும்.எனவே ஆயுதங்களை பயன்படுத்துவதற்கு முன்பாக இவ்விடயத்தில் பாதுகாப்புத் தரப்பு பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டியதேவை இருக்கிறது. அத்துடன் நடைபெற்ற சம்பவம் குறித்த, உண்மையும் வெளிக் கொண்டு வரப்படவேண்டும்.

### சந்தேகம்-1

சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற பின்னர், "எங்கள் மீது சுட்டார்கள், நாங்கள் திருப்பிச் சுட்டோம் என்று பொலிஸாரிடம் இராணுவத்தினர் முறைப்பாட்டு செய்தனர். ஆனால் எந்தவொரு சிப்பாய்க்கும் உரசல் காயம் கூட இல்லை. சம்பவ இடத்திலும் இரு தரப்பினர் மோதிக்கொண்ட தடயங்கள் இல்லை. ஆயுதங்களும் மீட்கப்படவில்லை, மரத்தை அறுக்கப் பயன்படும் கருவிகள் மட்டுமே இருந்தன. அப்படியானால், தவறுதலாக சுட்டுவிட்டு அதனைச் சமாளிக்க படைத்தரப்பு தம் மீது சூடு நடத்தப்பட்டதாகச் சொன்னதா?

(மறுபக்கம் பார்க்க)





# காதலுக்கும் நீள்தலுண்டோ...?

பெரு வனாந்தரம் ஒன்று எதிரே
பௌர்ணமி நிலவொளியில் தகிக்கின்றது
போர்த்தி கண்ட கி(உ)ழவனுக்கும்
நெஞ்சாங்கட்டையாக வேப்பம்குற்றி
நெடுஞ்சுடராய் சுடுகாட்டில் கனன்றெரிகின்றது

ஓங்கியுயர் பனங்கூடல்
உரசியும் தோன்றாப்தீப்பொறி
மூங்கில்களில் வண்டிட்ட துளைநாதம்
முகாரியிசைக்க எரித்தழிக்கின்றது

மாசிப்பனி மூசிப்பெய்து
மானிடம் தழைத்து
வேளாண்மை செழிக்கும்
வேளைகளில் பெரும்களை மழை....

இவையனைத்திலுமே
ஒரு காதல் நீட்சியை யாசிக்கின்றது
இன்னொரு காதல் தக்கன பிழைத்தல்
அடுத்தவொரு காதல் பழிக்குப்பழி

ஆக இங்கு கா்தல்,
ஒரு பன்முக போர் தளபாடம்
சூழ்நிலைக்கேற்ப அது
சுழன்றடிக்கின்றது.

- பழனிநாதன் நிரோசன்

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

# முள்ளிவாய்க்காலில்

## பொறுப்புக்கூறாதோரை ஐ.நா. மதிக்காது

**கே:** இராணுவத்தினரை ஆய்வு செய்யும் பொறிமுறை (வடிகட்டல்)எவ்வாறு தொழிற்படுகின்றது?

**ப:** ஐ.நா சார்பில் வெளிநாடுகளில் பணிபுரிய படைவீரர் ஒருவர் நியமிக்கப்பட முன்னர் அவரின் முழுமையான பின்னணி ஆராயப்பட்டு நடுநிலையான ஒரு அமைப்பினால் அவரின் நன்னடத்தை உறுதிசெய்யப்படவேண்டும். இதற்கான பொறிமுறையே வடிகட்டல் என அழைக்கப்படுகிறது. இது ஒரு இராணுவ வீரர் குறிப்பிட்ட போர்க் குற்றங்களைப் புரிந்துள்ளார் என்பது பற்றி நிரூபிப்பதல்ல. இது வெறுமனே அவர்கள் போர்க்குற்றங்கள் அல்லது மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டிருக்கலாம் என்பதால் ஏற்படக்கூடிய சாத்தியமான ஆபத்தினை ஆராய்வது பற்றியதாகும்.

2018 இல் மாலியில் இருந்து, நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்ட படையணிக்கான பொறுப்பதிகாரி, 2009 இல் இப்போதைய இராணுவத் தளவதியான சவேந்திர சில்வாவின் கீழுள்ள 58 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த 11 ஆவது இலகு காலாற்படைப் பிரிவின் இரண்டாவது கட்டளையதிகாரியாக இருந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

இந்த 58 ஆவது படைப்பிரிவு தான் பாதுகாப்பு வலயங்கள் என்றழைக்கப்பட்ட பிரதேசங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக ஐ.நா.வின் (மூஜஐஞடு) அறிக்கை சொல்கிறது. 58 ஆவது படையணி இருந்த இடங்கள் எங்களுக்கு தெரியும். அந்த நேரத்தில் வெளியிடப்பட்ட இலங்கைப் பாதுகாப்பமைச்சின் அறிக்கைகளில் இருந்து 11 ஆவது இலகு காலாற்படை இருந்த இடங்களும் எங்களுக்கு தெரியும் . அத்துடன் அந்த அணிகள் இருந்த இடங்களில் சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றங்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். 11 ஆவது இலகு காலாற்படையின் இரண்டாவது கட்டளை அதிகாரி புதுமாத்தளன், வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் பகுதிகளில் முன்னரங்க சண்டைகளில் தொடர்புபட்டிருந்தார். மனித உரிமைமீறல்களில் இந்தக் கட்டளையதிகாரி தொடர்புபட்டிருக்கிறார் என ஐ.நா. நம்புகிறது.

வடிகட்டல் பொறிமுறைக்கு ஒரு நீதிமன்ற வழக்குக்கு தேவையான அதேயளவு சாட்சியங்கள் அவசியமில்லை. அது ஒருவர் ஒரு குற்றத்தைச் செய்தார் என்பதை நிரூபிப்பது என்பதல்ல. மாறாக அவர்கள் பாரதூரமான மீறல்களில் தொடர்புபட்டு இருப்பதற்கான சாத்தியப்பாடு பற்றி ஆராயும்.

அமைதிகாப்பு என்பது ஒரு கௌரவமான பணியாகும் அத்துடன் அந்த நாட்டுக்கும் சம்பந்தப்பட்ட தனிநபருக்கும் நிதி ரீதியாக நன்மை பயக்கும் ஒன்றாகவும் உள்ளது.

ஐ.நா.வின் அமைதிகாப்பு படைவீரராகப் பணியாற்றுவது கௌரவத்துக்குரியது. அத்துடன் ஒரு இராணுவ வீரர் ஒரு ஐ.நா.வின் அமைதிகாப்பு படைவீரராக இருப்பதென்பது , தானாகக் கிடைக்கும் உரிமையில்லை. எமக்கு சந்தேகம் இருப்பவர்களை அல்லது கேள்விகளுக்கு பதிலளிக்காதவர்களை நாங்கள் வழமையாக மதிப்பதில்லை.

**கே:** பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகத்தை தடுப்பதில் இராணுவத்தினரை ஆய்வு செய்யும் பொறிமுறை எவ்வாறு உதவுகிறது?

**ப:** அமைதிகாக்கும் படையினர் போர் நடைபெறும் நாடுகளில் பாதிக்கப்படக்கூடியவர்களை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யக்கூடிய ஆபத்தானது மிகவும் கவலைக்குரியது. எனவேதான் அமைதிகாக்கும் படையினரை ஆய்வுக்குட்படுத்த ஐ.நா. தொடங்கியது. பரவலான அல்லது திட்டமிட்ட பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகத்துக்கான நம்பத்தகுந்த சாட்சியங்கள் காணப்பட்டால் அந்த அணி தனது சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படும் என 2016 இன் ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானம் ஒன்று தெரிவிக்கின்றது.

பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் பற்றி குற்றச்சாட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டு அந்த நாடு அதனை விசாரிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்திருக்காவிட்டால் அந்த நாட்டினுடைய அனைத்து இராணுவ அணிகளையும் ஐ.நா பொதுச் செயலாளர் விலக்குவது அவசியம் என இந்தத் தீர்மானம் கூறுகின்றது.

கெய்ட்டி துஷ்பிரயோகத்தின் பின்னர் இலங்கையில் நம்பத்தகுந்த விசாரணை மற்றும் வழக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா? என்பது பற்றி கேள்விகள் உள்ளன. இதுவரை செய்துகாட்டாத, நம்பத்தகுந்த ஒரு நீதிச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டதைக் காட்டும் பொறுப்பு இலங்கைக்கு உள்ளது.

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

# காட்டுக்குள்...



## சந்தேகம்-2

சம்பவத்தில் காயத்தோடு ஒருவர் பிடிபட, ஏனைய இருவரும் தப்பிச் சென்றிருந்தனர். பிடிபட்டவர் பொலிஸ் பாதுகாப்போடு மருத்துவமனையில் சிகிச்சை பெற, ஏனைய இருவரும் வீட்டில் தான் உள்ளனர். ஒருவேளை படைத்தரப்பு அறிவித்ததைப் போல, அவர்கள் இராணுவத்தின் மீது சுட்டிருந்தால், இப்படி கைது செய்யப்படாமல் சுதந்திரமாக உலவ முடியுமா? அவ்வளவு ஏன், இந்த மூவரிடம் வாக்குமூலங்களைப் பெற்றவர்கள், அவர்களது வீட்டைக் கூட சோதனையிடவில்லை. ஆக, அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவில்லை என்பது பொலிஸாருக்கும் தெரியுமா?

.தற்போதைய சூழலில் வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் மீது துப்பாக்கி பிரயோகம் ஒன்று உண்மையாகவே இடம்பெற்றிருக்குமானால் , விசாரணைகளும் சோதனைகளும் எப்படிஇருந்திருக்கும் என்று சொல்லிதெரியவேண்டியதில்லை. செட்டிக்குளமே முற்றுகையிடப்பட்டு, சல்லடை போடப்பட்டிருக்கும். ஆனால் சம்பவத்தோடு தொடர்புடையவர்களிடமே சோதனை செய்யாமல் இருப்பது, படைத்தரப்பு சொன்ன விடயம் பொய் என்பதையே அம்பலப்படுத்துகின்றது.

## சந்தேகம்-3

இந்தச் சூட்டுச்சம்பவத்தில் மூவர் காயமடைந்துள்ளனர். அதில் இருவருக்கு பாரதூரமான காயங்கள். அவர்கள் மயிரழையிலேயே உயிர்பிழைத்திருந்தனர். தப்பிவந்தவர்கள் வழங்கிய சாட்சியங்களின் படி அவர்களைக் கொல்லும் நோக்கத்திலேதான் இராணுவம் அவர்களை நோக்கி வேட்டுக்களை தீர்த்திருக்கிறது. அவர்களை அச்சுறுத்துவதாக இருந்தால் வானத்தை நோக்கி சுட்டிருக்க முடியும்.இல்லையேல் காலுக்குகீழ் சுட்டிருக்கலாம் . ஆனால் தோள், கழுத்து என்பவற்றுக்கு அண்மையாகவே இருவருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன.


ஒருவேளை அவர்களைக் கொன்று விட்டு, புலிகள் இன்னும் காட்டுக்குள் இருக்கிறார்கள் என்று ஒரு கதையைப் பரப்பத்தான் இந்தச் சூட்டுச் சம்பவம் அரங்கேறியதா?

## சந்தேகம்-4

வழக்கமாகக் காட்டுக்குள் இறங்கும்போது மக்களுக்கு அறிவித்து விட்டுச் செல்லும் இராணுவம் அண்றைக்கு மட்டும் ஏன் இரகசியமாகச் சென்று பதுங்கியிருந்தது? அந்தக் காட்டுப்பகுதி தொல்பொருள்கள் நிறைந்த இடம். ஆகவே அந்தத் தொல்பொருள்களை பௌத்தத்துக்கு உரியதாக உருமாற்றும் வேலையில் படையினரின் பாதுகாப்போடு வேறு யாரும் செய்து கொண்டிருந்ததை, இவர்கள் கண்டுவிடக்கூடும் என்பதால் வெடி வைத்துக் கலைக்கப்பட்டார்களா? கேள்விகள் மட்டும் நீள்கின்றன. பதில்கள் படைத்தரப்புக்கு மட்டுமே தெரியும்.

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்





## உதிர்கிறதா மொட்டு?




கொழும்புத் துறைமுக கிழக்கு முனைய விவகாரத்தால் அரசுக்குள் ஏற்பட்ட மோதல் இன்னும் முடிவுக்கு வரவில்லை. சமரசரம் ஏற்பட்டுவிட்டது என சமாளிப்புப் பாணியில் அறிவிப்புகள் வெளிவந்தாலும், பங்காளிகளுக்கும், மொட்டுக் கட்சி உறுப்பினர்களுக்குமிடையில் அடிக்கடி பகைமை பொங்கிக்கொண்டேதான் இருக்கின்றது.

கிழக்கு முனையத்தின் 49 சதவீத பங்குகளை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை, கடும் எதிர்ப்புகள் வலுத்ததால் கைவிடப்பட்டுள்ளது. இதனால் கொழும்புக்கு இராஜதந்திர மட்டத்திலும் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அரச கூட்டணியிலுள்ள பங்காளிக்கட்சிகளும், அரசுக்கு சார்பான சிங்கள தேசியவாத அமைப்புகளும் கிழக்கு முனைய விவகாரத்தில் அரசுக்கு கடிவாளம் பூட்டின. ஒருபுறம், பொருளாதார நெருக்கடி, மறுபுறத்தில் கொரோனாச் சிக்கல் என திண்டாடிக்கொண்டிருக்கும் அரசுமீது மக்களிடையே ஏதோவொரு விதத்தில் அதிருப்தி ஏற்பட்டுள்ள நிலையில், எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றும் வகையில் பங்காளிகள் செயற்படுவது மொட்டுக் கட்சியினரை சினம் கொள்ள வைத்துள்ளது.

ஆளுங்கட்சி நாடாளுமன்றக்குழுக் கூட்டம், அமைச்சரவைக் கூட்டம் என பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்கும், தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கும் அரச தரப்பிலேயே வாய்ப்புகள் இருந்த நிலையில், அதற்கு வெளியில்சென்று பங்காளிக்கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டமை தவறு எனவும், அதற்கு விமல்வீரவன்ஸ தலைமைத்துவம் வழங்கியதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் மொட்டு கட்சி எம்.பிக்கள் சிலர், கட்சி தலைமையிடம் முறையிட்டுள்ளனர். அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா உட்பட மேலும் சில ஆளுங்கட்சி உறுப்பினர்கள், பங்காளிக்கட்சிகளின் தலைவர்களின் செயற்பாடுகளை வெளிப்படையாகவே விமர்சித்திருந்தனர்.

அதுமட்டுமல்ல, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிமீதும் விமர்சனக் கணைகள் தொடுக்கப்பட்டுள்ளன. அரசுக்குள் இருந்துகொண்டு சூழ்ச்சி செய்கின்றனரா என்ற சந்தேகத்தை அண்மையில் இராஜாங்க அமைச்சரொருவர் எழுப்பியிருந்தார்.

விமல் தரப்புமீது பஸில் அணியினர் ஏற்கனவே கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். இந்நிலையில் கிழக்கு முனைய விவகாரத்திலும் விமலின் கை ஓங்கியுள்ளதால் பஸில் தரப்பு மேலும் சீற்றமடைந்துள்ளது. தேர்தலொன்று வரும்போது இதன் தாக்கம் வெளிச்சத்துக்கு வரும்.

## முற்போக்கு முறுகல்

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளதாக நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி, பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய முன்னணி, இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகியவை இந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.


மலையகத்தில் உதயமான கூட்டணிகளுள் 4 வருடங்களுக்குமேல் தாக்குபிடித்து நின்ற கூட்டணி என்ற பெருமை தமிழ் முற்போக்கு கூட்டணியையே சாரும். அவ்வாறானதொரு கூட்டணிக்குள்தான் தற்போது முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு மலையக மக்கள் முன்னணியின் செயற்பாடே காரணம் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அரவிந்தகுமார் எம்.பியை, முற்போக்கு கூட்டணியிலிருந்து இடைநிறுத்திய நிர்வாகக்குழு, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை மலையக மக்கள் முன்னணியிடம் ஒப்படைத்தது.

எனினும், மலையக மக்கள் முன்னணி இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக, அரவிந்தகுமாரை கட்சியில் தக்கவைத்துக்கொள்வதற்கான நகர்வுகளே முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அதுமட்டுமல்ல, சம்பள உயர்வுப் போராட்டத்துக்கான ஆதரவையும் மலையக மக்கள் முன்னணி தன்னிச்சையாக வெளியிட்டதால் இதர இரு பங்காளிக் கட்சிகளும் அந்தக்கட்சிமீது அதிருப்தியில் இருக்கின்றன. இந்நிலையில் அடுத்துவரும் தேர்தல்களில் மலையக மக்கள் முன்னணி இல்லாமல்தான் போட்டியிட வேண்டும் என தொழிலாளர் தேசிய சங்க உறுப்பினர்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர்.

## ஆட்டத்தை ஆரம்பித்த மேற்குலகம்




இலங்கை அரசாங்கத்தின் நகர்வுகள் தொடர்பில் கொழும்பிலுள்ள மேற்குலக நாடுகளின் தூதுவர்களும், இராஜதந்திரிகளும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்து, சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் தூதரக அதிகாரிகள் கலந்துரையாடிவருகின்றனர் என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

கொவிட் 19 பிரச்சினையால் வெளியிடங்களுக்கு செல்லமுடியாத சூழ்நிலையில் சில சந்திப்புகள், நவீன தொழில்நுட்பச் செயலிகள் மூலமாக இடம்பெறுவதாகவும் கூறப்படுகின்றது. ஜெனிவாக் கூட்டத் தொடர் நெருங்கியுள்ள நிலையில், வடக்கு, கிழக்கிலுள்ள சில கட்சிகள் மேற்குலக நாடுகளிடம் மகஜர்களை கையளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மார்ச் 19 ஆம் திகதிவரை நடைபெறும் குறித்த கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

## 2024 க்கு இப்போதே வியூகம்



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு முக்கிய பங்கு வகித்த தரப்புகளில் 'வியத்மக' என்ற சிவில் அமைப்பு பிரதானமானது.

அரசியல்களம் புகுவதற்கு முன்னர் மேற்படி குழுவின் ஊடாகவே கோத்தாபய ராஜபக்ச பரப்புரைகளை முன்னெடுத்தார். அது பௌத்த தேரர்களும், புத்திஜீவிகளும், துறைசார் நிபுணர்களும் இக்குழுவில் இடம்பெற்றிருந்ததால் அது சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்றிருந்ததுடன், இலகுவில் பரப்புரை நட வடிக்கைகளை முன்னெடுக்கக் கூடியதாகவும் இருந்தது. அமைச்சர் சரத் வீரசேகர, இராஜாங்க அமைச்சர்களான சன்ன ஜயசுமன, பேராசிரியர் நாலக கோட்டேகொட, சீதா அரம்பேபொல ஆகியோர்கூட வியத்மக அமைப்பின் அங்கத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதும் 'வியத்மக' குழு செயற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றது. இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியை பலப்படுத்தும் முயற்சியில் ஈடு பட்டுள்ள சஜித் பிரேமதாசவும், வியத்கம பாணியில் புத்திஜீவிகள் குழுவொன்றை அமைத்துள்ளார். முக்கிய பிரமுகர்கள் இதில் இடம்பிடிக்கவுள்ளனர். முன்னாள் இராஜதந்திரி கலாநிதி தயான் ஜயதிலக்கவும் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கவுள்ளார். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் கூட்டணியொன்றும் அமையவுள்ளது. அதற்கான யாப்பு உருவாக்கப்பட்ட பின்னர் கூட்டணி அமையும். சம்பிக்க ரணவக்க தலைமையில் சிங்கள, பௌத்த வாக்குகளை திரட்டு வதற்கான வியூகமும் வகுக்கப்பட்டுவருகின்றது. 2024 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்காக சஜித் பிரேமதாச தற்போதிருந்தே வியூகம் வகுத்துவருகின்றார் என அரசியல் களத்தில் பேசப்படுகின்றது.



# தென்னை மர இனங்களும் மனைவி போட்ட பேஸ்புக் படமும்!

○ வடகோவை வரதராஜன்

மாமரத்தின் கீழ் போட்டிருந்த சிமெந்துப் பெஞ்சில் இருந்து நானும் செல்லையா அண்ணரும் பேசிக்கொண்டிருந்தோம். சிங்கம் இளநீர் வெட்டி அதற்குள் எலுமிச்சம்பழத்தை பிழிந்து விட்டுக் கொண்டுவந்து தந்தார். இனிப்பும் புளிப்பும் துவர்ப்பும் கலந்த வினோதச் சுவை சொக்க வைத்தது .

இளநீரின் முகிழ்ப் பகுதியின் வெட்டுவாய் குங்கும நிறத்தில் இருந்தது.

"எந்த மரத்தான் இளநீர் அண்ணை ?"

"சந்திரகாந்தி மரத்திலை புடுங்கினது. அளவெட்டியில் கூட்டாளி ஒருத்தனிட்டை இருந்து வாங்கிக் கொண்டந்து நட்டனான். இப்ப என்னட்டை கனபேர் நெத்துகள் வாங்கிக் கொண்டு போயிருக்கினம் "இப்பிடிக் கனக்க உள்ளூர் இனங்கள் எங்களிடம் இருந்தது. இப்ப எல்லாத்தையும் அழிய விட்டிட்டம். என்னைக் கேட்டால் எங்கடை நல்ல தாய்மரத்தில் இருந்து தெரிவு செய்த உள்ளூர் இனங்கள் தான் நடுகைக்கு திறம் என்பேன்"

" ஏன் அப்பிடிச் சொல்லுறாய்?"

இந்த உள்ளூர் இனங்கள்,

1. **காலாதி காலமாய் எங்கட மண்ணில வளர்ந்து , எங்கட சூழலுக்கு இயைபாக்கம் பெற்றவை .**
2. **எங்கட காலநிலைக்கு ஏத்தமாதிரி வளரக்கூடியவை**
3. **வறட்சியைத் தாங்கி வளரும் .**
4. **நோய் எதிர்ப்புச் சக்தி உடையவை .**
5. **வருசம் முழுக்க காய்ச்சுக் கொண்டிருக்கும்.**
6. **அதிக பராமரிப்புத் தேவையில்லை .**
7. **நிறையத் தூரத்துக்கு வேரோடி தண்ணியையும் கனியுப்புகளையும் உறிஞ்சும் .**
8. **இயற்கைச் சீற்றங்களுக்கு நிண்டு பிடிக்க கூடியவை .**

" என்னண்டு மோனை உவ்வளவு குணங்களும் உந்த மரங்களிலை வந்தது ?"

" அதுதான் அண்ணை, தாய்மரத் தெரிவில நான் முதலாவதாய் சொன்னனானெல்லோ 25 வருச வயசான தாய்மரத்தைத் தெரிவு செய்ய வேணும் எண்டு. ஒரு மரம் 25 வருசம் நிண்டு பிடிச்சு காய்க்குது எண்டால் அது எத்தனை இயற்கைச் சீற்றங்களைக் கண்டிருக்கும். எத்தனை வறட்சிக் காலங்களைக் கடந்து வளர்ந்திருக்கும் ?

எத்தனை நோய்களோடை மல்லுக்கட்டி நிண்டிருக்கும்.

25 வருசத்துக்கை இவைகளால பாதிக்கப் பட்டிருந்தால் அந்த மரம் பட்டிருக்குமெல்லே .

இப்படியான மரங்களின் நெத்தை எடுத்து முளைக்கப் போட்டு, எங்கடை மூதாதையர் தலைமுறை தலைமுறையாக இதுகளை அழியவிடாமல் காப்பாத்தி எங்களிட்டைத் தந்திருக்கினம் .

நாங்களும் உதுகளைக் காப்பாத்தி அடுத்த தலைமுறையிட்ட இதுகளைக் குடுக்கவேணும்"

பர்வதம் மாமி வர்ண ஓலைகளால் பின்னப்பட்ட பெட்டியொன்றில் பனங்காய்ப் பணியாரங்களைக் கொண்டு வந்து வைத்தார் .

வழமைபோல் மஞ்சள் பூசி குளித்து, இன்று ஆண்டாள் கொண்டை போட்டிருந்தார் .

பனங்காய்ப் பணியாரங்கள் வெண்ணையாக நாக்கில் கரைந்தன. சுவை சொல்லி மாளாது . பணியாரங்களை எண்ணையில் போடும் போது, கையில் இருந்து விழுந்த கடைசி மா இழுபட்டு, பணியாரங்களுக்கு ஒரு வால் வைத்தது போலிருந்தது .

" எப்பிடி இருக்கு விதானையார் " ?

" அந்த மாதிரி இருக்கு .இப்பிடி ஒரு ருசியாய் நான் ஒரு இடமும் சாப்பிடேல்லை"

" நீங்கள் சும்மா சொல்லுறியள் " எனது புகழ்ச்சியில் மாமி கொஞ்சம் வெட்கப்பட்டார் .

" மெய்யாய்த்தான் சொல்லுகிறன் .அது சரி, ஒவ்வொரு பணியாரத்துக்கும் ஏன் வால் வைச்சிருக்கிறியள் "

" உங்களுக்குவால்தனங்கள் இருக்கெல்லோ. அதுதான் உங்களுக்கெண்டு ஸ்பெசலாய் வால் வைச்சுச் செய்தது ." மாமி சொண்டை நெளித்து குறும்பாய் சிரித்தார் .

" தம்பிக்கு கோப்பியைக் கொண்டுவந்து குடுமன்" என்ற செல்லையர்,

" புது இனங்களைப்பற்றி சொல்லுறன் எண்டாய் . அதைப் பற்றிச் சொல்லன் ."

" ஓமண்ணை , லுணுவிலை தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் கலப்பு பிறப்பாக்கல் மூலம் புதிய தென்னை மரங்களை உருவாக்கி இருக்கினம் .

ஒவ்வொண்டாய்ச் சொல்லுறன் கேளுங்கோ.

**1) சி ஆர் ஐ சி 60 (C R I C 60)**

- இது இரண்டு நெட்டை மரங்களைக் கலந்து உருவாக்கினது .
- இதின்ர அடிப்பாகம் பெருத்திருக்கும்
- வறட்சியைத் தாங்கி வளரும்
- நோய்களுக்கு எதிர்ப்பான இனம்
- 60 வருசம்வரை நிண்டு பலன் தரும் .
- சராசரியாக வருசத்துக்கு 100 தேங்காய் காய்க்கும்.

**2 ) மாறுக் (Mooruk Tall)**

- இதுவும் இரண்டு நெட்டை மரங்களைக் கலந்து உருவாக்கினது
- உயரமாக வளரும்
- சராசரி 80 தேங்காய் ஒவ்வொரு வருசமும் காய்க்கும்.

**3 ) சன்றோமான் (San Roman)**

- இதுவும் உயரமாக வளரும்.
- இதில பச்சை ,ஒரேஞ்ச் மண்ணிறம் எண்டு வேற வேற நிறங்கள் இருக்கு.
- இதின்ர தேங்காய் சரியான பெரிசு
- கொப்பறா தேறும் விகிதம் அதிகம் .

**4 ) அம்பகேல (Ampakelle)**

- உயரமாக வளரும்
- வறட்சியைத் தாங்கும்
- வருசத்துக்கு சராசரியாக 70 தேங்காய் காய்க்கும்.

**5 ) ஹைபிறிட் சி ஆர் ஐ சி 65 ( Hybrid C R I C 65 )**

- இது நெட்டை மரத்தையும் பச்சை குட்டை மரத்தையும் கலந்து உருவாக்கினது.
- நடுத்தர உயரமாக ( 35 அடி) வளரும்
- அடி பெருக்காது
- மூன்றோ நாலோ வருசத்துக்கை பாளை வரும்
- வருசத்துக்கு 120 தேங்காய் காய்க்கும்.
- இதுக்கு ஒழுங்காத் தண்ணி விட்டு, பசளை போட வேணும்.இல்லாட்டி பலன் கொடாது.
- ஆயுள் காலம் 40 வருசம்.
- இதே இனத்தில மஞ்சள் வர்க்கமும் இருக்கு.
- பொதுவாக ஆவர்த்தனக் காய்ப்புக்கு உட்படும்."

" பொறு ! பொறு !, தட்சணாமூர்த்தி தவிலிலை தனி ஆவர்த்தனம் வாசிச்சமாதிரி ஏதோ ஆவர்த்தனக் காய்ப்பு எண்டு சொல்லிக்கொண்டு போறாய்"

" இந்தச் செவ்விளனி மரத்தை பாருங்கோ . ஏன் இப்ப காய்களைக் காணவில்லை?"

"உது உப்பிடித்தான் மோனை, ஒரு அஞ்சு மாசத்துக்கு முன்னை குலை குலையாய் காய்ச்சு கொட்டிச்சுது. இப்ப பாளை வரேல்லை"

" இதைத்தான் ஆவர்த்தனக் காய்ப்பு என்கிறது.கொஞ்சக் காலம் கைதடிப் பழனியின்ரை தவில் தனியாவர்த்தனக் கச்சேரி மாதிரி உலுப்பிக் கொட்டுங்கள். பின்பு கொஞ்சக் காலம் ஓய்வெடுத்து சத்துக்களை சேர்த்துக் கொண்டு திருப்ப உலுப்பத்தொடங்குங்கள்"

" அடடா ! உதையே ஆவர்த்தனக் காய்ப்பு எண்டு சொல்லிறது? "

" ஓமண்ணை ! இதனால் எங்களுக்கு வருடம் முழுவதும் தேங்காய் உற்பத்தி சீராய் இருக்காது "

மனைவி மில்லுக்குப் போகவேண்டும் என்று சொன்னது ஞாபகம் வர நேரத்தைப் பார்த்தேன் .

" என்ன நேரம் பாக்கிறாய்? ஒருவருசத்திலை காய்க்கிற மரம் எண்டு சொல்லி விக்கிறாங்கள்.அதைப்பற்றியும் ஒருக்கா சொல்லிப்போட்டு போ"

" அதைப் பற்றி சொல்லுறது எண்டால் தென்னை மரத்தின் இயல்புகள் பற்றியும் உங்களுக்குச் சொல்லவேணும் .

ஒரு தென்னை மரத்தில் எத்தனை பச்சை ஓலைகள் இருக்கெண்டு உங்களுக்குத் தெரியுமோ ?"

" உந்த சிலம்பாயளை ஆர் எண்ணினது ?"

" அதிலை இருந்து தொடங்க வேணும் அண்ணை. இப்ப மில்லுக்கு போக வேணும்; பிறகு ஒருநாள் வந்து சொல்கிறேன்" இந்தக் கதைகளை கேட்டுக் கொண்டு, குடித்துவிட்டு வைத்த கோப்பிக் குவளைகளை எடுக்க வந்த பர்வதம் மாமி

" விதானையார் பேஸ்புக்கிலை எழுதுகிறதுகளை நானும் படிக்கிறனான்"

என்று நாணத்துடன் கூறினார்.

" அப்படியா சந்தோசம்"

" உங்கடை மிஸிசும் உங்கடை பதிவுகளை படிக்கிறவோ விதானையார் ?"

" இல்லை! இல்லை ! அவ படிக்கேலாது. அவவை புளொக் பண்ணி வைத்திருக்கிறன்"

" ஏன் விதானையார் ?" பர்வதம் மாமி பதற்றத்துடன் கேட்டார் .

"அண்டைக்கு ஒருநாள் அவ தன்ர பேஸ்புக்கில 'இந்த ஆஞ்சநேயர் படத்தை 50 பேருக்கு பகிர்ந்தால் பத்து நாள்களுக்குள் உங்களுக்கு அதிர்ஷ்டம் வரும்' எண்டு படத்தோட ஒரு பதிவு போட்டா. அதோட ஆளை புளொக் பண்ணிட்டன்."

" அதிலை என்ன பிழை ?"

" என்ன பிழையோ? அதில ஆஞ்சநேயர் எண்டு என்ரை படத்தையெல்லோ போட்டிருக்கிறா"

பர்வதம் மாமி விழுந்து விழுந்து சிரிக்க செல்லையர்,

" மருமோள் எப்பவும் சரியாய்த்தான் செய்வள்" என்று நளினம் விடத்தொடங்கினார் .



சஞ்சீவி சிறுகதை



# இதற்குத்தானா?



இ.ஷயனுதா
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

எல்லாச் சனமும் தேவிபுரம் பக்கம் தானாம் போகுதுகள். சனத்தோட சனமா நாங்களும் உடன வெளிக்கிடுவம்" தகப்பன் நடராசர் சொன்னதைக் கேட்டதும் அமுதனுக்கு இடி இறங்கியதைப் போலிருந்தது.
வேறுவழியில்லை. அவர் சொல்வதும் சரிதான். போர் மிக நெருங்கியிருந்தது. இனியும் தாமதித்தால் குண்டு மழைக்குள் குடும்பத்தோடு சிக்க வேண்டியதுதான். ஆனால் அப்படி இடம்பெயர்ந்தால் கல்பனா...? அவளை எப்படி இனிப்பார்ப்பது?
நினைக்கவே அமுதனுக்கு உலகமே இருளத் தொடங்கியது. வேதனையை வெளியிலும் காட்ட முடியாது.
"போறதெண்டால் ,. சாமான் எல்லாம் ஒரே தரத்தில ஏத்தலாமோ?" அம்மாவுக்கு தன் கவலை.
"எல்லாச் சாமானயும் ஏத்தேலாது. பாத்து தேவயானதை மட்டும் ஏத்துவம்"
யோசனையோடு சொன்னார் நடராசர்.
" உவன் அப்பன்ர மிசினைக் கேளுங்கோ. அவன் எண்டால் சோலியில்லை"
எல்லாமே இயந்திரகதியில் நடந்தேற, தேவிபுரத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.
நெஞ்சை நிமிர்த்தி போருக்கழைக்கும் பனை மரக் கூடல்கள். எப்போதும் பச்சைச் சீருடையோடு அசைவற்றுக் கிடக்கும் காடுகள் , நீண்டு கிடக்கும் பசுமை வயல்கள்,சலசலக்கும் சிற்றருவிகள் என்று முல்லைத்தீவின் அத்தனை அடையாளங்களையும் இழந்து விட்டு, அவர்கள் கூட்டத்தோடு கூட்டமாக நகரத் தொடங்கினர்.
தறப்பாள் கொட்டிலில் வாழ்வு தொடங்கியது. அமுதனுக்கு தேவிபுரம் சிறைவாழ்க்கையாகிப் போனது.
"வெளியால தலை காட்டாதை. பிறகு பிடிகாரர் கண்ணில அகப்பட்டால் அவ்வளவுதான். அங்க போறன், இங்க போறன் எண்டு திரிஞ்சு வில்லங்கத்தை வாங்காதை"
நடராசர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். பிறகெப்படி அவன் வெளியே செல்லமுடியும்? கொட்டிலுக்குள் அடைந்து கிடக்க, இன்னுமின்னுமாக கல்பனாவின் நினைவுகள் அவனை ஆக்கிரமிக்கத் தொடங்கின. இரவு கவ்விக்கொண்ட பொழுதொன்றில் தேவிபுரம் அதிரத் தொடங்கியது.
"எங்கயோ செல் குத்திச் சத்தம் கேக்குது." கூறிவிட்டு காதைக் கூர்மைப்படுத்திக் கொண்டார் நடராசர்.
"ஏனப்பா செல் கிட்ட கிட்ட விழுகிற மாதிரிக் கிடக்கு. இண்டைக்குத்தானே வந்தம். பங்கரும் வெட்டேல்லை. என்ன செய்யிறது?"
"பக்கத்துக் கொட்டில்காரர் பெரிய பங்கர் வெட்டி இருக்கினம். அவேட்டைக் கேட்டிட்டு இண்டைக்கு மட்டும் அங்க இருப்பம்"
நிலத்தோடு தவழ்ந்தபடி மூவரும், இருளின் துணையோடு நகர்ந்து ஒருவழியாக அயல்வீட்டாரின் பதுங்கு குழிக்குள் தஞ்சமடைந்தார்கள்.
ஷெல் சத்தம் ஓய்வதாக இல்லை. மிக அருகாக வீழ்ந்து ஷெல் வெடிக்கும் போதெல்லாம், பங்கர் அதிர்ந்து, உள்ளிருந்தவர்கள் மீது மண் உதிர்ந்து கொண்டிருந்தது. பதுங்குழி இருட்டை கொஞ்சமேனும் விரட்ட, அங்கு ஒளிர்ந்து கொண்டிருந்த ஒற்றைக் குப்பி விளக்கு படாதபாடு பட்டுக்கொண்டிருந்தது. 'இன்னும் எவ்வளவு நேரம் இதுக்கை இருக்க வேணுமோ?' பதுங்கு குழியின் ஒரு பக்கத்தில் தலையைச் சாய்த்துக் கொண்டு வெறித்தபடியிருந்தான் அமுதன்.
"டும்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்!"
நிலமும் காதும் அதிர்ந்த அதேகணத்தில், பொலபொலவென மண் துணிக்கைகள் பதுங்கு குழிக்குள் இருந்தோர் மீது பொழிந்தன. அப்போதுதான் தன் தலையில் உதிர்ந்த மண் துணிக்கைகளை தட்டுவதற்காக , கொஞ்சம் முகத்தை முன்னே நீட்டி,
தலை குனிந்து, பின் நிமிர்ந்த அவள் முகத்தில் பட்டுத் தெறித்தது குப்பி விளக்கொளி.
'கல்பனா!!'
ஒருகணம் தான். அந்த ஒருகணமே அமுதனுக்கு ஆயுள் முழுதும் கொண்டாடக் கூடிய ஆனந்தம். அந்த ஒளியிலே தெரிந்தது அவனது தேவதையல்லவா?
கல்பனாவை இவ்வளவு விரைவாக,அதுவும் ஒரே பங்கருக்குள் சந்திப்பேன் என்று அவன் கனவிலும் நினைத்திருக்கவில்லை. நினைக்காதது நடந்திருக்கிறது. அமுதன் கல்பனாவைக் கண்டது போலவே, அவனது தாயும் கண்டுவிட்டாள். அதற்குப் பிறகு தாயின் முகம் கறுத்து விட்டது. ஷெல் வீச்சு ஓயும்வரை முகத்தை மறுபக்கமாக திருப்பியபடி இருந்துவிட்டாள். இன்னொரு அதிர்வில் கல்பனாவும் அவளைக் கண்டுகொண்டாள். ஆனாலும் பேசமுடியாது. அந்தப் பதுங்குழி எங்கும் விடியும் வரை விழிகளின் சந்திப்பில், காதல் வாசம் நிரம்பத் தொடங்கியது.

★ ★ ★ ★

> ஒருகணம் தான். அந்த ஒருகணமே அமுதனுக்கு ஆயுள் முழுதும் கொண்டாடக்கூடிய ஆனந்தம். அந்த ஒளியிலே தெரிந்தது அவனது தேவதையல்லவா. கல்பனாவை இவ்வளவு விரைவாக,அதுவும் ஒரே பங்கருக்குள் சந்திப்பேன் என்று அவன் கனவிலும் நினைத்திருக்கவில்லை.



"தாய் தேப்பனோட இருந்தால் பிடிச்சு ரெயினிங்குக்கு கொண்டு போடுவாங்கள் எண்டுதான் அவளை இஞ்ச மாமனோட விட்டிருக்காம்'
அமுதனின் தாயின் சொற்களோடு அன்றைய காலை அவனுக்கு விடிந்தது. அப்படியே படுத்திருந்தான், வேறு ஏதும் தகவல்கள் தாய் மூலம் கிடைக்கக் கூடுமென்று. ஆனால் அதற்குப் பிறகு தாய் அதைப்பற்றியே கதைக்கவில்லை. மாலையில் ஒரு சின்னப் பெடியன் கொண்டுவந்த காகிதத்தில், கல்பனா தன் நிலை முழுதும் சொல்லியிருந்தாள். அவளுக்கு எவரையாவது திருமணம் செய்துவைக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. அதற்கும் முதல் அவன் முந்திக்கொள்ளாவிட்டால், அவள் வாழ்க்கை பாழாகிவிடும். இனியும் அவன் தாமதிக்கத் தயாராயில்லை.
சேர்ட்டைக் கொழுவிக்கொண்டு , வெளிக்கிட்டான்.
" எங்கையடா போறாய்?" எதுவும் சொல்லாமல் விடுவிடென விரைந்தான். தாய்க்கு ஒரளவு புரிந்துவிட்டது. நடராசரிடம் ஓடினாள். அதற்கிடையில் பக்கத்து வீட்டில் உரத்த சத்தங்கள் எழத் தொடங்கிவிட்டன.
"உங்களுக்கு இந்த வயசில கண்டறியாத காதல் கேக்குதோ? என்ன துணிவிருந்தால், அவளைக் கட்டி வையுங்கோ எண்டு என்னட்டையே வந்து கேப்பாய்? வெட்டி எறிஞ்சிடுவன் ரெண்டு பேரையும்"
கல்பனாவின் மாமன் அமுதனைப் பார்த்து சன்னதமாடத் தொடங்கியிருந்தார். எதிர்ப்பாட்டு பாடியபடி நடராசரும் வந்து சேர்ந்தார். நாட்டுச் சண்டையை விடவும் இவர்களின் சண்டை உக்கிரமாயிருந்தது. ஆளையாள் அதிலேயே வெட்டித் துண்டாக்கி விடுவதுபோல இருவரின் வார்த்தைகள் அனல் கக்கின. ஒருபக்கம் கல்பனாவின் மாமனும், நடராசரும் வாய்ச்சண்டையில் மூழ்கியிருக்க, மறுபக்கம் கல்பனாவை பார்த்தபடியே இருந்தான் அமுதன்.
கடைசியாக உறுதியான குரலில்,
"என்னதான் நீங்கள் தடுத்தாலும் நான் கல்பனாவை கட்டப் போறன். அதுவும் இண்டைக்கே" சொல்லிக் கொண்டே அவளின் கரத்தைப் பற்றினான் அமுதன்.
அவளின் மாமனும், நடராசரும் விக்கித்துப் போய் தங்கள் வார்த்தைப் போருக்கு, சட்டென முற்றுப் புள்ளி வைத்தார்கள்.
"எங்களை மீறிப்போய், வாழுற அளவுக்கு துணிச்சல் வந்திட்டுதோ? நீங்கள் உங்கட பாட்டில போக விட்டிட்டு நாங்கள் என்ன பேய்க்குப் பேன் பார்த்துக் கொண்டிருப்பம் எண்டு நினைச்சியளோ " நடராசர் உறுமிக் கொண்டிருக்கும்போதே, கூவிக்கொண்டு வந்து விழத் தொடங்கின எறிகணைகள். கூடவே இயந்திர வல்லூறுகளும் குத்தி எழும்பி, இரை தேடின. எங்கும் புகைமூட்டம். ஒரேகணத்தில் அந்த நிலமே சிதறியிருந்தது. கொஞ்ச நேரத்துக்கு பின்னே அமுதனுக்கு உணர்வு வந்தபோதுதான், நடந்த விபரீதம் மூளையில் 'சுரீர்' என உறைத்தது. 'கல்பனா!!!!'
தேடினான். எவரும், பிழைத்திருக்க வாய்ப்பே இல்லை. அவனும் வெறுமையுமே அங்கு மிச்சம்.
"கல்பனா!"
ஓங்கிக் குரலெடுத்து அழத் தொடங்கினான். சற்றுத் தூரத்தே, இவர்கள் இணையக்கூடாது என்று சில செக்கனுக்கு முன்னர் சண்டை பிடித்திருந்த நடராசரதும், கல்பனாவின் மாமனினதும் ஆடைகள் நடுவே மிகப்பெரும் சதைக்குவியல். கொஞ்சம் தள்ளி ஓர் உருவம் மெதுவாக அசைந்தது. அமுதன் தன் பலமெல்லாம் திரட்டி எழ முயன்றான். கால் வலித்தது. குனிந்து பார்த்தான். கால் காயத்திலிருந்து குருதி வழியத் தொடங்கியிருந்தது. நடக்கவே முடியாதிருந்தது. இழுத்து இழுத்து நகர்ந்தான். சதைக்குவியலை அண்மித்தான். குண்டுச் சிதறலால் எழுந்த புழுதியால் மூடப்பட்ட அந்த உருவத்தை சரியாக இனம் காண முடியவில்லை. அதன் உதடுகள் ஏதோ முணுமுணுத்தன.
'அமுதா,! அமுதா'
அது கல்பனாவே தான்!
காயமும், வலியும் அவனுக்கு மறந்து போயின. அவளைத் தூக்கி நிறுத்தி , தோளில் சாய்த்தபடி நடக்கத் தொடங்கினான். "இதற்குத்தானா இத்தனை சண்டை?" சதைக்குவியலைப் பார்த்துச் சொல்லிக் கொண்டே அமுதாவின் கரங்களை இறுகப்பற்றினான். தாய் ஓடி வந்துகொண்டிருப்பது அமுதனுக்கு மங்கலாகத் தெரிந்தது.

**எமது நாடு சுதந்திரநாடு. ஆனால் சமாதானம் கிட்டவில்லலையே. எப்போது சமாதானம் கிட்டும்?**

**அபிராமி, உடுவில்.**

என்ன? எமது நாடு சுதந்திர நாடா? எப்போதிருந்து? எப்போது எல்லா மதத்தவரும் தத்தம் மதம், மொழி தொடர்பான விடயங்களை எவ்வித் தடையுமின்றிப் பின்பற்றும் சுதந்திரத்தை வழங்கிடும் சுதந்திர நாடாகிறதோ, அப்போதுதான் சமாதானம் கிட்டும்.



**என்னை ஒரு பெண் விரும்புகிறாள். என் மனம் வேறு ஒரு பெண்ணை நாடுகிறது. நான் என்ன செய்ய?**

**தீபன், சிறுப்பிட்டி.**

இரு மூக்குத் துவாரங்களினுள்ளும் இரு விரல்களைச் செலுத்திய பின் அவற்றில் ஒன்றைத் தொடச் செய்யும் தமிழர் பாரம் பரிய முறையைப் பின்பற்றுங்கள். அதற்கு முன் உங்கள் மூக்குச்சளியிலிருந்து விரலைத் தொடுபவருக்குக் கொவிட்-19 தொற்றாது என்பதை உறுதிப்படுத் திக் கொள்ளுங்கள்.




**எனது பேனா நண்பி என்னை விரும்புவதாகக் கூறு கின்றாளே! என்ன செய்யலாம்?**

**சாத்வீகன், தெல்லிப்பழை.**


பேனா நட்பு என்றால் உங்களுக்கு பேனாவைப் பற்றித்தான் தெரிந்திருக்கும். ஏனைய விடயங்களையும் ஆராயுங்கள். முக்கியமாக அவள் எத்தனை பேனா வைத்திருக்கிறாள் என்பதையும் தெரிந்து கொண்டு அடுத்த அடியை எடுத்து வையுங்கள்.



**வித்துவான் பதில்கள்**
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
077 316 5555



# தொன்மத்தின் மீதான காமம் :




# தேவகாந்தனின் 'மேகலைகதா'வை முன்வைத்து சில குறிப்புகள்



○ இராகவன்

தொன்மத்தின் மீது தேவகாந்தனுக்கு இருப்பது தீராக் காதலல்ல, தீராக் காமம். தொன்மத்தை மையப்படுத்திய தேவகாந்தனின் புனைகதைகளில் இரு விடயங்கள் அடிப்படையாக இருப்பதனை எடுத்துக் காட்டலாம். முதலில் ஏற்கனவே உள்ள நமக்கும் தெரிந்திருக்கும் தொன்மத்தை முன்வைத்தல். அடுத்தது அந்தத் தொன்மத்துக்கு சமாந்தரமாக இன்னொரு தொன்மத்தை உருவாக்கி இடைபுகுத்துதல். இதைத்தான் "பிறந்தவர் உறுவது பெருகியதுன்பம்" என்ற கருத்தியல் வழியாகச் சமூகத்தில் ஊடு நிகழ்த்துகை (Intervention) அவரால் மேற்கொள்ளப்படுகிறது. அந்த ஊடு நிகழ்த்துகையோடு இணைந்த மீள் வாசிப்பின் கலைப் புனைவாக நாவல் நீண்டுசெல்கிறது. கதை சொல்லல்(Story Telling) கதை இணக்குதல் (Story Making) ஆகிய இருவகை நுட்பங்களிலும் நுண்ணாற்றல் மற்றும் நுண் அனுபவம் கொண்ட தேவகாந்தனின் கதைவிசையுட்டற் செயற்பாடு வாசிப்பை நேர்பட நடத்திச் செல்கின்றது"என பேராசிரியர் சபா.ஜெயராசாகுறிப்பிட்டுள்ளார். இங்கே கதை சொல்லல் என்பது ஏற்கெனவேயுள்ள நமக்குத் தெரிந்திருக்கும் தொன்மத்தை முன்வைத்தலைக் குறிப்பதாகும். இந்தக் கதை சொல்லல் செயற்பாட்டிலும் தேவகாந்தன் எந்தவொருமீறலையும் செய்திருக்கவில்லை. மாறாக கயவாகுமன்னனைப் பற்றியகுறிப்பு, சமந்தகூடம், நாகவழிபாடு, மணிபல்லவம், பூம்புகார் தமிழ்ப் பௌத்தத் துறவிகள், கடலோடிகள்,மணிவியாபாரிகள், பும்புகார் நகரம் என எல்லாவற்றையுமே மூலத் தொன்மத்துக்கு ஒத்திசைவாகவே இயன்றவரை விபரித்துச் சென்றிருக்கிறார். இது கதை சொல்லலில் வாசகனுக்கு இயல்பாவே ஒரு நம்பகத்தன்மையைத் தோற்றுவிக்கின்றது.

கதை இணக்குதல் என்பதுதான் நமக்குத் தெரிந்திருக்கும் தொன்மத்திற்குச் சமாந்தரமாக இன்னொரு தொன்மத்தை உருவாக்கி இடையில் புகுத்துவது. இதிலேஅஞ்சுகன் என்றகதாபாத்திரம் முக்கியத்துவம் பெறுகின்றது. அதனுடன் கோடன்,மாதங்கி,"துறவிதர்மகீர்த்தி, சங்கமின்னாள் போன்ற துணைக் கதாபாத்திரங்களையும் இணைத்து புதுத் தொன்மம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இக்கதாபாத்திரங்களுக்கு இடையே நிகழும் உரையாடல்களின் ஊடாகவும், அஞ்சுகனின் மானசீக உரையாடல் மற்றும் நினைவு கூர்தலின் ஊடாகவும் புனைவின் பெரும்பகுதி நகர்த்தப்படுகிறது. ஏற்கனவே வாசகனுக்குப் பரிச்சயமான தொன்மத்தைவலுப்படுத்தும் போக்கைத்தான் அவதானிக்க முடிகிறது. இங்கே எந்தவொரு குறுக்கீட்டையும் நிகழ்த்துவதற்குத் தேவகாந்தன் எத்தனிக்கவில்லை. தனக்கென்றொரு மொழியை வாலாயப்படுத்திக் கொண்டு சீரான கதியில் முன்னேறிச் செல்கிறார். தேவகாந்தன் இயல்பாகவே நுட்பமாகக் கதைபுனையும் தாடனம் கைவரப்பெற்றவர் என்பதை இதற்கு முன்னைய புதினங்கள் சான்று பகர்கின்றன. ஒரு தடங்கலற்ற இயல்பான கதையோட்டம் இவரது தனித்துவம் எனலாம். இங்கே எடுத்துக் காட்டப்பட வேண்டிய இன்னொரு முக்கிய அம்சம் யாதெனில் தேவகாந்தன் எளிதில் வாசகருக்கு உணர்வுத் தொற்றுதலை ஏற்படுத்தக் கூடிய வகையில் தனதுகதை மாந்தரை உருவாக்கக்கூடிய நுட்பத்தை கையாளக்கூடியவராக இருக்கிறார். இந்தப் புதினத்தில் அஞ்சுகன், கோடன், மாதங்கி, போன்ற கதாமாந்தர்களை இதற்கு எடுத்துக் காட்டாக்கலாம்.

"வெய்யில் மேலேமேலேயெனஏறி இளவேனிலும் சூடு கொள்ளத் தொடங்கியது. பின்னாலே நின்ற ஒரு பெருநிழல் மரத்தின்கீழ் சங்கமின்னாள் சென்றமர்ந்தாள். சிறிதுநேரத்தில் கோமுகித் திசையிலிருந்து வந்து துறவி சங்கமின்னாளின் அருகே அமர்ந்தார்.

வாருங்கள் அடிகளே! என்று வரவேற்றாள் சங்கமின்னாள். பின் அவள் நிமிர்ந்து அவரை வெறிதே பார்த்தாள். அந்த வெறிதும் ஒருகேள்வியையே அர்த்தமாக்கியிருந்தது.

அஞ்சுகனை யாரும் கண்டிருக்கவில்லை. அதுபோலத் தகவலும் கொண்டிருக்கவில்லை. அவன் இல்லாமல்தான் ஆனாலென்ன இனிநாம் நம்பலாம். பௌத்தநெறி கொண்டிராதவன் ஆனாலும் அவன் ஒரு திறன் கொண்டிருந்தான். அவன் மிகச் சிக்கலான தத்துவ விவகாரங்களையும் மிக நுண்மையாக விளங்கிக் கொண்டான். அவன் ஒருபாட்டுளழுதிவிட்டுப் போயிருக்கலாம் என்பதேஎன் துக்கம். சதா இடையில் எழுத்தாணியும் ஏட்டு நறுக்குகளும் கொண்டுஅலைந்தான். அவனுள் அதுபெரியவிருப்பமாய் இருந்தது. ஆகியிருப்பின் காலம் கடந்தும் ஒருநினைவாகஅப்பாட்டில் அவன் நின்றிருப்பான்.. அவனதுநண்பர்கள்கோடனும் மாதாங்கியும்.? அவர்களும் கடல் பொங்கியெழுந்த காலத்தில் புகாரில் இருந்திருப்பர்போல"

இந்தப் பகுதியை வாசித்து முடிக்கும்போது அஞ்சுகன்,கோடன், மாதங்கி, ஆகியோரது இழப்பின் துயரத்தை வாசகன் உணர்வான். ஏனெனில் இந்த மூவரினது கதாபாத்திரங்களையும் தேவகாந்தன் அந்த அளவுக்குச் சிறப்பாக உருவாக்கி வடிவமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் குறிப்பிடத்தக்க இன்னொரு முக்கிய அம்சம் தேவகாந்தனின் மொழிப்புனைவாகும். இவ்விதம் தொன்மங்களை முன்வைத்து எழுதப்படும் புனைவுகளில் கையாளப்படும் மொழியென்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பது இயல்பானதுதான். தேவகாந்தன் இதை நன்குணர்ந்து எழுதுவது வரவேற்கத்தக்கதுதான். அவர் இந்தவகைப் புனைகதைளுக்கான மொழியில் அதீத கவனம் கொள்கிறார். குறிப்பாக தனக்கென ஒரு மொழியைப் புனைவதில் தீவிர கவனம் செலுத்துகிறார். அதுசில இடங்களில் வசீகரிக்கின்றது. சிறப்பாகவுமிருக்கிறது. ஆனால் வேறு சில இடங்களில் செயற்கைத்தனமாகவும், புனைவைமீறித் துருத்திக் கொண்டிருப்பதையும் குறிப்பிட வேண்டியுள்ளது. இவ்விடங்களில் தேவகாந்தன் மொழிப் புனைவைத் தவிர்த்துக் கொள்வதைப் பற்றி மீள் பரிசீலனை செய்வது சிறப்பாக இருக்கும் என்பது எனது தாழ்மையான கருத்து. இது அவரது பலமாக இருக்கும்வரை வரவேற்புக்குரியதாக இருக்கும் . அது பலவீனமாகி விடக்கூடாது.

தொகுத்துநோக்கும்போது "மேகலைகதா" ஒரு சமநிலையோடு எழுதப்பட்டிருக்கின்றது என்பதை அவதானிக்க முடிகின்றது. தொன்மத்தின் மீதான தேவகாந்தனின் தீராக் காமம் தொடர்ந்து இயங்கவேண்டும் என்பதே என் போன்ற வாசகர்களின் பேரவா. ■



ஆர்.லயனல்

# இலங்கைக்கும் 'ஜோ ஜோ!'

இந்திய அணி வீரர்களுக்கு நடைமுறையில் இருக்கும் 'ஜோ ஜோ' உடற்தகுதிப் பரீட்சை போன்று இலங்கை அணி வீரர்களுக்கும் புதிய உடற்தகுதி அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி 8 நிமிடங்கள் 35 செக்கன்களில் 2 கிலோமீற்றர் தூரத்தை இலங்கை வீரர்கள் ஓடிமுடிக்க வேண்டும் என்பதுதான் தற்போது நிர்ண யிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய விதி.

இலங்கை அணிக்குள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களின் ஒருபகுதியாக வீரர்களின் உடற்தகுதி தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நிபந்தனை வரவேற்கத்தக்கதுதான். ஆனால் இது முழுமையாகப் பின்பற்றப்படுமா என்பதுதான் தற்போதுள்ள கேள்வி.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற அந்த அணிக்கு எதிரான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட தொடரிலும் சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கு எதிராகவும் இலங்கை அணி படுதோல்வியைச் சந்தித்தது. இந்தத் தொடர்களில் இலங்கை வீரர்களின் உடற்தகுதி மீது பெருமளவு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக தென்னாபிரிக்கத் தொடரில் ஏராளமான வீரர்கள் காயமடைந்தனர். இதை 'இனி நானும் ஏனைய பயிற்சியாளர் குழாமும்தான் களமிறங்க வேண்டும்' என்று இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர்கூட விமர்சித்திருந்தார். இந்த நிலையில் இவ்வாறானதொரு பின்னணியில் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் திட்டம் வரவேற்கப்படக்கூடியதுதான்.

இருந்தாலும், இந்த உடற்தகுதியை நிரூபிப்பதற்கான தகுதிகாண் நடைமுறையாலேயே பாதி வீரர்கள் காயமடையக் கூடியவர்களாக உள்ளனர் என்பதுதான் கசப்பான உண்மை. அதாவது குளிக்கப்போய் சேறுபூசியது போன்றதான நிலை இது. குறிப்பாக காயத்துக்கும் உபாதைகளுக்கும் பெயர்போன மத்தியூஸ் உள்ளிட்டவர்களுக்கு இந்தப் பரீட்சைகள் சிம்மசொப்பனமாகத்தான் இருக்கப்போகின்றன. சில வேளைகளில் மூத்த வீரர்களுக்கு இதில் விலக்கு வழங்கப்படவும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. அல்லது இந்தப் புதிய திட்டம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டாலும் அதில் ஆச்சரியத்துக்கு ஒன்றுமில்லை.

விளையாட்டு

## மன்னித்துவிடுங்கள் மரியா!!

**'கண்ணாடியைத் திருப்பினால் ஓட்டோ ஓடுமா ?...'**



ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனையான மரிய செரபோவாவிடம் மன்னிப்புக் கேட்டுள்ள இந்தியர்கள் பலர், அவர் கேரளாவுக்கு வரவேண்டும், கர்நாடகாவுக்கு வரவேண்டும் என்று போட்டிபோட்டு அழைப்பு விடுக்கிறார்களாம்.

இந்திய மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள வேளாண் சட்டங்களை எதிர்த்து இந்திய விவசாயிகள் டெல்லியில் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டத்துக்கு இந்தியாவுக்கு வெளியிலும் பெரும் ஆதரவு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அண்மையில் ருவிற்றரில் கருத்துத் தெரிவித்திருந்த சச்சின், 'இந்தியாவுக்குள் நாம் விடயத்தைப் பேசிக்கொள்ளலாம். இந்திய இறையாண்மையை கேள்விக்கு உட்படுத்தும் விதமாக வெளியாள்கள் கருத்துத் தெரிவிக்க முடியாது. வெளிநாடுகள், வெளியாள்கள் பார்வையாளர்கள் மட்டுமே' என்றார்.

சச்சினின் இந்தக் கருத்தால் கொதிப்படைந்துள்ள இந்தியர்கள் பலர், 'சச்சின் ஒரு நல்ல வீரர், ஆனால் நல்ல மனிதரல்ல. சச்சினைத் தெரியாது என்று 2015ஆம் ஆண்டு செரபோவா தெரிவித்தது சரிதான். அன்று சச்சினுக்கு ஆதரவாக உங்களை விமர்சித்தமைக்காக மன்னித்துவிடுங்கள் மரியா' என்று சமூக வலைத்தளங்களில் கருத்திடுகின்றனராம்.

**' நாயின் வேலையை கழுதை பார்த்தால் சச்சினாவது...கிச்சினாவது'**

# சரிந்த விம்பம்



ஆர்.பிரகாஷ்

21 ஆண்டுகள் வீட்டுக்காவலில் முடக்கப்பட்டிருந்த போதிலும், தளராத போராட்டத்தை மேற்கொண்டு மியான்மரில் ஜனநாயக ஒளியைப் பாய்ச்சிய ஆங் சான் சூச்சியின் ஆட்சி தற்போது மீண்டும் இராணுவ இருளால் சூழப்பட்டுள்ளது.

மியான்மர் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஆட்சி, இராணுவத்தால் கலைக்கப்பட்டு சூச்சி மீண்டும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். அடுத்த ஓர் ஆண்டுக்கு மியான்மரில் அவசர நிலையும் அறிவிக்கப்பட்டுள்ளது. இனி மீண்டும் 'சர்வமும் இராணுவம்' என்ற சிந்தாந்தத்துக்குள் நகரப்போகின்றது மியான்மர்.

ஆனால் 2014 ஆம் ஆண்டுக்கு முன்னர் மியான்மரிலும், மியான்மருக்கு வெளியிலும் சூச்சிக்கு இருந்த ஆதரவு அலையை இம்முறை எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் உலகின் பெரும் ஜனநாயக வாதியாக ஒருகாலத்தில் அடையாளப்படுத்தப்பட்ட சூச்சியின் ஆட்சியில்தான், மியான்மர் வரலாற்றின் மோசமான இனச்சுத்திகரிப்பு இடம்பெற்றது.

2017ஆம் ஆண்டு 7 லட்சத்து 40 ஆயிரம் ரொஹிங்யர்கள் அகதிகளாக மியான்மரை விட்டு வெளியேற்றப்பட்டதில் சூச்சியின் பங்கு மிகப்பெரியது.

ரொஹிங்கிய முஸ்லிம்களின் விவகாரத்தை அவர் உலக அமைதிக்கான நோபல் பரிசிலை வென்ற 'ஓர் உன்னத தலைவர்' என்ற மனநிலையில் இருந்து அணுகவில்லை. 7.4 லட்சம் ரொஹிங்யர்களின் இடப்பெயர்வுக்கு உரிய காத்திரமான நகர்வை அவர் முன்னெடுக்கவில்லை. நோபல் பரிசை வென்ற பொறுப்புணர்வுடன் கூடிய உலகத் தலைவராகச் செயற்படாமல் பௌத்த சித்தாந்தங்களுடன் வரையறுக்கப்பட்ட மியான்மர் தலைவராகத்தான் சூச்சி நடந்துகொண்டார். இன்னும் சொல்லப்போனால் ரொஹிங்யர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை சூச்சி ஆதரித்தார். சர்வதேச ரீதியில் அத்தகைய இராணுவ அடக்குமுறைகளுக்கு , புனித முலாம் பூசவும் முற்பட்டு மூக்குடைபட்டார். எப்பாடுபட்டாவது, இராணுவத்துக்கு தாளம் போட்டேனும் ஆட்சியதிகாரத்தைத் தக்கவைப்பதே சூச்சிக்கு முதன்மையாகப்பட்டது.

கடந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் சூச்சி தரப்பு மீண்டும் ஆட்சியைப் பிடித்தது. ஆனால், எந்த இராணுவத்தை சூச்சி ஆதரித்தாரோ அதே இராணுவம்தான் தற்போது சூச்சியின் ஆட்சிக்கு முடிவும் கட்டியிருக்கின்றது என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

இந்த இராணுவ ஆட்சியால் மியான்மரில் புதிதாகப் பெரும் மாற்றங்களும் சர்வாதிகாரச் சிந்தாந்தங்களும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. 7.4 லட்சம் ரொஹிங்யர்கள் இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்டதை விடவா அராஜகம் நிகழ்ந்துவிடப் போகின்றது? சூச்சி செய்தது பிரகடனப்படுத்தப்படாத இராணுவ ஆட்சி. தற்போது அந்த நாட்டு இராணுவம் செய்வது 'நன்கு கட்டமைக்கப்பட்ட பிரகடனப்படுத்தப்பட்ட இராணுவ ஆட்சி'.

ஆக, இங்கே சூச்சியை எண்ணி வருத்தப்பட ஒன்றுமில்லை. மாறாக மியான்மர் மக்களின் விருப்பங்கள் சவக்கிடங்குக்குள் தள்ளப்பட்டிருக்கின்றன . அவர்கள் தெரிவுசெய்த அரசு ,துப்பாக்கி முனைகளில் அகற்றப்பட்டிருக்கின்றது. இராணுவச் சிந்தாந்தங்கள் மியன்மாருக்குப் புதிதல்ல. நாடாளுமன்றத்தில்கூட குறிப்பிடத்தக்க ஒதுக்கீடுகளை இராணுவத்துக்கு வழங்கும் நாடு அது. ஆனால், மியான்மர் முழுமையான மக்களாட்சிக்குள்ளும் ஜனநாயக ஓட்டத்துக்குள்ளும் திரும்ப வேண்டும் என்பதுதான் உலக மக்களின் வேணவா.

இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டமைக்கு எதிராக அமெரிக்காவும் ஐக்கிய நாடுகள் சபையும் மேற்கத்தேய நாடுகளும் வெளிப்படுத்தியுள்ள கடும் எதிர்ப்புக்கள் மியான்மர் மீண்டும் தகாத எதிர்விளைவுகளை எதிர்கொள்ளப் போகின்றது என்பதைத்தான் காட்டுகின்றன. எனவே மக்களாட்சிக்கு மதிப்பளித்து மியான்மர் இராணுவம் செயற்பட வேண்டும். அதுவே காலத்தின் தேவையுமாகும். ஏனெனில் 2014களில் இடம்பெற்றதைப்போன்று இன்னுமொரு மக்கள் போராட்டத்தையும் கிளர்ச்சியையும் மியான்மர் தாங்காது.